விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது ——— Valampurii ———

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 05 ஞாயிற்றுக்கிழமை (18.04.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 120

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

## வடக்கில் பௌத்த மத மரபுகளை கட்டியெழுப்ப ஹெல உறுமய முயற்சி

### ★ தமிழர்கள் விகாரைகளிலேயே வழிபட்டனராம் ★

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்கள் தமிழர்களின் பூர்வீகம் என்பதற்கான போதுமான வரலாற்றுச் சான்றுகள் கிடையாது.

ஆனால் அப் பிரதேசங்களில் பௌத்த மக்கள் வாழ்ந்ததற்கான பௌதிக தடயங்கள் தொல்பொருள் ஆய்வுகளின் மூலம் கண்டெடுக்கப்பட்டுள்ளன என ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

புலிகளின் காலப் பகுதியில் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் காணப்பட்ட பௌத்த மரபு நிலைகள் யாவும் திட்டமிட்டு அழிக்கப்பட்டுள்ளன.

எனவே வடக்கில் அழிக்கப்பட்ட பௌத்த மரபுரிமைகளை மீண்டும் கட்டியெழுப்ப அரசாங்கம் நடவ (19 ஆம் பக்கம் பார்க்க)

## தனித்திருந்த யுவதி தாக்கப்பட்டுக் கொலை

(யாழ்ப்பாணம்)

வீட்டில் தனித்திருந்த யுவதி மீது இனந் தெரியாதோர் மேற்கொண்ட தாக்குதலில் அவர் உயிரிழந்தார். இச் சம்பவம் நேற்றிரவு அச்சுவேலி தெற்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இத் தாக்குதலில் அதேயிடத்தைச் சேர்ந்த தபீந்திரதாஸ் கலைச்செல்வி (வயது-25) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவிலிருந்து வந்த உறவினர்களைப் பார்ப் (19 ஆம் பக்கம் பார்க்க)

# சிகிச்சைக்காகச் சென்னைக்குச் சென்ற பிரபாவின் தாயாருக்கு அனுமதி மறுப்பு

## விமான நிலையத்தில் வைத்துத் திருப்பப்பட்டார்



(சென்னை)

விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் தாயார் வேலுப்பிள்ளை பார்வதிஅம்மாள் மருத்துவ சிகிச்சையின் பொருட்டு மலேசியாவிலிருந்து சென்னைக்குச் சென்றபோது விமான நிலையத்தில் வைத்து திருப்பியனுப்பப்பட்டார்.

சென்னை விமான நிலையத்திலிருந்து குடிவரவு-குடியகல்வு அதிகாரிகளினால் சென்னைக்குள் நுழைய விடாமல் தடுக்கப்பட்டு அவர் மீண்டும் மலேசியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டார். (19 ஆம் பக்கம் பார்க்க)

## விபத்துச் சம்பவத்தில் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வல்லை முனியப்பர் கோவில் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற மோட்டார் சைக்கிளும் (19 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையுடனான உறவினை வலுப்படுத்த நோர்வே விருப்பம்

(கொழும்பு)

இலங்கையுடனான புதிய உறவினை வலுப்படுத்துவதற்கு நோர்வே அரசாங்கம் விரும்புவதாக அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நோர்வே அரசாங்கமானது இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதான உடன்படிக்கைக் காலத்தில் அனுசரணையாளராகச் செயற்பட்டு வந்தது.

இக் காலப் பகுதியில் நோர்வே அரசின் அமைச்சராக இருந்த எரிக் சொல்ஹெய்ம் அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையில் அனுசரணையாளராகச் செயற்பட (19 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் வன்முறை கிழக்கில் விசாரணை

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தல் காலப் பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட விசேட உயர்மட்ட பொலிஸ் ஆணைக் குழு நேற்றுத் தனது விசாரணைகளை (19 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச வர்த்தகக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி-2010 இன்று ஆரம்பமாகின்றது. இச் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி இன்று தொடக்கம் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் கண்காட்சியை இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்த் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைப்பார்.

இந்தியா, மலேசியா மற்றும் இலங்கையைச் சேர்ந்த முன்னணி கைத்தொழில் இயந்திர சாதனங்களின் உற்பத்தி மற்றும் வர்த்தக நிறுவ (19 ஆம் பக்கம் பார்க்க)

## ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் அமைச்சர்கள் தெரிவு செய்யப்படுவர்

### ★ கட்சிச் செயலாளர் நம்பிக்கை ★

(கொழும்பு)

ஒவ்வொரு மாவட்டத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமைச்சரவை அமைச்சுப் பதவி வழங்கப்படலாம் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.

அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையை குறைக்கும் அரசாங்கத்தின் முயற்சிக்கு எமது கூட்ட (20 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையின் முதற் தர SINGER தொலைக்காட்சிகள்

தற்போது விசேட சலுகைகளுடன் யாழ் மக்களுக்காக

www.singersl.com

எந்த மாதிரியிலுமாலான உங்கள் பழைய தொலைக்காட்சிக்கு விலைக்கழிவுடன் புத்தம் புதிய தொலைக்காட்சி

விசேட விலைக்கழிவு

திருப்தி இன்றேல் பணத்தினை மீளப்பெறும் வாய்ப்பு

கிளைகள்: யாழ்ப்பாணம் | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி

SINGER Plus
MORE BRANDS-MORE CHOICE
யாழ் மண்ணின் பாரம்பரைத் தோழன்

(C-4172)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பேசும் படம்



ஆபத்தான விளையாட்டு (காக்கைதீவில்)

# 'மாதா' சிங்கள திரைப்பட மூலப்பிரதி சேமிக்கப்பட்டிருந்த 'ஹார்ட் டிஸ்க்' திருட்டு

(கொழும்பு)

இலங்கையில் இடம் பெற்ற போர் தொடர்பாக பிரபல சிங்கள திரைப்பட இயக்குநர் புத்தி கீர்த்திசேன தயாரித்துள்ள மாதா திரைப் படத்தின் மூலப் பிரதிகள் சேமிக்கப்பட்டிருந்த மூன்று கணனி வன்பொருள்கள் (ஹார்ட் டிஸ்க்) களவாடப்பட்டுள்ளதாக மிரிஹான பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


நாவல சரசவி உத்தியான வீதியில் உள்ள திரைப்பட தயாரிப்பு நிறுவனத்தில் வைக்கப் பட்டிருந்த நிலையில் இந்த மூலப் பிரதிகள் திருடப்பட்டுள்ளன.

நிறுவனத்தின் குளியல் அறையூடாக பிரவேசித்த எவரோ,திரைப்பட பிரதிகளை களவாடிச் சென்றுள்ளதாக பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியோடு தயாரிக்கப்பட்டுள்ள இந்த திரைப்படத்தில் யாழ்தேவி தொடருந்து தீவைக்கப்பட்டது முதல் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மரணம் வரை இடம்பெற்றச் சம்பவங்கள் பற்றிய காட்சிகள் அடங்கியுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது என பொலிஸார் கூறியுள்ளனர்.

ஏப்ரல் 12ஆம், 15ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் நடைபெற்றதாக கூறப்படும் இந்த திருட்டுச் சம்பவம் குறித்து மிரிஹான பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-5)

## மகோற்சவம்



அளவெட்டி அழகொல்லை விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

11 நாட்கள் நடைபெறவுள்ள மேற்படி மகோற்சவத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி தேர்த்திருவிழா நிகழ்வும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ச)

## ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளராக கமல் நியமனம்

ஈழமக்கள்ஜனநாயகக்கட்சியின்யாழ்.மாவட்ட அமைப்பாளராக, தீவக அமைப்பாளராக கடமையாற்றிய கமல் (கந்தசாமி கமலேந்திரன்) நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் யாழ். மாவட்ட அமைப்பாளராக இருந்த உதயன் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டதைத்தொடர்ந்து தீவக வலய அமைப்பாளராக இருந்த கமல் ஈ.பி.டி.பி. கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளராக கட்சியின் செயலாளர் நாயகம் கே.என்.டக்ளஸ்தேவானந்தாவால் கடந்த 11ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளார். (ச-7)

# அவுஸ்திரேலியாவின் கொள்கைகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை கடும் அதிருப்தி

(கொழும்பு)

இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அகதிகள் தொடர்பில் அவுஸ்திரேலியா அறிமுகப்படுத்தியுள்ள புதிய நடைமுறைகளுக்கு ஐக்கிய நாடுகள் அமைப்பு கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய சட்டம் போதிய தெளிவின்றி காணப்படுவதாக ஐக்கிய நாடுகளுக்கான அகதிகள் முகவர் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

சரியான வழிகாட்டல்களோ அல்லது நியாயமான காரணிகளோ இன்றி இந்த சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

ஆப்கானிஸ்தான் மற்றும் இலங்கை அகதிகள் தொடர்பில் அவுஸ்திரேலியா புதிய சட்டத்தை அறிவித்ததன் பின்னர் 5 படகுப் பயணிகள் சட்டவிரோதமான முறையில் கடற்பரப்பை சென்றடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் நியாயமான காரணங்களுக்காக அடைக்கலம் கோருவோருக்கு மட்டுமே அவுஸ்திரேலியா புகலிடம் வழங்கும் என அறிவித்துள்ளது.

இறுதியாக அவுஸ்திரேலியாவில் தரையிறங்கியுள்ள சட்டவிரோத குடியேறிகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு கரையோரப் பாதுகாப்பு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை தமிழ் அகதிகளுக்கு புகலிடம் வழங்குவதனை தற்காலிகமாக இடை நிறுத்துவது தொடர்பில் அவுஸ்திரேலியா முன்வைத்த காரணிகள் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என டென்மார்க் அறிவித்துள்ளது.

குறிப்பாக ஏனைய சில நாடுகளும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு அடைக்கலம் வழங்குவதனை நிறுத்திக் கொண்டுள்ளதாக அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஸ்டிவன் ஸ்மித் மற்றும் குடிவரவு அமைச்சர் கிறிஸ் ஏவன்ஸ் ஆகியோர் வெளியிட்டுள்ள கருத்து ஏற்புடையதல்ல எனவும் டென்மார்க் சுட்டிக்காட்டியுள்ளது. (ச-5)


## மரண அறிவித்தல்

# பரஞ்சோதி சிவநேசன்

(ஆசிரியர், மல்வானை முஸ்லிம் மகா வித்தியாலயம்)



காரைநகர் பலகாட்டை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பரஞ்சோதி சிவநேசன் (17.04.2010) சனிக்கிழமை அன்று அகாலமரணமானார்.

அன்னார் பரஞ்சோதி (உரிமையாளர், கணபதி ஸ்ரோர்), கற்பகவல்லி ஆகியோரின் கனிஷ்ட புதல்வனும் சிவப்பிரியாவின் அன்புக் கணவரும் சஞ்சயனின் பாசமிகு தந்தையும், விக்னேஸ்வரன் (கனடா), நாகேஸ்வரி (கனடா), சிவபாலன் (பொறியியலாளர்-சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும்,

தவரத்தினம் (M.K.S. நாவலப்பிட்டி), சரசுவதி (நாவலப்பிட்டி) ஆகியோரின் மருமகனும், சிவமதி, சிறிவர்ணசூர்யா, யோகலட்சுமி, தவமலர், சிவராசா, சிவரஞ்சன் ஆகியோரின் மைத்துனரும் நந்தகுமாரின் (நாவலப்பிட்டி) சகலனும் பிரவீன், தர்சிகா, நர்மதா ஆகியோரின் சிறிய தந்தையும், அனுஷா, மிதுனா, மிதுஷா, யதுஷா, பிரசாத், ஹரணி, ஹரிதா, சயந்தினி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற காசிநாதன் மற்றும் கந்தசாமி (உரிமையாளர், காந்தன் களஞ்சியம்), யோகேஸ்வரி, விசயலட்சுமி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 18.04.2010 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

99/6, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0774228933

தகவல்:
குடும்பத்தினர்
மனைவி, பிள்ளை,
தகப்பன் க.பரஞ்சோதி.

(1205)



## வேலை ஆட்கள் உடன் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல்யமான புடைவை வியாபார நிலையத்துக்கு அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. மேலும் அனுபவமுள்ள கணக்காளரும் (ஆண்) தேவை.

யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

உடன் தொடர்பு கொள்ளவும்:
077 4661237, 0773321700

(1207)








## மணப்பெண் தேவை

யாழ். இந்து உயர்குலம் 08.10.1980 இல் பிறந்தவரும் அத்தம் நட்சத்திரம் உள்ளவரும் மிக விரைவில் U.K PR கிடைக்க உள்ளது. Student Visa வில் வந்து திருமணம் செய்து கொள்ளும் மணப் பெண்களும் தொடர்பு கொள்ளலாம். வர்த்தகத்துறை ஒன்றில் ஈடுபடுகின்றார். தகுந்த மணப் பெண்ணை எதிர்பார்க்கின்றார்.

தொடர்பு: 0044 7404120188 (U.K)

(1200)



## காணி விற்பனைக்கு

வேம்படி வீதியும் 1ஆம் குறுக்கு வீதியும் இருவழி பாதையில் அமைந்துள்ள 2 3/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு: 0726514451
021 222 2284

(1187)



## ஐங்கரன் திருமண சேவை

### மணமகள் தேவை

எங்களிடம் யாழ். இந்து உயர்குலம் U.K Citizen 28 வயது , 32 வயது, 35 வயது, Canada Citizen 33 வயது, 37 வயது, 40 வயது , Swiss Citizen 28 வயது, 30 வயது, Australia Citizen 34 வயது ஆகிய மண மகன்மார் உள்ளனர். தகுந்த மணமகள்மாரை எதிர்பார்க்கின்றனர். 24 மணிநேர தொலைபேசி வசதி உண்டு. பதிவுக் கட்டணம் எதுவும் இல்லை.

தொடர்பு : லண்டன் ஐங்கரன்
T.P No. 0044 7535384166
0044 7508295863
Fax No: 0044 2086720673
E-mail: ayngaran23@yahoo.com

(1201)

### மணமகன் தேவை

எங்களிடம் யாழ். இந்து உயர்குலம் U.K Citizen 29 வயது (B.Sc) , 31 வயது (B.Com), 32 வயது (M.Sc), 35 வயது (I.T. Engineer), Canada Citizen 27 வயது, 30 வயது (R.C), 33 வயது Bank (Account), France Citizen 29வயது, Finland 28 வயது ஆகிய மண மகள்மார் உள்ளனர். தகுந்த மணமகன்மாரை எதிர்பார்க்கின்றனர். 24 மணிநேர தொலைபேசி வசதி உண்டு. பதிவுக் கட்டணம் எதுவும் இல்லை.

தொடர்பு : லண்டன் ஐங்கரன்
T.P No. 0044 7535384166
0044 7508295863
Fax No: 0044 2086720673
E-mail: ayngaran23@yahoo.com

(1202)



## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம்

### மீண்டும் யாழில்

17.04.2010 முதல் 25.04.2010 வரை மட்டுமே இருப்பார்.
பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.
பதிவுக் கட்டணம் ரூபா: 250/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம்.நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு.ஆஸ்துமா ,மாதவிடாய்க் கோளாறுகள் ,வெள்ளை போடுதல், குழந்தைப் பேறின்மை ,வாதநோய், தலையிடி ,பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு ,கல்வியில் நாட்டம் குன்றிப் பயம் ,நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

Sexuel Disorders (ஆண்மை சக்தி குறைவு )(பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.


மானிப்பாய் வீதியிலிருந்து 'செல்வ மாளிகை'
(பழைய வலம்புரி காரியாலயம்)
இல.15 ,வெள்ளாந்தெரு ,யாழ்ப்பாணம் .
T.P.: 0719315664 , 0777569205

(சி-120)



இந்தியாவில் தயாரிக்கப்பட்ட
ISO சான்றிதழ் பெற்ற
SONA Sanitary ware
5 வருட கால உத்தரவாதத்துடன்
(Condition apply)
மலேசியா PAKAI தயாரிப்பான Seat Cover,
Fittings மற்றும் மலேசியா தயாரிப்பான
AUTO CISTERN உடன்

- 30 வருட கால அனுபவமுடைய மலேசியா தயாரிப்பான PowerLux Hot Water Shower
- 2 வருட கால உத்தரவாதத்துடன் (Condition apply) மலேசியாவில் தயாரிக்கப்பட்ட ISO சான்றிதழ் பெற்ற Pakai Seat Cover - Heavy & Medium
- Bidet Spray 1 வருட உத்தரவாதம் (Condition apply)





Brass C.P. fittings உடன் taps 3 வருட உத்தரவாதம் (Condition apply)
CISTERN இணைப்புக்கள் மற்றும் சகல உதிரிப்பாகங்களும் கிடைக்கும்.

JAFFNA International 2010 TRADE FAIR

எமது A 145 இலக்க காட்சியறைக்கு விஜயம் செய்யுங்கள்

**Krisho Multi Trades (Pvt) Ltd.**
62A, K. Cyril C. Perera Mawatha, Colombo 13.
Tel: 112342874, 4616616 Fax: 112433159
E mails: krisho@eureka.lk pbilnt@sltnet.lk
வடமாகாண விசாரணைகளுக்கு திரு. பாலசுப்பிரமணியம்
தாவடிச் சந்தி, கோண்டாவில், தொ.பே :- 0722449312

---

# "Your Gateway to Yarlpanam"

அனைவரையும் அழைக்கிறோம்

JAFFNA International 2010 TRADE FAIR

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை 2010

2010 ஏப்பிரல் 18 முதல் 20 வரை



சித்தாரா மற்றும் பிரபல கலைஞர்களின் இசை நிகழ்ச்சி
நவநாகரிகக் காட்சி / கைத்தொழில் கருத்தரங்குகள்
முதலீட்டு அரங்கம் / விசேட உணவுகள், குடிபானங்கள் முதலியன

ORGANISED BY: LEO Lanka Exhibition
FOR INFORMATION CONTACT:
www.saexhibitions.com/jitf
IN ASSOCIATION WITH | JOINTLY ORGANISED BY | SUPPORTED BY | SPONSOR
PARTNER COUNTRY INDIA | OFFICIAL PRINT MEDIA | OFFICIAL RADIO | Sri Lanka Telecom Mobitel

---

யாழ்ப்பாண விவசாய உற்பத்திப் பொருட்களிலான அரிசி மா, உழுத்தம் மா, குரக்கன் மா, மிளகாய்த்தூள் உட்பட பனம் பொருள் உற்பத்திகளான ஒடியல் மா, புளுக்கொடியல் மா மற்றும் கோப்பி ஆகிய அதி நவீன முறையில் பொதி செய்யப்பட்ட தரமான உற்பத்திகளைப் பெற்றுக்கொள்ள,
இன்று முதல் மூன்று தினங்கள்
யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறும்

JAFFNA International 2010 TRADE FAIR
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை 2010


எமது A 109 இலக்க காட்சியறைக்கு விஜயம் செய்யுங்கள்.

அருந்துங்கள்
**அண்ணா**
கோப்பி




மக்களுக்குத் தெரியும் 50 வருடத்திற்கு மேலான எமது சேவையின் தரம் பற்றி

வளரும் குழந்தைகளுக்கு
**ஜீவாகாரம்**




அண்ணா தொழிலகம், இணுவில்.

# நாவலப்பிட்டியில் சுதந்திரமான முறையில் வாக்களிக்க முடியாத நிலை நிலவுகிறது

## எஸ்.பி. திஸாநாயக்க

(கொழும்பு)

சுதந்திரமான முறையில் தங்களுக்கு விரும்பியவருக்கு வாக்களிக்க முடியாத நிலைமையொன்று நாவலப்பிட்டியில் காணப்படுவதாக ஆளும் கட்சி வேட்பாளர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொல்கஹாங்க ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ரணில்த மங்களத ஹக்கீம் மற்றும் மனோ கணேசன் ஆகியோர் மக்களுக்கு சொன்ன கட்டுக்கதைகளை மக்கள் நிராகரித்துள்ளதாக தெரிவித்த அவர் நாட்டு மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு அண்மித்த வாக்குகளை அரசாங்கத்திற்கு வழங்கியுள்ளனர் எனவும் தமிழ் மக்கள் ஏற்கனவே தமக்கு ஆதரவளித்துள்ளதாகவும் பிரிவினைவாதத்திற்கு எதிராக இந்த ஆதரவினைப் பயன்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.



விகாரமடைந்த மன நிலையுடைய சிலரினால் மேற்கொள்ளப்படும் நாகரீகமற்ற செயல்களினால் முழு கட்சிக்குமே களங்கம் ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

விருப்பு வாக்குகளை பெற்றுக் கொள்ளும் பேராசையில் சில ஆளும் கட்சி உறுப்பினர்கள் மோசமான செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும் இவ்வாறான நடவடிக்கைகளினால் தாம் வெட்கப்படுவதாகவும் வேதனையடைவதாகவும் தெரிவித்துள்ளார். (2-6)

# நாவலப்பிட்டி, கும்புறுப்பிட்டி பகுதியில் பொலிஸ் முப்படைகளின் பாதுகாப்பு

(கொழும்பு)

நாவலப்பிட்டி மற்றும் கும்புறுப்பிட்டிய தேர்தல் தொகுதிகளில் எதிர்வரும் 20 ஆம் திகதி நடத்தப்படவிருக்கும் மீள்வாக்களிப்பில் கண்காணிப்புப் பணிகளை தீவிரப்படுத்த நடவடிக்கை எடுத்திருப்பதாக சுதந்திர தேர்தல் கண் காணிப்பு அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

உள்நாட்டைச் சேர்ந்த சுமார் 150 இற்கும் மேற்பட்ட கண்காணிப்பாளர்கள் இவ்விரு தேர்தல் தொகுதிகளிலுமுள்ள 38 வாக்குச் சாவடிகளிலும் கடுமையான கண்காணிப்புப் பணிகளை முன்னெடுக்கவிருப்பதாக பப்ரல் மற்றும் கபே அமைப்புக்களின் பிரதிநிதிகள் கூறினர்.

பாராளுமன்றத் தேர்தல்கள் தினத்தன்று மேற்படி தேர்தல் தொகுதிகளில் மோசடி இடம்பெற்றமை காரணமாக வாக்களிப்பு இரத்துச் செய்யப்பட்டு எதிர்வரும் 20 ஆம் திகதி மீள் வாக்களிப்பை நடாத்த தேர்தல்கள் ஆணையாளரால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மீள்வாக்களிப்பு நடத்தப்படவிருக்கும் 38 வாக்காளர் பிரிவுகளுக்குமென 50 கண்காணிப்பாளர்களை பணியில் ஈடுபடுத்த பப்ரல் அமைப்பு தீர்மானித்திருப்பதாக அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி கூறினார். (6)

# சாவகச்சேரியில் வயர் தொடுகை மூல தொலைபேசி இணைப்புக்கள்

சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் வயர் தொடுகை மூலமான இணைப்புக்களை சாவகச்சேரித மானிப்பாய்த சித்தங்கேணி பகுதிகளுக்கும் விரிவுபடுத்தியுள்ளனர்.

இதன் ஒரு கட்டமாக இப்பகுதிகளில் பரிவர்த்தனை நிலையங்களை அமைத்து 600 வயர் தொடுகை மூலமான தொலைபேசி இணைப்புக்களை முதல்கட்டமாக வழங்கி வருகின்றனர்.

இதன்படி சாவகச்சேரி பகுதியில் 300 இணைப்புக்களும்த மானிப்பாய் பகுதியில் 100 இணைப்புக்களும்த சித்தன்கேணி பகுதியில் 200 இணைப்புக்களும் வழங்கப்படவுள்ளதாக சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ் இணைப்புக்கள் வழங்கி முடிக்கப்பட்டதும் மேலும் ஒரு தொகுதி இணைப்புக்களை தொலைபேசி பாவனையாளருக்கு தாம் வழங்க இருப்பதாகவும் நிறுவனத்தினர் அறியத் தருகின்றனர். (2-22)

# படையினரும், மக்கள் பிரதிநிதிகளும் சந்திப்பு

(வேலணை)

வேலணை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கும் தீவக கடற்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்குமிடையில் நல்லெண்ண சந்திப்பொன்று வேலணை பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்றது.

இதில் தீவக கடற்படை கட்டளை அதிகாரி அஜித் அமரசிங்க மற்றும் ஊர்காவற்றுறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் லலித் பிரேமரத்தின மற்றும் அரச படையினரும் அரச அலுவலர்கள்த கிராம அலுவலர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டு மக்களின் குறை நிறைகளையும் படையினரின் ஒத்துழைப்பு மக்களுக்கு கிடைக்கும் என்ற பல்வேறு விடயங்களையும் ஆராய்ந்து கலந்துரையாடினார்கள். (2-22)

# வவுனியாவில் தங்க நகைகளை அதிகம் கொள்வனவு செய்யும் சிங்கள மக்கள்

(யாழ்ப்பாணம்)

வவுனியா நகர் பகுதியிலுள்ள நகைக் கடைகளில் முன்னர் எப்போதும் இல்லாதளவுக்கு சிங்கள மக்கள் தமக்குரிய தங்க நகைகளை கொள்வனவு செய்கின்றனர் என இவ் வருடம் (சித்திரை) நகை விற்பனை வவுனியாவில் களை கட்டியுள்ளதாக அப்பகுதி நகை வாணிபத்துடன் தொடர்புடையோர் கூறுகின்றனர்.

தமிழர்களிலும் பார்க்க சிங்களவர்களே நகைகளை கொள்வனவு செய்கின்றனராம். குறிப்பாக படைவீரர்களே கூடுதலாக நகைக் கடைகளுக்கு வந்து கொள்வனவு செய்வதாக அறியப்படுகின்றது. (2-22)


# ஜயசர

காட்சியறை B 45

யாழ். மத்திய கல்லூரியில் காணத் தவறாதீர்கள்.

18 APRIL 20 வரை மட்டுமே





காஸ் அவண்,
கேக் கலவை இயந்திரம்
ஆழ்நிலை எண்ணெய் பாத்திரம்,
வெங்காயம் வெட்டும் இயந்திரம்
பொம்பாய் முட்டாய் இயந்திரம்
மா கலவை,
பொப் கோர்ன் இயந்திரம்
காஸ் ரைஸ் குக்கர்,
இறைச்சி அரைவை இயந்திரம்
கூல்ட்ரிங்ஸ் டிஸ்பென்சர்
உள்ளிட்ட தெரிவு செய்த
ஏராளம் உபகரணங்கள்.



விற்பனைக்கு பிந்திய சேவை உத்தரவாதம் உண்டு

பேக்கரி, கேட்டரிங், ஹோட்டல் உபகரணங்களை இறக்குமதி செய்து விநியோகிப்போர்

(தி-119)

79, வேல்ஸ் குமார மாவத்தை, கொழும்பு-14.
தொ.பே: 0112336401 ,0777514112


# காலி மாவட்டத்தில் தோல்வியடைந்த ஐ.தே.கட்சியின் வஜிர அபேவர்தன அரசுடன் இணைந்து கொள்வாரா?

(கொழும்பு)

காலி மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு தோல்வியடைந்த வேட்பாளர் வஜிர அபேவர்தன தன்னுடைய இறுதி முடிவை அடுத்த வாரம் எடுக்கவுள்ளார் என இணையத் தளமொன்றுக்கு தெரி வித்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான அவர் அரசாங்கத்துடன் இணைந்து கொள்வாரா என வினவிய போதே தான் எந்தக்கருத்தையும் ஊடகத்துக்கு தற்போது கூற முடியாது என்றும் அடுத்த வாரம் முடிவுகள் தெரியவரும் என்றும் அவர் பதிலளித்தார்.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி தனக்கு வழங்கப்பட வேண்டும் என வஜிர அபேவர்தன கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-6)

### வாழைச்சேனையில்

## கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஐவர் கைது

(கொழும்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேசத்தில் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பிரதேச வீடொன்றினுள் புகுந்த கொள்ளையர்கள் வீட்டிற்கு சேதம் விளைவித்துள்ளதுடன் எட்டு இலட்சத்து 50ஆயிரம் ரூபாய் பெறுமதியான தங்க ஆபரணங்களையும் 39 இலட்சம் ரூபாய் பெறுமதியான பணத்தையும் கொள்ளையிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை வாழைச்சேனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முகாமையாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் *வட பிராந்திய நிலைத்தகு அபிவிருத்தியை ஒருங்கிணைத்தல்* எனும் விடயத்திலான கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 முதல் 6.30 வரைத கமநல சேவைகள் திணைக்கள ஒழுங்கை நல்லூரில் அமைந்துள்ள ஈரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிலைத்தகு அபிவிருத்தி ஆலோசகர் அருளர் அருட்பிரகாசம் கலந்துகொண்டு இக் கருத்தரங்கை நிகழ்த்தவுள்ளார்.

ஆர்வமுள்ளவர்கள் இதில் கலந்து பயன் பெறலாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (6)

## புத்தாக்கம் சார் கற்பித்தல் முறையியல்கள் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உப கோட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கான புத்தாக்கம் சார் கற்பித்தல் முறையியல்கள் செயலமர்வு முன்னர் அறிவித்திருந்ததன் படி 19, 20, 21 ஆம் திகதிகளில் (திங்கள், செவ்வாய், புதன்) யாழ் இந்து மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரியர் நிலையத்தில் நடைபெறும் என்றும் குறித்த ஆசிரியர்களை தவறாது பங்குபற்றுமாறு யாழ் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயம் கேட்டுள்ளார். (6)

## ஆங்கில மொழி மூலம் சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டு நடைபெறவுள்ள க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு ஆங்கில மொழி மூம் தோற்றும் மாணவர்களுக்கான *வினாத் தாள்களுக்கு விடையளிக்கும் முறை* எனும் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.

இதில் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமைவிஞ்ஞான பயிற்சி வகுப்பும் 21ஆம் திகதி புதன்கிழமை கணிதப் பயிற்சி வகுப்பும் நடைபெறவுள்ளன.

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ள இப்பயிற்சி வகுப்பில் யாழ் கல்வி வலயத்துக்குட்பட்ட ஆங்கில மொழி மூலம் தோற்றும் மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (6)

## சதுர்த்தி உற்சவம்

யா/ வண்ணை கிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் சித்திரை மாத சதுர்த்தியை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக் கிழமை 3.30 மணிக்கு அபிஷேகமும் தொடர்ந்து மூலமூர்த்தி பூசை, வசந்த மண்டப பூசையுடன் ஐங்கரப் பெருமான் உள்வீதி வலம் வருதலும் இடம்பெறும் என மேற்படி தேவஸ்தானத்தினர் அறிவித்துள்ளனர். (6)

## மண்ணெண்ணெய் விற்காத எரிபொருள் விற்பனை நிலையம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள எரிபொருள் விற்பனை நிலையத்தில் நீண்ட காலமாக மண்ணெண்ணெய் விற்கப்படுவது இல்லை.

மண்ணெண்ணெய் நிரப்பும் நிலத்தடி தாங்கியினுள் மழைநீர் உட்புகுந்தமையால் மண்ணெண்ணெய் களஞ்சியப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டதால் விற்கவில்லை என நிலையத்தினர் தெரிவித்தனர்.

ஆனால் இவ் எண்ணெய் தாங்கிக்கு பதிலாக புதிய எண்ணைத் தாங்கி கொழும்பிலிருந்து 1 மாதத்திற்கு முன்பு எடுத்து வரப் பட்டுள்ளது.

இருந்தும் இதை நிலத்தில் தாழ்ப்பதற்கு சம்பந்தப்பட்ட நிர்வாகம் அக்கறை எடுக்கவில்லை என்றும் எனவே விரைவுபடுத்தி மக்களுக்கு மண்ணெண்ணெய் வழங்க ஆவண செய்யும் படி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (2-22)

## மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ள பளை வைத்தியசாலை

(யாழ்ப்பாணம்)

பளை வைத்தியசாலை மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

கடந்த கால யுத்த நடவடிக்கைகள் காரணமாக கட்டடம் முழுமையாக உடைந்துள்ள நிலையிலும் வைத்தியசாலை வளாகத்திற்குள் மிதிவெடி அகற்றப்படாத நிலையிலும் இவ்வைத்தியசாலை தற்போது தனியார் ஒருவரிற்கு சொந்தமான வீட்டில் இயங்கி வருகின்றது. (2-43)

## பரிசளிப்பு விழா

(காரைநகர்)

காரைநகர் எம்.இ.சி கல்வி நிலையத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்வி நிலைய மண்டபத்தில் ஆசிரியர் எஸ்.மோகன்ராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் வே. தர்மரட்ணம், திருமதி தர்மரட்ணம் ஆகியோர் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக தொழிலதிபர் எம். குணரட்ணம், கௌரவ விருந்தினர்களாக காரைநகர் பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகளான டாக்டர் எஸ்.ஐ. மர்சூப், டாக்டர் எஸ். சுவாமிநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (4-246)

## இராசி பலன்

*18-04-2010*
*(சித்திரை 05, ஞாயிற்றுக்கிழமை)*
*சதுர்த்தி பிற்பகல் 4.55 மணிவரை*
*ரோகிணி மாலை 6.35 மணிவரை*
*இராகுகாலம் 4.33 - 6.03 மணிவரை*
*சுபநேரம் 9.03-10.33 மணிவரை*
*மூளாய் சித்திவிநாயகர், உடுவில் மீனாட்சி சுந்தரேஸ்வரர், இணுவில் செகராசசேகரப் பிள்ளையார், சண்டிலிப்பாய் சீரணி நாகம்மை கொடி.*
*சதுர்த்தி விரதம்*

| | |
|---|---|
| மேடம் | கௌரவக்குறைவு, மனோசங்கடம், போசன சுகக்குறைவு, தனவிரயம். |
| இடபம் | வெகுமானம், சயனசுகம், மாதர் நட்பு, நல்ல முயற்சி. |
| மிதுனம் | சோம்பல் நிலை, காரிய அலைச்சல், பிறருக்கு உதவுதல், குடும்பக் கவலை. |
| கடகம் | தனதானிய சேர்க்கை, குடும்ப சுகம், கீர்த்தி, சயனசுகம். |
| சிங்கம் | அதிகாரம், பிறர் உதவி, நல்ல செய்தி, எடுத்த காரியம் கைகூடும். |
| கன்னி | பித்தரோகம், உத்தியோக பங்கம், பிரயாணம், முயற்சி தாமதம். |
| துலாம் | வா்கன பயம், காரிய தாமதம், அபகீர்த்தி, போசன சுகம். |
| விருச்சிகம் | இனசனத் தொடர்பு, முயற்சி கைகூடும், செய்தொழில் விருத்தி, நல்ல செய்தி. |
| தனுசு | சுபநிகழ்வு, போசன சுகம், காரிய நன்மை, தெய்வசிந்தை. |
| மகரம் | தாழ்ந்த சுபாவம், உடல்நலக் குறைவு, பணவிரயம், முயற்சி தாமதம். |
| கும்பம் | தொழில் சிந்தை, பிரயாண நன்மை, நண்பர்கள் சந்திப்பு, போசன சுகம். |
| மீனம் | எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, சகோதரர் உதவி, தெய்வ சிந்தை. |

வளவன்

## வாரம் ஒரு தகவல்
## புத்துணர்ச்சி

"ஜப்பானுக்கு வந்ததும் வராததுமாக குடிக்க ஆரம்பித்து விட்டீர்களா?"

"நாம வந்திருக்கிறது உல்லாசப் பயணம். உற்சாகமாக இருக்க வேண்டாமா... அதற்குத்தான் இது."

"உற்சாகமாக இருக்க வேண்டுமானால் 'ஆவோயாமா' கிளப்புக்குப் போயிருக்கலாமே!"

"அது என்ன கிளப்?"

"உள்ளத்துக்கு விஞ்ஞான முறையில் புத்துணர்ச்சி அளிக்கிற கிளப். அங்கே ஒளிக்கதிர்கள் மூலமாக மூளை நரம்புகளை இதப்படுத்திச் சுறுசுறுப்பை உண்டு பண்ணுகிறார்களாம். அதுக்கென்று ஓர் உயர் தொழில்நுட்பக் கருவி அங்கே இருக்கிறதாம்."

"அப்படியா?"

"ஆமாம். இந்தக் கிளப்புக்கு வரும் உறுப்பினர்களைத் தனியறையில் உட்காரவைத்து, சிவப்பு விளக்கு ஒளியைப் பாய்ச்சுவதன் மூலமாகவும், மனதுக்குப் பிடித்த இசையை ஒலிபரப்புவதன் மூலமாகவும் உள்ளத்துக்கு இதம் அளிக்கிறார்களாம்."

"எவ்வளவு நேரம் உட்கார்ந்திருக்க வேண்டுமாம்?"

"இரண்டு விதமான பயிற்சிகள் உண்டு. ஒன்று 18 நிமிடங்கள். இன்னொன்று 30 நிமிடங்கள்."

"பேசாமல் அங்கேயே போயிருக்கலாம். அது தெரியாமல் இங்கே வந்து தண்ணிபோட ஆரம்பித்துவிட்டேன். இதுவும் ஒரு விதத்தில் வித்தியாசமாகத்தான் இருக்கிறது."

"என்ன சொல்கிறீர்கள்?"

"இது ரொம்ப சூப்பரான மதுவாக இருக்கும் போல இருக்கு. எல்லாம் கிடுகிடுவென்று ஆடுவது மாதிரி எனக்குத் தெரிகிறதே"

"இப்ப நிஜமாகவே நிலம் ஆடிக் கொண்டுதான் இருக்கிறது. இது நிலநடுக்கம்"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 90 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 50 |
| தக்காளி | 40 | 50 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 50 |
| கோவா | 40 | 50 | 50 |
| கரட் | 90 | 100 | 100 |
| பூசணி | 25 | 40 | 30 |
| புடோல் | 40 | 60 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 60 | 20 | 60 |
| பெரிய வெங்காயம் | 55 | 60 | 70 |
| பாகற்காய் | 80 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 50 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 50 |
| பயிற்றங்காய் | 60 | 80 | 70 |
| லீக்ஸ் | 180 | 200 | 100 |
| பீற்றூட் | 40 | 60 | 50 |
| கறிமிளகாய் | 80 | 90 | 80 |
| முருங்கைக்காய் | 300 | 320 | 400 |
| போஞ்சி | 200 | 220 | 120 |
| கத்தரி தம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 25 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |

# புலிகளுக்கு ஆதரவளிக்கும் சக்திகள் தொடர்பில் புதிய பாராளுமன்றம் எச்சரிக்கையுடன் செயற்படவேண்டும்

## கோத்தபாய தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் பிரிவினைவாத சக்திகள் குறித்து புதிய பாராளுமன்றம் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டுமென பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகத்தின் ஒரு தொகுதியினர் புலிகளுக்கு மீண்டும் உயிர் கொடுக்க முயற்சிப்பதாகவும் பயங்கரவாதத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு சட்டமா அதிபர் திணைக்களம் அரசாங்கத்திற்கு கூடுதல் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சார்பானவர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பிரசார நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவே அரசாங்கத்தின் பிரதான இலக்கு. அரசியல் மற்றும் ஏனைய விளைவுகளைக் கருத்திற் கொள்ளாது இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சகல தரப்பினருனக்கும் எதிராகவும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஆளும் கூட்டணி கட்சியில் அங்கம் வகிக்கும் எந்தவொரு தரப்பினரும் பிரிவினைவாத கொள்கைகளை முன்னெடுக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் கடந்தகால அரசாங்கங்கள் கடுமையான நடவடிக்கைகளை எடுத்திருந்தால் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம் முப்பது ஆண்டுகளுக்கு நீடித்திருக்காது எனவும் பல்வேறு வழிகளில் காணப்படும் பிரிவினைவாத சக்திகளை இல்லாதொழிக்க புதிய அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

# நீரில் மூழ்கி சகோதரிகள் இருவர் மரணம்

(கொழும்பு)

குளியாப்பிட்டி கமனலவ பகுதியில் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த இரண்டு மாணவியர் நீரில் மூழ்கி மரணமாகியுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

கடந்த சனிக்கிழமை இரவு 10 மாணவிகள் இவ்வாற்றில் குளித்துக் கொண்டிருந்தனர். அப்போது நான்கு பேர் ஆழமான பகுதிக்குள் சென்றதால் நீரில் மூழ்கினார்கள். அவர்களில் இருவர் காப்பாற்றப்பட்டனர்.

அதில் இரண்டு மாணவிகள் மரணமானார்கள். மரணமானோர் இருவரும் சகோதரிகள் ஆவார்கள். F. பாத்திமா நுஸ்ரா (வயது 21) F. பாத்திமா நசிஷா (வயது 12 ஆகியோரே மரணமானவர்களாவர். குளியாப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை நடாத்தினார்கள் ஆற்றின் ஆழமான பகுதிக்குள் சென்றமையால் நீரில் மூழ்கி மரணமானார்கள் எனத் தெரிவித்தனர். (6-2)

# தமிழ் மக்கள் இன்னமும் அரசியலில் தெளிவுபெறவில்லை - சந்திரகாந்தன்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு தமிழ் மக்கள் இன்னமும் அடையமுடியாத இலக்குகளை நோக்கிச் சிந்திப்பதாகவும் அல்லது அரசியலில் இன்னும் தெளிவுறவில்லை என்றும் கிழக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான சந்திரகாந்தன் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பெரும்பான்மையான வெற்றியைப் பெற்றிருக்கிறது. ஆகையால் இந்தமுறை எந்த விதப் பிரச்சினையும் இல்லாமல் உறுதியான அரசாங்கம் அமையப் போகின்றது என்பது உண்மை. அந்த வகையில் இந்த வெற்றிகளுக்கெல்லாம் பொறுப்பாக இருந்தவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே.

வடக்கு- கிழக்கு மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும் வாக்களித்திருக்கிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் வாக்களித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நோக்குகின்ற பொழுது தமிழ்மக்கள் இன்னமும் அடைய முடியாத இலக்குகளை நோக்கிச் சிந்திப்பதாகவும் அல்லது அரசியலில் இன்னமும் தெளிவுறவில்லை என்ற ஒரு விடயத்தையும் எங்களால் காணக் கூடியதாக இருக்கின்றது.

ஒருங்கிணைந்த இலங்கைக்குள் பிரச்சினையை முடித்துக்கொள்ளப் போகின்றோம் என்று சொன்னால், நாங்கள் அரசாங்கத்தோடு இணைந்து முரண்பாடில்லாமல் எங்களுடைய பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (2-6)

# களனி பிரதேசத்தில் மதுபான விற்பனைக்கு முற்றாக தடைவிதித்துள்ளேன் -மேர்வின் சில்வா

களனி பிரதேசத்தில் மதுபான விற்பனைக்கு முழுமையான தடையை விதித்துள்ளேன் என மேர்வின் சில்வா திவயின பத்திரிகைக்கு அறிவித்துள்ளார்.

இதன்படி , நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் களனி பிரதேசத்தில் மதுபான விற்பனை முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

சட்டரீதியாக அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்ட மதுபான விற்பனை சாலைகள் மற்றும் சட்டரீதியான அனுமதிப் பத்திரமற்ற விற்பனை நிலையங்கள் ஆகிய அனைவருக்கும் இந்த சட்டம் பொருந்தும் என அவர் தெரிவித்துள்ளார்.

தமது உத்தரவின் அடிப்படையில் கடந்த காலங்களில் களனி பிரதேசத்தில் மாட்டிறைச்சி கடைகள் மூடப்பட்டதாகவும் மதுபான விற்பனையில் ஈடுபட்டு வரும் உத்தரவு பெற்ற விற்பனையாளர்களுடன் இதுகுறித்து விரைவில் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மதுபான விற்பனைத் தடை குறித்து ஒலிபெருக்கி மூலம் நேற்று முன்தினம் களனி முழுவதும் அறிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## வடக்கு, கிழக்கில் காணப்பட்ட

# பௌத்த மரபுநிலைகள் திட்டமிட்டு அழிக்கப்பட்டன - ஹெல உறுமய

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்கள் தமிழர்களின் பூர்வீகம் என்பதற்கான போதுமான வரலாற்று சான்றுகள் கிடையாது.

ஆனால் அப்பிரதேசங்களில் பௌத்த மக்கள் வாழ்ந்ததற்கான பௌதீக தடயங்கள், தொல்பொருள் ஆய்வுகளின் மூலம் கண்டெடுக்கப்பட்டுள்ளன என ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

புலிகளின் காலப் பகுதியில் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் காணப்பட்ட பௌத்த மரபு நிலைகள் யாவும் திட்டமிட்டு அழிக்கப்பட்டுள்ளன. எனவே வடக்கில் அழிக்கப்பட்ட பௌத்த மரபுரிமைகளை மீண்டும் கட்டியெழுப்ப அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் ஜாதிக ஹெல உறுமயவினால் முன்னெடுக்கப்படும் ஆய்வுகள் தொடர்பாக நேற்று முன்தினம் தெளிவுபடுத்துகையிலேயே, எல்லாவல மேதானந்த தேரர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

கடந்த மூன்று தசாப்த காலமாக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களை புலிகள் ஆக்கிரமித்திருந்தனர். இக்காலப் பகுதியில் அப்பிரதேசங்களுக்கு இலங்கை அரசின் பிரதிநிதிகளாலோ அல்லது ஏனைய தரப்பினராலோ செல்ல முடியாமல் இருந்தது.

ஆனால் தற்போது உள்நாட்டு யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்கு சுதந்திரமாக செல்லக் கூடிய சூழல் காணப்படுகின்றது. புலிகளின் ஆக்கிரமிப்பு காலப் பகுதியில் வடகிழக்கில் அழிக்கப்பட்டவை ஏராளம். அவை தொடர்பாக ஆய்வுகள் மேற்கொண்டபோது பல முக்கிய தகவல்கள் தெரியவந்துள்ளன.

குறிப்பாக வடக்கில் மன்னார், அடம்பன், பூநகரி, பரந்தன் ,புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி ,நந்திக்கடல், துணுக்காய் ,அம்பகாமம் மற்றும் மல்லாவி ஆகிய பிரதேசங்களில் நாம் மேற்கொண்ட தொல்பொருள் ஆய்வுகள் மூலம் பௌத்த பாரம்பரியம் காணப்பட்டதற்கான பௌதீக தடயங்கள் கிடைத்துள்ளன. பௌத்த விகாரைகளை புலிகள் அழித்துள்ளனர். இதற்கான ஆதாரங்கள் எமக்குக் கிடைத்துள்ளன என்றார். (2-6)

# ‘மாதா’ திரைப்படத்தின் மூலப்பிரதிகள் சேமித்து வைக்கப்பட்ட வன்பொருள்கள் திருடப்பட்டதாக முறைப்பாடு

(கொழும்பு)

இலங்கையின் இடம்பெற்ற யுத்தம் தொடர்பாக பிரபல சிங்கள திரைப்பட இயக்குனர் புத்தி கீர்த்திசேன தயாரித்துள்ள மாதா திரைப்படத்தின் மூலப் பிரதிகள் சேமிக்கப்பட்டிருந்த மூன்று கணனி வன்பொருள்கள் (ஹார்ட் டிஸ்க்) திருடப்பட்டுள்ளதாக மிரிஹான பொலிசார் தெரிவித்துள்ளனர்

நாவல சரசவி உத்தியான வீதியில் உள்ள திரைப்பட தயாரிப்பு நிறுவனத்தில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நிறுவனத்தின் குளியல் அறையூடாக பிரவேசித்த் எவரோ திரைப்பட பிரதிகளை திருடிச்சென்றுள்ளதாக பொலிசில் முறையிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியோடு தயாரிக்கப்பட்டுள்ள இந்தத் திரைப்படத்தில் யாழ் தேவி தொடரூந்து தீவைக்கப்பட்டது முதல் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மரணம் வரை இடம்பெற்றச் சம்பவங்கள் பற்றிய காட்சிகள் அடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 12 ஆம் 15 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் நடைபெற்றதாக கூறப்படும் இந்தத் திருட்டுச் சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-6)

# சர்வகட்சி குழுக்களின் யோசனைகள் புதிய உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்படும்

## திஸ்ஸ விதாரண தெரிவிப்பு



(கொழும்பு)

சர்வகட்சி குழுவின் யோசனைகள் புதிய பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு புதிய உறுப்பினர்களின் ஆதரவுடன் சீர்த்திருத்தப்படும். அத்துடன் அரசியல் அமைப்பிலும் உள்வாங்கப்படும் என முன்னாள் அமைச்சரும் சர்வகட்சி குழுக்களின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சிறுபான்மை இன மக்களின் அரசியல் உட்பட ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் சகல அரசியல் கட்சிகளும் எவ்விதபேதமுமின்றி தீர்வு காணமுன்வரவேண்டும் எனவும் அவர் கூறினார்.

புதிய பாராளுமன்றத்தில் சர்வகட்சி குழுவின் நடவடிக்கைகள் குறித்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தெளிவுபடுத்துகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கூறுகையில், சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்நோக்கிலேயே சர்வகட்சி குழு ஜனாதிபதியின் தலைமையில் அமைக்கப்பட்டது.

ஆனால், பல்வேறு காரணங்களின் அடிப்படையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ்தேசியக் கூட்டமைப்பு உட்பட ஏனைய சிலகட்சிகளும் சர்வகட்சி குழுவிலிருந்து விலகிக்கொண்டமையினால் குழுவின் நடவடிக்கைகள் ஓரளவுபின்னடைவைசந்தித்தன.

ஆனால், தற்போது இலங்கையின் ஏழாவது பாராளுமன்றத்திற்கு புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்தோடு, ஏற்றுக்கொள்ளக்கூடியளவு தமிழ் அரசியல் பிரதிநிதித்துவங்களும் புதிய பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிப்பதால் தீர்மானங்களை நிறைவேற்றிக்கொள்வதில் சிக்கல்கள் தோன்ற வாய்ப்பில்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்கனவே தமிழர்களின் பிரச்சினைகளுக்கான சர்வகட்சி குழுவின் தீர்மானங்கள் குறித்து அவதானம் செலுத்தியிருந்தார்.

தற்போதைய அரசாங்கத்திற்கு தீர்மானங்களை நிறைவேற்றக்கூடிய அதிகாரிங்கும் பொதுமக்களின் ஆதரவும் காணப்படுகின்றது. எனவே, புதிய பாராளுமன்றத்தில் சிறுபான்மை இனமக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் எனக் கூறினார்.(2-6)

# வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை
# க.பொ.த (சா/த) பரீட்சை 2009 பெறுபேறுகள்

## ஒரு பார்வை

வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை ஒரு தேசிய முன்னணிப் பாடசாலையாக இருப்பதால் இப் பாடசாலையின் பரீட்சைப் பெறுபேறுகள் மிகவும் உன்னிப்பாகப் பலராலும் நோக்கப்படுகின்றன. நீண்டகாலமாக இப்பாடசாலை சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வந்தாலும் 2006க்கு பின்னர் க.பொ.த (சா/த) பெறுபேறுகள் மிகவும் உயர்வாகத் தொடர்ந்து இருப்பது மிகவும் மகிழ்ச்சி தருவதாக இருக்கின்றது. அட்டவணை I இல் கடந்த நான்கு ஆண்டுகளுக்குரிய சில பரீட்சை விபரங்கள் தரப்பட்டுள்ளன.

அட்டவணை I

| ஆண்டு | தோற்றியோர் எண்ணிக்கை | க.பொ.த. (உ/த) கற்கத் தகுதிபெற்றோர் | சித்தி விகிதம் |
|---|---|---|---|
| 2006 | 232 | 232 | 100 |
| 2007 | 219 | 219 | 100 |
| 2008 | 194 | 193 | 99.48 |
| 2009 | 182 | 182 | 100 |

கடந்த நான்கு வருட பெறுபேறுகளை நோக்கும்பொழுது 2008 இல் மாத்திரமே ஒரு பரீட்சார்த்தி சித்திபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய உயர் பெறுபேறுகளை தொடர்ந்தும் தக்க வைத்திருப்பது மிகவும் கடினமானதொரு விடயமாகும்.

க.பொ.த.(சா/த) பரீட்சை 2009 இல் இப் பாடசாலையில் இருந்து 182 மாணவிகள் பரீட்சைக்கு முதல் முறையாகத் தோற்றினர். பரீட்சை எழுதிய சகல மாணவிகளும் க.பொ.த (உ/த) கற்கத் தகுதிபெற்றுள்ளனர். பலரது பெறுபேறுகள் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளன. பரீட்சார்த்திகள் பாடங்களில் பெற்ற A தர எண்ணிக்கையிலும், தமிழ், ஆங்கிலமொழி மூல அடிப்படையிலும் 2008, 2009 விபரங்கள் பின்வருமாறு,

| A எண்ணிக்கை | தமிழ்மொழிமூலம் | | ஆங்கிலமொழிமூலம் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | 2008 | 2009 | 2008 | 2009 | 2008 | 2009 |
| 9A | 06 | 12 | 05 | 02 | 11 | 14 |
| 8A | 26 | 17 | 05 | 04 | 31 | 21 |
| 7A | 21 | 20 | 02 | 04 | 23 | 24 |
| 6A | 22 | 26 | 04 | 04 | 26 | 30 |
| 5A | 29 | 17 | 03 | 02 | 32 | 19 |
| 4 A | 29 | 24 | 05 | 04 | 34 | 28 |

2009 இல் பரீட்சைக்குத் தோற்றிய 182 பேரில் 136 பேர் அதாவது 75% 4 Aயும் அதற்கு மேலும் பெற்று சித்தி பெற்றுள்ளார்கள்.

182 பரீட்சார்த்திகள் (182x9) மொத்தமாக 1638 பாட அலகுகளுக்குத் தோற்றியிருந்தனர். மொத்தமாக எடுத்த 1638 பாட அலகுகளில் 1632 பாட அலகுகளில் S தரத்திற்கும் அதற்கும் மேலும் பெற்று சித்தி பெற்றுள்ளனர். நான்கு பரீட்சார்த்திகள் ஆங்கிலத்திலும், இருவர் வர்த்தகம் கணக்கியலிலும் சித்திபெறத் தவறிவிட்டனர். இது ஒரு சிறிய விகிதமாகும். பாடங்களில் பெற்ற தர அடிப்படையில் பெறுபேறுகள் 4 வருடத்திற்கான பாடங்களில் பெற்ற பெறுபேறுகள் தர அடிப்படையில் பின்வருமாறு,

2009(182X9)

| தரம் | எண்ணிக்கை | விகிதம் |
|---|---|---|
| A | 951 | 58.06 |
| B | 345 | 21.06 |
| C | 255 | 15.57 |
| S | 81 | 4.95 |
| W | 06 | 0.36 |
| | 1638 | 100 |

2008(194X9)

| தரம் | எண்ணிக்கை | விகிதம் |
|---|---|---|
| A | 1049 | 60.11 |
| B | 372 | 21.32 |
| C | 235 | 13.47 |
| S | 77 | 4.41 |
| W | 12 | 0.69 |
| | 1745 | 100 |

2007(219X10)

| தரம் | எண்ணிக்கை | விகிதம் |
|---|---|---|
| A | 1520 | 69.5 |
| B | 257 | 16.3 |
| C | 221 | 10.2 |
| S | 81 | 3.7 |
| W | 07 | 0.3 |
| | 2186 | 100 |


2006(232 X 10)

| தரம் | எண்ணிக்கை | விகிதம் |
|---|---|---|
| A | 1385 | 59.7 |
| B | 438 | 18.9 |
| C | 349 | 15.0 |
| S | 137 | 5.9 |
| W | 13 | 0.5 |
| | 2320 | 100 |

மொத்த 1638 பாட அலகுகளில் 951 பாட அலகுகளில் (58.06%) A சித்தி பெறப்பட்டுள்ளது. A,B தரங்கள் இரண்டினைச் சேர்த்துப் பார்க்குமிடத்து எண்ணிக்கை 1296 ஆகவும் (79.12%) உயர்கின்றது. A,B,C தரங்கள் மூன்றினையும் சேர்த்து பார்க்குமிடத்து எண்ணிக்கை 1551 பாட அலகாக அதிகரிக்கின்றது. இது 94.69 விகிதமாக இருப்பது மிகவும் உயர்ந்த நிலையைக் காட்டுகின்றது.

பாட அடிப்படையில் பெறுபேறுகள் அட்டவணை III இல் காட்டப்பட்டுள்ளன.

பாட அடிப்படையில் பெறுபேறுகளைப் போக்கும் பொழுது ஆங்கிலம், வியாபாரமும் கணக்கியலும் தவிர ஏனைய பாடங்கள் யாவிலும் 100% சித்தி பெறப்பட்டுள்ளன. முக்கியமான் ஆறு பாடங்களில் சைவசமயத் தில் 100% A சித்தியும் , கிறிஸ்தவத்தில் 88.8% A சித்தியும், தமிழ் மொழியும் இலக்கியத்திலும் 73% A சித்தியும், கணிதத்தில் 73% A சித்தியும்,ஆங்கிலத்தில் 47.2% A சித்தியும் விஞ்ஞா னத்தில் 36% A சித்தியும் வரலாற்றில் 20.3% A சித்தியும் பெறப் பட்டுள்ளன.



கணிதம், தமிழ்மொழி பெறுபேறுகள் மிகவும் திருப்திகரமாக இருக்கின்றன. கணிதத்தில் 176 பேர் C யும், Cக்கு மேல் பெற்றும் சித்தி பெற்று இருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. ஆங்கிலத்தில் 4 பேர் சித்திபெற தவறி இருப்பினும் 97.9% சித்தி பெற்று இருப்பது குறிப் பிடத்தக்கது.

விஞ்ஞான பாடப் பெறு பேறுகள் A-67 (36.8%), B- 49 (26.9%), C-47 (25.8%), S-19 (18.4%) முன்னேற இடமுண்டு. இதேபோல வரலாற்றுப் பெறுபேறுகள் திருத்திகரமாக அமையவில்லை. பொதுவில் தமிழ் மொழி மாணவர்கள் வர லாற்றுப் பாடத்தை சிறப்பாகச் செய்வதில்லை என சொல்லப்படுகின்றது. இப் பாடம் இவர்களுக்கு விருப்புக் குறைவாக இருப்பதும் பாட விதானங்களும் தமிழ் மாணவர்களுக்கு சாதகமற்று இருப்பதும் முக்கிய காரணங்களாக இருக்கின்றதெனச் சொல்லப்படுகின்றது. மூன்றுபாடத் தொகுப்பில் மாணவிகளின் பெறுபேறுகள் சிறப்பாக அமைந்துள்ளன.



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
PhD.Durham
முன்னாள் துணைவேந்தர்

இதில் ஆங்கில இலக்கியத்திற்கு தோற்றிய 24பேரில் 5பேர் A சித்தியும் 5பேர் B சித்தியும் 11 பேர் C சித்தியும் பெற்று 24பேரும் பாடத்தில் சித்தி பெற்றிருப்பது மிகவும் பாராட்டிற்குளபாடங்களில் சிறந்த பெறு பேறுகள் மாணவிகள் பெற்றிருக்கிறார்கள்.

சிறந்த பெறுபேறுகள் மாணவிகள் பெற்றதற்கு பல காரணிகள் உதவியுள்ளன. இப்பாடசாலையில் கல்வி பயிலும் மாணவிகள் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் சித்திபெற்ற மீத்திறன் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருப்பதுடன் இவர்களிடையே நிலவும் கல்விசார் போட்டியும், ஊக்கமும் பாடசாலை பாரம்பரியமும் கற்றல் சூழலிற்கு மிகவும் சாதகமாக இருக்கின்றன. அதிபர், ஆசிரியர்கள் பங்களிப்பு மிக முக்கியமாக இருக்கின்றது. புலமைப்பரிசில் சோதனைக்கு பின்னர் 6 ஆண்டுகள் மாணவிகளின் கல்விச் செயற்பாட்டை தொய்யவிடாது மேல் நிலைமைக்குக் கொண்டு வந்ததில் அதிபர், ஆசிரியர்கள் பங்களிப்பு மிகவும் முக்கியமாகவுள்ளன.

பாடசாலை உட்கட்டுமானம், வள விருத்தி, கல்வி செயற்பாடுகளை முன்னெடுத்ததில் பாடசாலை அபிவிருத்தி சபை, பழைய மாணவிகளின் பங்களிப்பு காத்திரமானவை - மாணவிகளின் சாதனையை சமூகம் பாராட்டுவதுடன் வேம்படி மாணவிகள் வருங்காலத்திலும் மேலும் மேலும் சிறப்பான சாதனைகளை செய்யவேண்டுமென்றும் சமூகம் எதிர்பார்க்கின்றது.

அட்டவணை III

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை க.பொ.த (சா/த) பரீட்சை பெறுபேறுகள் -2009

| பாடம் | A | B | C | S | W | தோற்றியோர் | சித்தி வீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| சைவசமயம் | 173 | | | | | 173 | 100% |
| கிறிஸ்தவம் | 8 | 1 | | | | 9 | 100% |
| தமிழ்மொழி | 133 | 41 | 7 | 1 | | 182 | 100% |
| ஆங்கிலம் | 86 | 38 | 40 | 14 | 4 | 182 | 97.8% |
| விஞ்ஞானம் | 67 | 49 | 47 | 19 | | 182 | 100% |
| கணிதம் | 133 | 27 | 16 | 6 | | 182 | 100% |
| வரலாறு | 37 | 59 | 66 | 20 | | 182 | 100% |
| *1 ஆம் பாடத்தொகுதி* | | | | | | | |
| வணிகக் கல்வி | 89 | 28 | 24 | 11 | 2 | 154 | 98.7% |
| புவியியல் | 6 | 10 | 6 | 1 | | 23 | 100% |
| குடியுரிமைக் கல்வி | 5 | | | | | 5 | 100% |
| *2ஆம் பாடத் தொகுதி* | | | | | | | |
| சித்திரம் | 2 | 2 | 4 | 1 | | 9 | 100% |
| நடனம் | 15 | 13 | 8 | | | 36 | 100% |
| கர்நாடக சங்கீதம் | 11 | 8 | 3 | | | 22 | 100% |
| தமிழ் இலக்கியம் | 65 | 14 | 1 | 2 | | 82 | 100% |
| ஆங்கில இலக்கியம் | 5 | 5 | 11 | 3 | | 24 | 100% |
| நாடகமும் அரங்கியலும் | 9 | | | | | 9 | 100% |
| *3ஆம் பாடத் தொகுதி* | | | | | | | |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 99 | 25 | 5 | | | 129 | 100% |
| தகவல்தொடர்பாடலும் தொழில் நுட்பவியலும் | 8 | 21 | 13 | 3 | | 45 | 100% |
| மனைப்பொருளியல் | | 4 | 4 | | | 8 | 100% |

# களம் பல கண்ட யாழ் கோட்டை 7

## பிலிப் தே ஒலிவேறா

யாழ்ப்பாண மக்களது ஆடையணிகள் ஒல்லாந்தருக்கு வியப்பினைத் தந்தன. வேட்டியை மடி வைத்துப் பஞ்சகச்சமாக ஒருசிலர் கட்டியிருந்தனர். அவர்களிற் சிலர் சால்வை தரித்திருந்தனர். வேறு சிலர் அரையில் சிறுதுண்டு மட்டும் கட்டியிருந்த னர்.


பெண்களில் பெரும்பாலானோர் றவுக்கை யணியாது சேலைத் தலைப்பால் மார்புகளை மூடியிருந்தனர். ஒரு பகுதிப் பெண்கள் இடுப்பில் சேலையை மட்டும் மடித்துக் கட்டி யிருந்தனர்.

யாழ்ப்பாணக் கோட்டையை முற்றுகை யிட்டும் தாக்காது கொமுசாறி வன்ஹுன்ஸ் காலம் கடத்தி வருவது வியப்பாகவிருந்தது. அவனது திட்டம் வேறாகவிருந்தது. கோட்டைக்குள் புகுந்திருக்கும் ஆயிரம் பேருக்கும் உணவுப் பஞ்சம் ஏற்படும், தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படும்.

இருக்கின்ற உணவு முடிந்ததும் அவர்கள் வலுவிழந்து தாக்குதல்களைத் தொடங்கு வார்கள். பட்டினி போடுவதுதான் அவர்க ளைப் பணியவைக்க அல்லது அழிக்கச் சரியான வழியெனக் கொமுசாறி வன் ஹுன்ஸ் நம்பினான். அவனது எண்ணம் பொய்க்கவில்லை.

கோட்டை, கொத்தளங் களில் நின்றிருந்த போர்த்துக்கேயர்களிடம் அமைதியின்மை சோர்வு என்பன ஏற்படுவதை அவதானித் தான்.

கோட்டைக்குள் பட்டினி நிலை தோன்றி விட்டது. கோவாவிலிருந்து உதவிகள் வரும் எனப் போர்த்துக்கேயர் எதிர்பார்த்தது பொய்த் துவிட்டது.



போர்த்துக்கேயர் அமைத்திருந்த யாழ்ப்பாணக்கோட்டை
(1672 இல் பால்தேயஸ் பாதிரியார் வரைந்தபடி)



யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்காக ஒல்லாந்தப்படை பண்ணைக் கரையில் முகாமிட்டுள்ளது. பான்ஸ் வன்ஹுவன்ஸ் முன் காணிக்கைப் பொருட்களை யாழ்ப்பாண மக்கள் சமர்ப்பிக்கின்றனர். (பால்தேயஸ் பாதிரியார் வரைபு-1672)

முற்றுகை தொடங்கி 107 நாட்கள் கோட்டைக்குள்ளிருந்த உணவுப்பொருட்கள் அனைத்தும் தீர்ந்துவிட்டன. கோட்டைக் குள்ளிருந்த நாய்களும் பூனைகளும் அங்கி ருந்தோரின் ஆகாரங்களாகின. போர்த்துக் கேய வீரன் பரிதாபமாகத் திரும்ப நேர்ந் தது. இனியும் பொறுக்க முடியாது என்றநிலை கோட்டைக்குள் உருவாகியது.

யாழ்ப்பாணக் கோட்டையின் கிழக்குப் பக்க உயர் கொத்தளத்திலிருந்து முதலாவது பீரங்கி ஒல்லாந்தப் படைவீரர்களை நோக்கி வெடித்தது.

அதனைத் தொடர்ந்து வடக்குப் பக்கக் கொத்தளங்களிலிருந்தும் பீரங்கிகள் முழங் கின. அகழியைத் தாண்டிப் பீரங்கிக் குண்டு கள் தீச்சுவாலைகளுடன் ஒல்லாந்தரை நோக் கிப் பாய்ந்தன.

. ஒல்லாந்தக் கொமுசாறி கோட்டை யைத் தாக்குமாறு தனது படைவீராகளுக்கு உத்தரவிட்டான். ஒல்லாந்தரின் பீரங்கிகள் முழக்கமிட்டன. வடக்கிலிருந்து பாய்ந்த முதற் குண்டே வடபுறக் கொத்தளத்தைச் சிதைத் தது.

தொடர்ந்து மழைபோலப் பீரங்கிக் குண்டு கள் பாய்ந்தன. கடனீரேரியில் தங்கி நின்ற நார்டொன் கப்பலிலிருந்து பாய்ந்த பீரங்கிக் குண்டு தென்புற அரண்சுவரில் துளையிட முயன்றது. ஒல்லாந்தரின் எறிபொறிகள் பெருங்கற்களையும் தீப்பந்தங்களையும் கோட்டைக்குள் வீசியெறிந்தன. கோட்டைக் குள் கூக்குரல்கள் எழுந்தன.

**செங்கை ஆழியான்**

யாழ்ப்பாணக் கோட்டைக்குள் பீரங் கிக் குண்டுகள் முற்றாகச் செலவாகிவிட்டன. போர்த்துக்கேயர் இடுகாட்டில் புதைகுழிக் களுக்கு மேலிருந்த கல்வெட்டுச் சிலைகளை யுடைத்தும் கோயில்களிலிருந்த வெண்கலப் பாத்திரங்களைப் பொடி செய்தும் பீரங்கிகளிற் போட்டுக் குண்டுகளாக உபயோகித்தனர். ஆயிற்று எல்லாம் முடிந்தன. (தொடரும்)

# விடுதலைப்புலிகளின் நினைவுச்சின்னங்கள் திட்டமிட்ட முறையில் அழிக்கப்படுகின்றன

## ஸ்ரீகாந்தா,ஜனாதிபதியிடம் முறைப்பாடு



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் நினைவுச் சின்னங்கள் திட்டமிட்ட முறையில் அழிக்கப்ப டுவதாக தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்ட மைப்பின் தலைவர் என் ஸ்ரீகாந்தா தெரிவித் துள்ளார்.

சிரேஸ்ட விடுதலைப் புலித் தலைவர் களின் சமாதிகள் உள்ளிட்ட முக்கிய நினைவுச் சின்னங்கள் அழிக்கப்பட்டு வருவதாக ஸ்ரீகாந்தா ஜனாதிபதிக்கு கடிதம் ஊடாக அறிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் சிரேஸ்ட உறுப் பினர் திலீபனின் நினைவுத் தூபி மூன்று வாரங்களுக்கு முன்னர் அழிக் கப்பட்டதாக சுட் டிக்காட்டியுள்ள அவர்,



புலிகளின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரனின் வீட்டுப் பகுதியும் அழிக்கப்பட்டு விட்டதாக தெரிவித்துள்ளார்.

இவ்வாறு நினைவுச் சின்னங்களை அழிக்கும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இறந்தவர்களின் சமாதிகளுக்கு மதிப்ப ளிக்க வேண்டியது நாகரீகமான செயற்பாடு எனவும் இதில் இன, மத, மற்றும் கருத்து வேறுபாடுகளுக்கு இடமில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2-6)

# நாட்டை பிளவுபடுத்த முயற்சிக்கும் அரசியல்வாதிகளுக்கு எதிராக புதிய சட்டம்

**சிங்கள ஊடகம் செய்தி**

(கொழும்பு)

நாட்டைப் பிளவுபடுத்த முயற்சிக்கும் அரசியல்வாதிகளுப்பு எதிராக புதிய சட்டங்கள் உருவாக்கப்பட உள்ளதாக அரசாங்க வட்டா ரத் தகவல்கள் குறிப்பிட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்றத்தில் இது தொடர்பான சட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளதாகவும் தற்போது நாட்டில் காணப் படும் சட்ட திட்டங்களுக்கு அமைய குறித்த அரசியல்வாதிகளுக்கு எதிராக சட்ட நடவ டிக்கை எடுக்கமுடியாத நிலைமை ஏற்பட்டுள் ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை நாடு கடந்த தமிழீழ இராச்சி யத்தை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள் ளவர்களுக்கு ஓய்வூதியத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிடப் படுகிறது.

இவ்வாறு நாட்டுக்கு எதிராக செயற்படும் சிலர் வெளிநாடுகளில் வசித்து வருவதாகவும் அவர்கள் இலங்கை அரசாங்கத்திடம் தொடர்ச் சியாக ஓய்வூதியம் பெற்றுக் கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6)

# சுற்றுலாத்துறையில் "பிரயாணமும் சுற்றுலாவும்" கற்கைநெறிக்கான விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

சுற்றுலாத்துறையில் பிராயணமும் சுற்று லாவும் என்ற பாடத்தில் இலவச பிரத்தி யேக வகுப்புக்களை நடத்த சுற்றுலாத்துறை அமைச்சு முன்வந்துள்ளது.

இவ்வகுப்புகளில் அனுமதிப்பதற்கென அமைச்சு 15 ஆயிரம் புலமைப்பரிசில்களை வழங்கத் தீர்மானித்துள்ளது. இது சம்பந்த மாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளதாவது,

நாடெங்கிலுமுள்ள மாணவர்கள் புலமைப் பரிசில் பெறுவதற்கான தேர்வுப் பரீட்சைக்கு தோற்றி 40க்கும் அதிகமான நிலையங் களில் நடத்தப்படவிருக்கும் கற்கைநெறியில் இணைந்துகொள்ளலாம்.

இந்தப் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் நாடெங்கிலும் தெரிவு செய்யப்படும் நிலை யங்களில் பிரயாணமும் சுற்றுலாவும் என்ற பாடத்தில் இலவச வகுப்புக்கள் நடத்தப்பட வுள்ளதுடன் மேலதிகமாக சந்தைப்படுத்தல், வர்த்தகம் , ஆங்கிலம் ஆகிய இரண்டு பாடங் களும் கற்பிக்கப்படும்.

இக் கற்கைநெறியில் சித்தியடையும் மாணவர்கள் குறிப்பிட்ட பாடத்தில் டிப்ளோமா கற்கைநெயியைத் தொடர தகைமை பெறு வர். சந்தைப்படுத்தல் , வர்த்தகம் , ஆங்கி லம் ஆகிய இரண்டு பாடங்களுக்குமாக மாண வர்கள் கட்டணமாக ஐயாயிரம்ரூபாவை செலுத்தவேண்டும்.

பிரயாண மற்றும் சுற்றுலாத்துறையின் முக்கிய பிரிவுகளில் வேலை வழங்கக்கூடிய தொழில்சார் வல்லுநர்களை இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு வழங்குவதற்கென இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் தகைமை பெறும் மூவாயிரம் அல்லது அதற்கு மேற்பட்ட டிப்ளோமா சான்றிதழ்தாரர்களுக்கு வேலை வாய்ப்பு உத்தரவாதமும் வழங்கப் படும்.

இதற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் www.sltda.gov.lk.from-tourism scholar ships @srilanka.travelஎன்ற மின்னஞ்சல் முகவரி மூலம் விண்ணப்பங்களை அனுப்பு மாறு கோரப்படுகிறார்கள்.

டிப்ளோமா கற்கை நெறியை தொடர விரும்பும் நபரையும் விண்ணப்பத்தில் குறிப் பிடவேண்டும்.

தெரிவுசெய்யப்படும் மாணவர்கள் புல மைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றுமாறு கேட் கப்படுவார்கள்.

பரீட்சையில் ஆங்கிலம், பொது அறிவு, விவேகம் ஆகியவற்றிலிருந்து தேர்ந்தெடுக் கப்பட்ட 30 கேள்விகளுக்கு பதிலளிக்க் வேண்டும் என்பதுடன் அதில் சித்தியடைய 50% புள்ளிகளைப் பெறவேண்டும்.

50வீத புள்ளிகளைப் பெற்று சித்திய டைந்த மாணவர்கள் எந்த நிலையத்தில் வகுப்புக்களுக்குச் செல்ல வேண்டும் என்பது பற்றி பின்னர் அவர்களுக்கு அறிவிக்கப் படும்.

வார நாட்களில் அல்லது வார இறுதி நாட்களில் வகுப்புக்கள் நடத்தப்படும். கற்கை நெறி பூர்த்தியடைந்ததும் டிப்ளோமா கற்கை நெறிக்கான பரீட்சைக்கு தோற்றலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-6)

# விஜய் ஆண்டனியின் ஹீரோ அவதாரம்



இசையமைப்பாளர் விஜய் ஆண்டனி கதாநாயகராக அறிமுகமாகும் புதிய படத்திற்கான நாமகரணம். ஜீவா சங்கர் இயக்கத்தில் விஜய் ஆண்டனியுடன் சித்தார்த், ரூபா மஞ்சரி உள்ளிட்ட மற்றும் பலரும் நடிக்கிறார்கள். விதி புரட்டிப் போட்ட ஒரு இளைஞன் புதுவாய்ப்பு தேடி சென்னையை நோக்கி புறப்படுகிறான். அங்கேயும் விதி விளையாடுகிறது. செய்வதறியாது அதை எதிர்கொள்ளும் அவனுக்கு புதிய நட்பு கிடைக்கிறது. அந்த நட்பின் மூலம் புதிய வாழ்க்கையும் கிடைக்கிறது. அதிலும் பல பிரச்சினைகள். எல்லாவற்றையும் எதிர்கொண்டு வாழ்க்கையை நாயகர் வாழத்துடிப்பதும் அது முடிந்ததா? முடியவில்லையா? என்பது தான் நான் படத்தின் மொத்த கதையும். விஜய் ஆண்டனி கதாநாயகராக நடிப்பதுடன் இப்படித்திற்கு இசையமைத்து தயாரிப்பாளர்களில் ஒருவராகவும் பங்கு பெறுகிறார். மறைந்த ஒளிப்பதிவாளர் ஜீவாவின் சீடர்தான் இப்படத்தின் டைரக்டர் ஜீவா சங்கர். ஆனந்த தாண்டவம் மூலம் ஒளிப்பதிவாளரான இவர் விஜய் ஆண்டனியின் கல்லூரித் தோழர் என்பது ஹைலைட். படத்தின் நாயகியாக நடிக்கும் ரூபா மஞ்சரி திருதிரு துறுதுறு பட நாயகியாக நடித்தவர் என்பது கூடுதல் [illegible]




அமைச்சர் சுமன் மகள் மீரா ஜாஸ்மினை கடத்துக்கிறார் சுரேஷ் ஜோகிம். சிறையிலிருக்கும் அலெக்ஸை ரிலீஸ் செய்யவேண்டும் என்று நிபந்தனை விதிக்கிறார். மறைவிடத்தில் அடைக்கப்பட்ட மீரா, தப்ப முயல்கிறார். அவரிடம் தனது மனைவியை இலங்கை இராணுவ அதிகாரி அலெக்ஸ் கொடுமையாக கொலை செய்ததை சொல்கிறார் ஜோகிம்.


அதைக் கேட்டு மனம் மாறும் மீரா, சுரேஷ்க்கு உதவுவதாக சொல்கிறார். அலெக்ஸை கொல்லக்கூடாது என்றும் நிபந்தனை விதிக்கிறார். சிறையிலிருந்து அலெக்ஸ் விடுதலை ஆகிறார். அவரை சுரேஷ் பழிவாங்கினாரா என்பதற்கு பதில் சொல்கிறது கிளைமாக்ஸ்.

12 நாளில் தயாரான கின்னஸ் சாதனை படம் இது. முதல் காட்சியிலேயே மீராவை ஒரு உருவம் கடத்தியதும் பரபரப்பு பற்றிக்கொள்கிறது. புது ஹீரோ சுரேஷ், நடிப்பில் நிதானம் காட்டுகிறார். கரக்டருக்குரிய வேகம் இல்லை. மீராவுக்கு அதிக வேலை இல்லை. இலங்கை அதிகாரியாக வரும் அலெக்ஸ் மிரட்ட முயல்கிறார். காமெடி குறையைப் போக்குகிறார் விவேக். வீட்டுக்குள் பேய் இருப்பதாக நினைத்து அவர் நடுங்குவது தமாஷ்.

சுரேஷின் போனுக்காக மீராவின் தந்தை சுமன், பொலிஸ் அதிகாரிகள் காத்திருக்கும் காட்சிகள் சலிப்பு. ஒவ்வொரு முறையும் மகளை இழுத்துவிடுவோமோ என்ற எண்ணத்திலேயே அமைச்சரான சுமன் நடுங்குவது காமெடி. சிறையில் அடைபட்டிருக்கும் அலெக்ஸை வெளியே கொண்டு வருவதற்காக சுரேஷ் போடும் திட்டங்கள் நேரத்துக்கு தக்கபடி மாறுவது வேகம் கூட்டுகிறது.

மூன்று ஒளிப்பதிவாளர்கள் விஸ்வநாதன், எஸ். இந்திரஜித், ஜமாலுதீன் பணியாற்றியுள்ளனர். காட்சிக்கு தகுந்த பின்னணி இசையைத் தந்துள்ளார் தேவா. காதல், ஆக்ஷன் வன்முறை பக்கம் செல்லாமல் படம் இயக்கியுள்ளார் கிருஷ்ணமூர்த்தி. அதேநேரம், நாடகத்தனமான காட்சிகளை தவிர்த்திருக்கலாம்.

# ஜோடி சேர மறுத்த நாயகிகளும்! கருணாஸின் வருத்தமும்!!



காமெடியன் என்பதால் என்னுடன் ஜோடி சேர பல நடிகைகள் மறுத்தனர் என்று நடிகர் கருணாஸ் வருத்தத்துடன் தெரிவித்துள்ளார். திண்டுக்கல் சாரதியை தொடர்ந்து நடிகர் கருணாஸ் நாயகனாக நடித்துள்ள படம் அம்பாசமுத்திரம் அம்பானி. இப்படத்தின் ஓடியோ வெளியீட்டு விழா சமீபத்தில் நடந்தது. இதில் பங்கேற்ற கருணாஸ், கதாநாயகர்களாகும் நகைச்சுவை நடிகர்களுடன் ஜோடி சேர கதாநாயகிகள் மறுப்பதாக வருத்தப்பட்டார்.

மேலும் இது தொடர்பில் அவர் பேசியதாவது;

திரைப்படங்களில் வில்லனாகவும், கௌரவ வேடத்திலும் நடித்த பலபேர் கதாநாயகர்களாகியுள்ளனர். ஆனால் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் காலத்தில் இருந்து நகைச்சுவை நடிகர்கள் கதாநாயகர்கள் ஆவது என்பது நடக்கவே இல்லை. இப்போது ஓரிரு நகைச்சுவை நடிகர்கள் ஒன்றிரண்டு படங்களில் கதாநாயகனாக நடித்துவிட்டு திரும்பவும் நகைச்சுவைக்கே போய்விடும் நிலைமைகளை பார்க்கிறோம். நான் கதாநாயகனாக நடிக்கும் படங்களுக்கு நாயகிகள் தேடி ரொம்ப சிரமப்பட்டேன். சிம்ரனில் இருந்து நிறைய கதாநாயகிகளிடம் என்னுடன ஜோடி சேரும்படி கேட்டேன். உடன்பாடு இல்லை என்று மறுத்துவிட்டார்கள். நடிக்க விரும்பாததற்கான காரணத்தையும் அவர்கள் சொல்லவில்லை.

நான் நடிப்பது டுபாக்கூர் படம் என்று கூறியுள்ளனர். திண்டுக்கல் சாரதி படம் வெற்றியடைந்ததும் அதில் நடிக்க மறுத்த கதாநாயகி ஒருவர் ஐயோ! அதில் நடித்து இருக்கலாமே தப்புச் செய்துவிட்டேனே, என வருத்தப்பட்டு பேசியிருக்கிறார். அப்படி வருத்தமானதே எனக்கு கிடைத்த பெரிய வெற்றி. முடிந்தவரை எல்லோருக்கும் உதவி செய்யவேண்டும் என்று நினைக்கிறேன்.

யாருக்கும் நான் கெடுதல் செய்வது கிடையாது. எனவேதான் எனக்கு ஜோடியாக அழகான நடிகைகள் அமைகிறார்கள். முதல் படத்தில் கார்த்திகா நடித்தார்.

'அம்பாசமுத்திரம் அம்பானி' படத்தில் நவ்னீத்கவுர் நடிக்கிறார். இந்தப் படத்தை ராம்நாத் இயக்குகிறார். படமும், பாடல்களும் ரொம்ப சிறப்பாக வந்துள்ளன.

தமிழ்த்திரையுலகில் டி.ராஜேந்தர், பாக்யராஜ், பாண்டியராஜன், ராமராஜன் இவர் எல்லாம் விட்டுட்டு போன இடம் இன்னும் காலியாகத்தான் இருக்கு, அந்த இடத்தை நிரப்பலாம் என்று தான் என் நோக்கம். எந்த ஆபாசமும் இல்லாமல் குடும்பத்தோடு வந்து இந்தப் படத்தை பார்க்கலாம். இவ்வாறு கருணாஸ் கூறினார்.

# மயங்கி விழுந்தார் அசின்: படப்பிடிப்பில் அதிர்ச்சி!



பொடிகார்ட் படப்பிடிப்பில் அசின் மயங்கி விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. மலையாளத்தில் சித்திக் இயக்கத்தில் நயன்தாரா, திலீப் நடித்து ஹிட்டான படம் பாடிகார்ட். இந்தப் படம் தமிழில் ரீமேக் ஆகிறது. விஜய் ஹீரோவாக நடிக்கிறார். அசின் ஹீரோயின். காலையில் படப்பிடிப்புக்கு வந்த அசின் தனது அப்பா ஜோசப் தோட்டம்கல் மற்றும் மேக்கப் மேனுடன் கேரவனுக்குள் சென்றார்.

உள்ளே சென்று அரை மணி நேரமாகியும் வெளியே வராததால் படப்பிடிப்பில் இருந்த உதவி இயக்குனர் ஒருவர் கேரவனை திறந்து பார்த்தார். அப்போது அசின் உள்ளிட்ட மூவரும் மயங்கி கிடந்தது கண்டு அதிர்ச்சி அடைந்தார். ஷூட்டிங் நிறுத்தப்பட்டது. உடனடியாக மூன்று பேரையும் தூக்கிக் கொண்டு புதுக்கோட்டையிலுள்ள தனியார் மருத்துவமனையில் படப்பிடிப்பு குழுவினர் சேர்த்தனர். அங்கு தீவிர சிகிச்சைக்குபின் அவர்கள் மயக்கம் தெளிந்தனர். கேரவனில் இருந்த காஸ் கசிந்து மயக்கம் ஏற்பட்டது பின்னர் தெரியவந்தது. உடனடியாக கேரவன் மாற்றப்பட்டு வேறு வான் கொண்டு வரப்பட்டது.







தமிழ் சினிமாவில் பொலிஸ் கதைகளுக்கு எப்போதும் தனித்துவம் உண்டு. முன்னணி ஹீரோக்கள் நடித்த பொலிஸ் கதைகள் எதுவுமே தோற்றதில்லை என்பது செண்டிமெண்ட்டாகவும் ஆகிவிட காக்கிச்சட்டை மாட்டிக்கொள்ள எந்த ஹீரோவும் எப்போதும் தயாராகவே இருக்கிறார்கள். 'சாமி'யில் இயக்குநர் ஹரியும் 'காக்க காக்க' வில் ஹீரோ சூர்யாவும் கடந்து வந்த பொலிஸ் படங்கள் இரண்டுமே இரண்டு நிலைகளில் கவனத்தைக் கவர்ந்து வெற்றிபெற்றன.

இந்நிலையில் இருவரும் இன்னொரு பொலிஸ் கதையில் கைகோர்க்கிறார்கள்.

சன்பிக்சர்ஸ் கலாநிதி மாறன் வழங்க கிரீன் ஸ்டூடியோஸும் பி பிக்சர்ஸும் இணைந்து தயாரித்திருக்கும் சிங்கம் படத்தில் தான் அந்த அதிரடி அரங்கேறுகிறது.

தன் வழக்கப்படியே பெருத்த ஸ்ரார் பட்டாளத்துடன் ஆக்ஷன் அதிரடியாக படத்தை முடித்திருக்கும் ஹரி பேசினார். பொலிஸ் முத்திரையில் அரசு சின்னமான மூணு சிங்கங்கள் இருக்கும். அதுக்குப் பின்னால் நாலாவது சிங்கம் ஒன்றும் கண்ணுக்குத் தெரியாமல் இருக்கும். அதைத் தான் நான் காட்டப் போகிறேன்.

சீண்டிப்பார்க்கிற வரை அமைதியா இருக்க சிங்கம் சீறிப் பாய்ஞ்சா சீண்டியவன் கதி அதோ கதிதான். படத்தில் அப்படிப்பட்ட பொலிஸ் அதிகாரி தான் சூர்யா. தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரி என்று இந்து மாநில பொலிஸ் இடம்பிடிக்கிறது. இதில ஸ்பெஷல். தூத்துக்குடியில் ஆரம்பிக்கிற கதை பல இடங்களுக்கும் பயணிக்கிறது.

வழக்கமா ஸ்கிரிப்ட் அற்புதமா அமையும்போதோ முதல் இரண்டு மூன்று நாள் எடுத்த காட்சிகள் அட்டகாசமா வரும்போதோ மனதுக்குள்ள படம் பற்றி நல்ல நம்பிக்கைகள் வரும். இந்தப்படத்து கெட்டப்புக்காக முழுக்க தாடி வளத்து ஒருநாள் மூன்று மணி நேரம் உட்கார்ந்து அதை அரிவாள் மீசையா சூர்யா செதுக்கிக் காட்ட அப்ப வந்தது இந்தப் படத்து மேல் நம்பிக்கை. எந்தக் கரக்டர்னாலும் அதுக்குள்ள அப்படியே போய் செட்டிலாகிற சூர்யா விறைப்பா மீசையை செதுக்கியதில் தொடங்கி உடல் அசைவு மொழி அதுக்கான பவர்னு காக்கிச்சட்டை போட்ட சிங்கமாகவே மாறிப் போனார்.



படத்தில அவர் பெயரே துரைசிங்கம். சாமிக்கும் காக்க காக்கவுக்கும் இடையில் ஒரு பொலிஸ் அலுவலகம் படைச்சா அதுதான் துரைசிங்கம். ஹீரோயினா அனுஷ்காதான் என்று முடிவு செய்தவுடனேயே அவர் நடிச்ச தெலுங்கு, தமிழ்ப்படங்களை எல்லாம் பார்த்து அதுக்கு சிறிதளவு குறையாத அளவில் அவங்க கேரக்டரை அமைச்சு ஸ்கிரீன்பிளே பண்ணினேன்.

அனுஷ்காவும் எதிர்பார்ப்புக்கு மேல் பிச்சு உதறியிருக்காங்க. மொழிதெரியாத ஹீரோயின்களை ப்ராம்ப்ட் பண்ணிப்பேச வைப்போம். ஆனா அனுஷ்கா ப்ளீஸ் கொஞ்சநேரம் கொடுங்க... என்று கேட்டு வசனத்தை மனப்பாடம் பண்ணிட்டு வந்து தங்கமா பேசிடுவாங்க.

வில்லனா பிரகாஷ்ராஜ். அவர் கேரக்டருக்கு மட்டும் ஆல்டர்நேட் நடிகரை யோசிக்கலை. அவரை எப்படியும் கதை சொல்லி அசத்திக் கூட்டிட்டு வந்து வருவது என்று கங்கணம் கட்டி சீன்களை எழுதினேன். போய் ஒரே ஒரு சீன்தான் சொன்னேன். ஓகே... சொல்லிவிட்டு இதில் நான் இருக்கேன்...! என்று என் பட வில்லன்களிலேயே அடிப்படை நியாயங்கள் தவிர்த்து அநியாய வில்லனா வருகிறார் பிரகாஷ்ராஜ். அதோட என்வழக்கப்படியே விஜயகுமார், ராதாரவி, நாசர், யுவராணி, சுமித்ரா, மனோரமான்னு முப்பதுக்குக் குறைவில்லாத நட்சத்திரங்கள் இருக்கிறார்கள். எரிமலையா வருகிற விவேக்குக்கு சாமியைப் போலவே இதுவும் முக்கிய படமாக இருக்கும்.

எனக்கு இது பத்தாவது படம். சூர்யாவுக்கு இருபத்தஞ்சாவது படம். நாங்க இரண்டு பேரும் கைகோர்க்கிற மூன்றாவது படம். அதனால் அவருக்கும் எனக்கும் அடையாளம் தந்த பொலிஸ் படங்களைப் போல இதுவும் ஒரு ஹேட்ரிக்கா அமையும் என்கிறது உறுதி. எல்லா வகையிலையும் இது "சிங்கம் ல?"

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### கருணை உள்ளம் கொண்டு

"ஏப்ரல் எட்டு மட்டும்"
எம்மைச் சுற்றித் திரிந்தவர்கள்
எங்கோ மறைந்துவிட்டார்
இங்கு எமைத் தனியே விட்டு
எஞ்சியவர் ஒன்பது பேர்
எம்மை நாடி வருவாரோ?
கெஞ்சியே கேட்கின்றோம்
தஞ்சம் தந்திடுவீர்
நவரத்தினமாய் உருவெடுத்த
தவரத்தினங்களே கேண்மின்
முள்ளுக்கம்பி வேலியுள்ளும்
புனர்வாழ்வு முகாமதிலும்
பூசாச் சிறையினுள்ளும்
பூட்டிய வெஞ்சிறையில்
புழுங்கும் எம் பிஞ்சுகளும்
வீட்டினில் இருப்பதற்கும்
விருப்பிடம் செல்வதற்கும்
காட்டுவீர் ஓர் வழியை
கருணை உள்ளம்கொண்டு


நடராசா சந்திரலிங்கம்
அச்சுவேலி வடக்கு

### களவு கலைக்கும் வறுமை

அந்த வீட்டு இடும்பைதனை
கலைக்கும் கோழிக் கூட்டம்
எந்த நாளும் ஒவ்வொன்றாக
அடுத்த வீட்டு வறுமையை
கலைக்கின்றன

தென்னல்வை அரிபுத்திரன்

### நினைவலைகள்



எங்கிருந்தோ வந்தோம்
எதிர்பாராது சந்தித்தோம்
காலங்கள் கடந்தாலும்
நேரங்கள் மறைந்தாலும்
பழகிய ஒவ்வொரு நிமிடமும்
உன் நினைவலைகள்
என் மனதைத் தாலாட்டும்
நேற்றைய நினைவுகள்
நிஜங்களாய் நினைவில்
என்றும் நிலைத்திருக்கும்

ப.கலைமகள்
காரைநகர்

### புதுமைப் பெண்ணே போராடு

வாழ்விற்கும் தாழ்வுக்கும் போராடு
உண்மைக்கும் நேர்மைக்கும் போராடு
அன்பிற்கும் பாசத்திற்கும் போராடு
உன்னால் முடியும் போராடு
புதுமைப் பெண்ணே போராடு!

******

அறிவுக்கும் முயற்சிக்கும் வேலைகொடு
தியாகமே வாழ்க்கை போராடு
புத்தம் புது மலராய் போராடு
பாரதியின் புதுமைக்குப் போராடு
புதுமைப் பெண்ணே போராடு!

******

நிமிர்ந்துசெல் தொடர்ந்து செல்
புத்தம் புது யுகம் படைக்க
கண்ணகி போல் போராடு
கணனி யுகத்தில் போராடு
புதுமைப் பெண்ணே போராடு!

ந.பிரதீபன்
கல்வயல்

### இமயம் தொட...

எதிர்கொள்
சாதிப்பாய்...
உன்னில் இருந்து உதிரும்
இலைகளும்
மலர்களும்
உனக்கே உரமாகும்
வாழ்க்கை என்பது
சாதிப்பதற்கே!

மாவை. நா.கஜேந்திரா

### எல்லை மீறிய சந்தோசம்

சின்னச் சின்ன வெளிகள் தாண்டி
என் எண்ணங்களில்
எல்லை மீறிய சந்தோசம்!
வீட்டு வாசலில் வண்டி இறக்க!
அம்மா "மாமா வந்தாச்சு"
என் தங்கையின் சின்னமகள்.
அப்பா என் பொதியை இறக்க!
அம்மா எனை அறிய நாயை அடக்க!
பாட்டி கட்டில் பிடித்தொரு "ச்"
சரி சரி உள்ளே வர விடுங்கோ
என் தங்கைகள்.
வாங்கோ மச்சான் என் தங்கையின் கணவன்!.
சின்னத் தங்கை நிறைமாதப் பூரிப்பில்...
அவள் தலை தடவ அழுதுவிட்டாள்
அவள் கணவன் பூசாவா?
வெலிக்கடையா?
இன்றுவரை தெரியவில்லை
நேர்த்தியான அழகுடன் உள்வீடு!
உள்ளே இருக்கப் பிடிக்கவில்லை
முற்றத்தில் கதிரை போட்டு
அமர்ந்துகொண்டேன்.
சனியன் போக அரப்பு வைத்தாள் பாட்டி!
மூழ்கியிருக்க முடியவில்லை
தொட்டித் தண்ணியுள்ளே
மூச்சடக்க முடியாது எழுந்தேன்!
அடச் ...சீ....
கனவு!.
முகாமில்....
தண்ணிக்கு வரிசையடுக்க வேண்டும்!
நேரம் அதிகாலை 3.30

முருகேசு பகீரதன்

## மௌனத்தின் தேடல் - 15



கோடை வெயிலோ கொடுமை அதில்
எடுக்கும் தாகமோ
கொடுமையிலும் கொடுமை
குந்தியிருக்கும் மந்தியின் கையிலோ
தித்திக்கும் இளநீர் – தாகமும்
சிறிது பசியும் கூடவே போகும்

த.பிருந்தன்

### தாகம் தீர்க்க...

மரம் தாவும் உங்களுக்கு
தாகம் தீர்க்க இளநீர்
மனம் தாவும் எங்களுக்கு
தாகம் தீர்க்க பலநீர்
இப் பலநீர் சிலபேரை
மூழ்கடித்துவிடும்

அ.மயூரன்
கல்வயல்

### மாறாத மூதாதை

நவீன நாகரிக உலகம்
இன்று "பிளாவில்" இருந்து
பிளாஸ்ரிக்குக்கு
மாறிவிட்டது
எல்லாம் சுற்றுச் சூழல்
கேட்டுக்குத்தான்
மென்பானங்களோ
பெயரளவில்தான்
அல்சர் தந்து போகிறன
ஆனால்... நீ
மனிதனின் மூதாதை
இன்றும் இளநீரோடு

- பகலவன் -

### இயற்கை ஜூஸ்

வெய்யிலின் களைப்புத் தீர
ஜூஸ் குடிக்கும் மாந்தர்க்கு
இயற்கை ஜூஸ் இதுவென
இயம்புகிறீரோ குரங்கண்ணா

ஜெ.திவ்யானந்
புனித பத்திரிசியார் கல்லூரி

### இயற்கை மரமதன் பயன்

இயற்கை மரங்களை அழித்து
இன்பம் கொள்ளும் மாந்தர்க்கு
இயற்கை மரமதன் பயனை
இயம்ப விழைகிறீரோ குரங்காரே

ஜோன்சன்
கரவெட்டி

### தாகம்

கொளுத்துகிற வெய்யிலில்
உன் உடல்வேக
தாகத்தின் மத்தியில்
தவித்திடும் வேளை
குளிரான நீராகாரம்
பருகுகிறாயோ?

நவரத்தினம் சதீஸ்
கந்தர்மடம்

### குரங்கு மனம்

எம்மில் இருந்து மனிதன் பிறந்தான்
எம்குணங்களெல்லாம் அவன்
மனதுக்குள் உண்டு
வெக்கை தணிய பானம்
மனத் துக்கம் தணிய ஏது?

மருதங்கேணியூரான்
கைதடி நலன்புரி நிலையம்

சுட்டெரிக்கும் வெயிலை
தாங்க முடியவில்லை
இளநீர் குடிக்கிறார்
குரங்கார் தன்
உடல் சூட்டைத் தணிக்க

சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை

மூதாதையே!
மூத்தகுடி தமிழனுக்கு
குழி நிலம் கூட இல்லை
உனக்கு குடிப்பதற்கு
இளநீர் கிடைத்துள்ளது

து.துவாரகா
சங்கானை

வேருண்ட நீரைத்
தருகின்ற – தென்னை
நீருண்ட குரங்கே!
உடலுண்ணும் புகையை
உயிருண்ணும்–கசிப்பை
உள்வாங்கும்
மனிதனை விட நீயே மேல்
அருங்கொடை புரிந்திங்கு
அருந்திடும் குரங்கே
உன் ஆயுள் அகவை நூறு
வருங்கொடை மறந்திங்கு
மதுவினை உண்டிடும்
மனிதனின் மரணவீதம் நூறு

சரண்ராஜ்
யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி.

## சங்குநாதம் மௌனத்தின் தேடல்- 16



அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 23.04.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# உல்லாசப் பயணிகளின் வருகையை சமாளிக்க அதிக முதலீடுகளை மேற்கொள்ளும் ஹோட்டல்கள்



இலங்கைக்கு வருகைதரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதால், அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் தங்குமிட வசதிகளை ஏற்படுத்தும் வகையில் இலங்கையிலுள்ள முன்னணி ஹோட்டல்கள் மற்றும் தங்கு விடுதிகள் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன.

இலங்கையில் தற்போது இயல்பு நிலை காணப்படுவதால் நாட்டுக்கு வரும்உல்லாசப்பயணிகளின்தொகை விரைவாக அதிகரித்து வருகிறது. இவ் ஆண்டின் முதல் காலாண்டுப் பகுதியில் மாத்திரம் வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 50 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக சுற்றுலாசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குறிப்பாக 2009 மார்ச் மாதத்தில் 34 ஆயிரத்து 65 பயணிகள் இலங்கைக்கு வந்திருந்தனர். ஆனால் இத்தொகை இவ் ஆண்டின் அதே காலப் பகுதியில் 52 ஆயிரத்து 352 பேராக உயர்வடைந்துள்ளதாக சுற்றுலாசபை புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு அதிகரித்த எண்ணிக்கையில்வரும்சுற்றுலாப்பயணிகளை சமாளிக்கும் விதத்திலான நடவடிக்கைகளில் சுற்றுலாத்துறை நிறுவனங்கள் தற்போது மும்முரமாக ஈடுபட்டுள்ளன.நாட்டில்உள்ளமுன்னணி ஹோட்டல்கள் இதன் பொருட்டு பல மில்லியன் கணக்கான ரூபாய்களை முதலீடு செய்துள்ளன.

ஹோட்டல் அறைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் சுற்றுலாப் பயணிகளுக்கு போதுமான தங்குமிட வசதிகளை வழங்குவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

ஏற்கனவே உள்ள அறைகளைப் புதுப்பித்தல், மெருகூட்டி அழகுபடுத்தல், நீச்சல் தடாகங்கள் அமைத்தல், பொழுதுபோக்கு அம்சங்களை அதிகப்படுத்தல் போன்ற முயற்சிகளில் கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள நட்சத்திர ஹோட்டல்கள் தற்போது ஈடுபட்டுள்ளன. மொத்தமாக ஹோட்டல் அறைகளை 15 ஆயிரம் முதல் 22 ஆயிரம் வரை அதிகரிப்பதற்கு நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன.



சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதனூடாக வருவாயை அதிகரித்துக் கொள்ள விரும்பும் இலங்கை, 2016ஆம் ஆண்டளவில் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு வரவழைக்கவும் அதன் மூலம்ஆண்டொன்றுக்கு2பில்லியன் டொலரை வருமானமாகப் பெறவும் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக தடைப்பட்டிருந்த காலி முகத்திடல் மீண்டும் புது வருட காலத்தில் மக்கள் கூட்டத்தால் நிரம்பியிருப்பதையும், சில்லறை வியாபாரம் செய்வோர் மீண்டும் தமது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதையும் ,பின்னணியில் கொழும்புத் துறைமுகத்தின் விஸ்தரிப்பு வேலைகள் நடைபெறுவதையும் காணலாம்.




## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 113.10 | 114.73 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 173.96 | 177.54 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 152.51 | 156.08 |
| சுவிஸ் பிராங் | 106.33 | 108.95 |
| கனேடிய டொலர் | 111.94 | 114.79 |
| அவுஸ்திரேலிய டொலர் | 104.54 | 107.33 |
| சிங்கப்பூர் டொலர் | 81:76 | 83.60 |
| ஜப்பான் யென் | 1.21 | 1.24 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.57 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 31.00 | |

# வடக்குக்கிழக்கின் வர்த்தக,முதலீட்டு வாய்ப்பை புலம்பெயர் தமிழர் பயன்படுத்தவேண்டும்

## ஜேர்மனியிலுள்ள இலங்கை கொன்சலேட் கோரிக்கை



(பேர்லின்)

ஜேர்மனியில் உள்ள கொன்சலேட் அலுவலகம், ஐரோப்பாவில் உள்ள தொழில் முயற்சியாளர்களை குறிப்பாக புலம்பெயர் தமிழர்கள் இலங்கையின் வடக்குக் கிழக்கில் உள்ள வர்த்தக வாய்ப்புக்களை பயன்படுத்துவதை ஊக்கப்படுத்தும் முயற்சிகளை ஆரம்பித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக 50 உறுப்பினர்களைக் கொண்ட வர்த்தகக் குழுவினர் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர். இவர்களுக்கு சிறப்பான அனுசரணை வழங்கப்படும் என அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை 25 பேர் கொண்ட தமிழ் புலம்பெயர் வர்த்தகப் பிரமுகர் குழுவும் எதிர்வரும் ஜூன் 4ஆம் திகதி முதல் 13ஆம் திகதிவரை இங்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இவர்கள் விஜயம் செய்வதன் நோக்கம் இங்கு பிரகாசமான வர்த்தக வாய்ப்புள்ள துறைகளை கண்டறிவதேயாகும் என தூதரக அதிகாரி புத்தி அதாவுட தெரிவித்துள்ளார்.

குறித்த வர்த்தகக் குழு யாழ்ப்பாணம் ,மன்னார்,திருகோணமலை, வவுனியா மற்றும் கற்பிட்டி சுற்றுலா வலயம் போன்றவற்றுக்கு விஜயம் செய்யவுள்ளது. இக் குழு இப் பிரதேசத்தில் உள்ள அரசியல் தலைவர்கள், மதத்தலைவர்கள், அரச அதிகாரிகள் மற்றும் சமூகத் தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும்தமிழ்புலம்பெயர்தொழில் முயற்சியாளர்கள் இவ் விஜயத்தில் இணைந்து கொள்ள முடியும் எனவும் இது குறித்த மேலதிக தகவல்களை consular@sltnet.lkஎன்ற மின்னஞ்சல் மூலமோ , www.srilankaconsulatefrankfurt.comஎன்ற இணையத் தளமூடாகவோ பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 2010இல் சிறந்த வங்கியாக கொமர்ஷல் மீண்டும் தெரிவு



கொமர்ஷல் வங்கி 2010 இல் இலங்கையில் மிகச்சிறந்தவங்கியாக குளோபல் பினான்ஸ் சஞ்சிகையினால் 12ஆவது ஆண்டாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட இந்த சஞ்சிகை இவ்வாறு வங்கிகளை தரப்படுத்துவது இது 17ஆவது ஆண்டாகும்.

இத் தெரிவு குறித்து குளோபல் பினான்ஸின் வெளியீட்டாளர் தெரிவிக்கையில்;

நாம் வங்கிகளுக்கும் அவற்றின் வாடிக்கையாளர்களுக்குமான அசாதாரண சவாலான சூழலில் உள்ளோம். வாடிக்கையாளர்கள் தங்கள் வங்கியியல் பங்காளரிடம் இருந்து முன்னெப்போதும் இல்லாத உன்னத ஆற்றலை எதிர்பார்க்கின்றனர். அந்தத் திறமையை மிகச் சிறந்த வகையில் அளிக்கும் வங்கிகள் இவை எனக் குறிப்பிட்டுள்ளார். 1969-ல் நிறுவப்பட்ட கொமர்ஷல் வங்கி இலங்கையில் 173 கிளைகள் மற்றும் கருமபீடங்களைக் கொண்டுள்ளது..



பெரும்பாலான இலங்கை மக்கள் சராசரிக்கும் குறைவான வாழ்க்கைத் தரத்திலேயே காலம் கடத்துகின்றனர்.இந்நிலையில் அண்மையில் மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட ஆண்டறிக்கையில், இலங்கையர் ஒருவரின் தலா வருமானம் 2 ஆயிரத்து 53அமெரிக்க டொலர் (ரூ.2இலட்சத்து 35 ஆயிரத்து 945) எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.ஆனால் 41.6 சதவீதமான மக்கள் நாளொன்றுக்கு 2 டொலரிலும் குறைவான வருமானத்தையே பெறுகின்றனர்.(ஆண்டுக்கு 84 ஆயிரம் ரூபாய்) இதேவேளை 15.2 வீதமான மக்கள் ஆண்டுக்கு 27 ஆயிரம் ரூபாயுக்கும் குறைவான வருமானத்தையே பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | புள்ளி | அதிகரிப்பு/ குறைவு |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 3966.87 | 11.04 |
| மிலங்கா விலைச்சுட்டி | 4517.74 | (2.74) |
| புரள்வு (ரூபா.மில்லியன்) | 1105.35 | |

***உயர்வடைந்த பங்குகள்*** : ஜோன் கீல்ஸ் ஹோட்டல்ஸ்,ரான்ஸ் ஏசியா ஹோட்டல்ஸ் ,லங்கா ஓரிக்ஸ் லீசிங் ,ஹேமாஸ் ஹோல்டிங் ,கார்ஷன்ஸ். ***சரிவைக் காட்டிய பங்குகள்***: என்வெயர்மென்டல் றிசோசஸ் ,சிலோன் ரொபாக்கோ ,எச்.என்.பி.,சிலோன் இன்வெஸ்மென்ட் ,என்.டி.பி.

# இந்தியாவின் பொருளாதாரம் 8.2 சதவீதமாக வளர்ச்சி அடையும்

## ஆசிய அபிவிருத்தி வங்கி மதிப்பீடு ADB

இந்தியாவில் பணவீக்கம் அதிகரித்து வருவது ஒரு சவாலாக அமைந்துள்ளது.எனினும் இது போன்ற தடைக்கற்களை எதிர்கொண்டு, பொருளாதார வளர்ச்சியை எடுத்துக்காட்டும் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி,நடப்பு 2010ஆம் ஆண்டில் 8.2 சதவீதமாக வளர்ச்சி அடையும் என ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மதிப்பீடு செய்துள்ளது.

### முன்னேற்றப் பாதை

ஆசிய அபிவிருத்தி வங்கி வெளியிட்டுள்ள ஆண்டறிக்கையில், உலகப் பொருளாதார வீழ்ச்சியில் இருந்து இந்தியா அதிவேகமாக மீண்டு ,முன்னேற்றப் பாதைக்கு திரும்பியுள்ளது. இதற்கு இந்திய அரசாங்கம் வழங்கிய சலுகைத் திட்டங்களே காரணமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாடுகளில் பொருட்களின் விற்பனையில் வளர்ச்சி ஏற்பட இன்னும் சில காலம் ஆகும். அதே சமயம் இந்தியாவில் தேவைப்பாடு மிகவும் அதிகரித்து வருகிறது. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி வேகமாக உள்ளது என்று சர்வதேச நாணய அமைப்புக்கள் மதிப்பீடு செய்துள்ளன. இதனால் இந்தியாவில் வெளிநாட்டு நிறுவனங்களின் முதலீடு வியக்கத்தக்க வகையில் அதிகரித்து வருகிறது.

வரும் 2011ஆம் ஆண்டில், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 8.7 சதவீதமாக இருக்கும் என்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

### பருவமழை

அதேசமயம் , இந்தியாவில் பருவ மழை பெய்யாததால் பணவீக்கம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. பெட்ரோல் மற்றும் டீசல் விலை மேலும் உயரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.விவசாயத்துறை உற்பத்தியும் சரிவடைந்துள்ளது.இக் காரணிகள் இந்தியா எதிர்பார்க்கும் பொருளாதார வளர்ச்சிக்கு சவாலாக அமையும் என ஆசிய அபிவிருத்தி வங்கி மேலும் தெரிவித்துள்ளது.

## அமெரிக்காவை இந்தியா முந்தும்

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி வீதம் தொடர்ந்து ஆண்டுக்கு 8 முதல் 9 சதவீதத்தை தக்க வைத்துள்ளது. இதன் பயனாக தனிநபர் சராசரி வருமானம் 22 மடங்கு உயர்ந்து, சுமார் 41 ஆயிரத்து 500 இந்திய ரூபாயிலிருந்து, 2039 ஆம் ஆண்டளவில் ரூ.9 இலட்சத்து 68 ஆயிரம் ஆக இருக்கும். இந்நிலையில் பொருளாதார வளர்ச்சியில் அமெரிக்காவை இந்தியா முந்தும் என்று உலக வங்கியின் முன்னாள் இயக்குநர் ஹரிந்தர் கோக்லி தெரிவித்தார்.

கு.முருகதாஸ்

# விகிர்தி வருடம் உங்களுக்கு எப்படி?

## கடகம்

(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)

**கட்டளையிட்டால் செய்யக் காத்திருக்கும் பலபேரை கைக்குள் வைத்திருக்கும் கடக ராசி நேயர்களே!**

பொதுநலத்தில் ஆர்வம் கொண்டிருக்கும் உங்களுக்கு இந்த புத்தாண்டு புதிய பொறுப்புகளையும், பதவிகளையும் வழங்கப் போகிறது. மதிப்பும், மரியாதையும் உயர்ந்து, விரோதிகள் விலகி, வெற்றிக்கனியை எட்டிப்பிடிக்கும் விதத்தில் "விகிர்தி" ஆண்டு அமையப் போகிறது.

உங்கள் இராசிநாதனாக சந்திரன் விளங்குவதால், சிந்தனை ஆற்றல் உங்களுக்கு அதிகம் உண்டு. மந்திரி முதல் மக்கள் வரை எல்லோரையும் பழகி வைத்திருப்பீர்கள். வந்தவர்களுக்கு ஆலோசனை சொல்வதிலும் வல்லவர்கள்.

பாட்டாளிகளின் பிரச்சினை முதல் பாராளுமன்ற பிரச்சினை வரை அலசி ஆராயும் உங்களுக்கு அஷ்டமத்து குருவின் ஆதிக்கத்தோடு தொடங்கும் புத்தாண்டில் வரவும் - செலவும் சமமாகும் விதத்திலேயே கிரகங்கள் உலா வருகின்றன.

சித்திரை 19 ஆம் திகதி அதிச்சாரமாக ஒன்பதாமிடத்தில் சஞ்சரிக்கப் போகும் குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால், நல்ல பலன்கள் இல்லம் தேடி வரப்போகின்றன.

நவக்கிரகங்களில் "மாதா காரகன்" என்று வர்ணிக்கப்படுபவர் சந்திரனாகும். அதற்கு மற்றொரு பெயர் "மதி" என்று அழைப்பர். மதிப்பும், மரியாதையும் இந்த மதியின் மூலமாகத் தான் கிடைக்கிறது.

எந்தவொரு செயலைச் செய்தாலும், ஏன் செய்கிறோம்? எதற்குச் செய்கிறோம்? என்று அறிவுபூர்வமாக, நீங்கள் சிந்தித்துச் செயல்படுவதால் தான், சந்திக்கும் காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கிறது.

மற்றவர்கள் செய்ய முடியாது என்று விட்டுவிட்ட காரியங்களைக்கூட நீங்கள் கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல் முடித்துக் காட்டுவீர்கள். பொது நலத்தில் அதிக அக்கறை காட்டுவதோடு, தலைமைப் பதவிக்கும் தகுதியானவர்கள் என்பதை நிரூபித்துக் காட்டுவீர்கள். மூளை பலத்தையே மூல பலமாகக் கொண்ட நீங்கள், வாழ்வை வளமாக்கி கொள்வதோடு மற்றவர்கள் வாழவும் வழிகாட்டுவீர்கள்.

சந்திரனின் பலத்தையும், சூரியனின் பலத்தையும் பொறுத்தே உங்கள் வாழ்க்கை எப்படி அமையும் என்பதை தெரிந்து கொள்ள இயலும். குருவின் பார்வை உங்கள் இராசியில் பதியும் பொழுது 'குருச்சந்திர யோகம்' செயல்படும். இவற்றையெல்லாம் நீங்கள் உங்கள் சுய ஜாதகத்தின் ரீதியாக அறிந்து கொண்டு பரிகாரத்தைச் செய்தால் பலன் தரும் வாழ்க்கை வந்து சேரும். பணவரவும் திருப்தி தரும்.

உங்கள் சுய ஜாதகத்தில் யோகம் தரும் கிரகம் எது என்பதை ஆராய்ந்து பார்த்து அதன் பாதசார அடிப்படையில் கிரகத்திற்குரிய எண் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும் உங்கள் தொழில் நிலையத்தின் பெயரையும் அமைத்துக் கொண்டால் எதிர்காலம் இனிமையாக அமையும்.

ஆண்டின் தொடக்கத்தில் இராசியிலேயே செவ்வாய் நீச்சம் பெறுகிறார். இராசிநாதன் குருவோ, ஒன்பதாமிடத்தில் சஞ்சரிக்கிறார். ஐந்தும், ஒன்பதும் மிஞ்சும் பலன் தரும் என்பதால் இந்தாண்டு உங்களுக்கு மிதமிஞ்சிய பொருளாதாரம் ஏற்படப் போகிறது. ஆண்டின் தொடக்கத்தில் அஷ்டமத்துக் குருவின் பார்வை இரண்டாமிடத்தில் பதிவதால் குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் ஏராளமாக நடைபெறும்.

அஷ்டமத்துக் குருவால் அலைச்சல்கள் அதிகரித்தாலும், ஆதாயமும் கிடைக்கும். எந்தச் செயலையும் ஒரு முறைக்கு இரு முறை செய்யக்கூடிய சூழ்நிலை உருவாகலாம். மனக்கசப்புதரும் செய்திகள் வந்து சேரும். திடீர் இடமாற்றங்களையும், ஊர்மாற்றங்களையும் சந்திக்க நேரிடலாம்.

ஏழரைச்சனி விலகினாலும், சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி வக்ரம் பெறுவதால் ஆலயங்களை நோக்கி நீங்கள் அடியெடுத்து வைக்க வேண்டியது அவசியமாகும். யோக பலம் பெற்ற நாளில் செய்யும் ஸ்தல வழிபாடு உங்களுக்கு யோகத்தை வரவழைத்துக் கொடுக்கும்.

ஆறில் இராகு இருப்பது உங்களுக்கு யோகம்தான் என்றாலும், விரய ஸ்தானத்தில் கேது அல்லவா? சஞ்சரிக்கிறார். எனவே, வீண் விரயங்களும், பயணங்களும் அதிகரிக்கும்.

நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ள எடுத்த முயற்சி வெற்றி பெறும் என்றாலும், செல்லும் இடத்தில் நிம்மதி குறையும். பழைய இடத்திற்கே வருவோமா என்ற சிந்தனை மேலோங்கும்.

மீன ராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது ஒன்பதாமிடம் பலம் பெறுகிறது. அது குருவுக்கு சொந்த வீடாகும். அங்கு இருந்தபடியே உங்கள் இராசியையும், உங்கள் இராசிக்கு மூன்றாமிடம், ஐந்தாமிடம் ஆகியவற்றையும் பார்வையிடுவர்.

ஒன்பதில் குருவும் வந்தால், உயர்வுகள் வந்து சேரும்! நண்பர்கள் ஒத்துழைப்பால், நலம்யாவும் வந்து கூடும்! இன்பத்தின் எல்லை காணும் இனியதோர் வாழ்வு கிட்டும்! பொன்னான தொழில் தொடங்க புதுப்பாதை அமையும்! உண்மை!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது பொன்னான எதிர்காலத்தை மன்னவன் குரு உங்களுக்கு அமைத்துக் கொடுப்பார். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும்.

மங்கல நிகழ்ச்சிகளை முன்னிட்டு மகத்தான பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். உடன்பிறப்புகள் உங்களுடன் விட்டுக் கொடுத்துச் செல்வர். புத்திர விருத்திக்காக ஏங்கிய தம்பதியர்களுக்கு பொன்னான குழந்தைப் பேறு வாய்க்கும். பூர்வீக சொத்துக்களால் இலாபம் கிட்டும்.

கடல் தாண்டும் முயற்சி கைகூட கன்னி இராசியைப் பார்க்கும் குரு உங்களுக்கு கை கொடுக்கப் போகிறார். இடைஇடையே ஏற்பட்ட தகராறுகள் அகலவும் எதிர்காலத்தை நீங்கள் இனியதாக மாற்றிக்கொள்ளவும் பார்க்கும் குருவை நீங்கள் பலப்படுத்த வேண்டும்.

எனவே குரு வழிபாட்டை முறையாக மேற்கொண்டு அதன் அருட்பார்வையால் அனைத்துக் காரியங்களிலும் வெற்றி காணலாம்.

மூன்றில் சனி வந்தால் தோன்றும் புதிய தொழில் தொகை வரவும் பெருகும் என்பர். எனவே புதிய தொழில் தொடங்குவதற்கான அறிகுறிகள் தோன்றும். அடிப்படை வசதிகளை பெருக்கிக் கொள்வீர்கள். அதைப் பார்க்கும் கிரகமாகக் குரு விளங்குவதால் வழக்குகளில் வெற்றி கிட்டும். வந்த பிரச்சினைகள் தீரும்.

குழந்தைகளின் முன்னேற்றம் கருதி ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். வாக்குவாதங்களால் கோபமாக இருந்த மேலதிகாரிகள் குணத்தை மாற்றிக் கொள்வர். வெளிநாட்டில் இருந்து வியக்கும் செய்தி வந்து சேரும். சொந்த வீடு கட்டிக் குடியேறும் எண்ணத்தைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

வருடத் தொடக்கம் முதல் வைகாசி 12 வரை சனி வக்ரம் பெறுகிறார். மீண்டும் தை 8 ஆந் திகதி முதல் பங்குனி 30 ஆந் திகதி வரை வக்ர இயக்கத்தில் சனி சஞ்சரிக்கிறார். உங்கள் இராசிக்கு 7 8க்கு அதிபதியாக விளங்கும் சனிபகவான் வக்ரம் பெறும் பொழுது நற்பலன்களைக் கொடுப்பாரா? என்பது சந்தேகம்தான்.

அஷ்டமாதிபதி வக்ரம் பெற்றால் நன்மை கிட்டும். சப்தமாதிபதி வக்ரம் பெற்றால் சந்தோசம் குறையும் அல்லவா? குடும்பத்தில் அனைவரையும் ஆதரித்துச் சென்றால் தான் ஆதாயத்தை அடைய முடியும். வருமானம் ஒரு பக்கம் வந்தாலும் செலவு நடைகள் அதிகரிக்கும். அலுவலகப் பணிகளில் தேக்க நிலை உருவாகும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வீண் செலவுகள் ஏற்படலாம். சனிபகவானை வழிபட்டுவருவது நல்லது.

வாழ்வில் கசந்த காலங்கள் எல்லாம் வசந்த காலங்களாக மாற வேண்டுமானால் யோகாதிபதி பலம் பெற்றுச் சஞ்சரித்து உங்கள் இராசியைப் பார்க்க வேண்டும். அது போன்ற காலங்கள் அபூர்வமான காலங்களாகும்.

அந்த நேரம் தான் மார்கழி 22 ஆந் திகதி முதல் தை 29 வரை செவ்வாய் உச்சம் பெறும் காலமாகும். மங்கலச் செவ்வாய் உச்சம் பெறும் பொழுது தங்கு தடைகள் அகலும். தனவரவு கூடும். பங்காளிகள் விரோதம் விலகும். பார்க்கும் இடமெல்லாம் புகழ் பெருகும்.

சித்திரை மாதம் 19 ஆந் திகதி (02.05.2010) முதல் ஐப்பசி மாதம் 20 ஆந் திகதி (06.11.2010) வரை மீன இராசியில் அதிச்சாரமாக குரு சஞ்சரிக்கப் போகிறார். ஐப்பசி 21 ஆந் தேதி (07.11.2010) முதல் கார்த்திகை 4 ஆந் தேதி (20.11.2010) வரை கும்ப இராசியில் குரு வக்ர இயக்கத்தில் சஞ்சரிக்கிறார். கார்த்திகை 5 ஆந் திகதி மீண்டும் மீன ராசியில் குரு முறையாகச் சஞ்சரிக்கப் போகிறார். இந்தப் பொன்னான குருவின் சஞ்சாரம் என்னென்ன மாற்றங்களை உருவாக்கும் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

வருடத் தொடக்கத்தில் எட்டாமிடத்தில் சஞ்சரிக்கும் குரு அங்கிருந்தபடியே 2, 4, 12 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். எனவே அந்த இடங்களெல்லாம் புனிதமடைகின்றன. அஷ்டமத்துக் குருவாக இருந்தாலும் அதன் பார்வை பதியும் இடங்கள் எல்லாம் புனிதமடையும் என்பதால் குடும்பத்தில் தடைப்பட்ட காரியங்கள் தடையின்றி நடைபெறும். தனவரவு தாராளமாக வந்து சேரும். இனத்தார் பகை மாறும். இடமாற்றங்கள் இனிமை தரும்.

சிவாலயம் சென்று அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். வைரவர் வழிபாடு மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

**சிவல்புரி சிங்காரம்**

விகிர்தி ஆண்டில் விவாகப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும். வேலை வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு வேலை கிடைக்கும். மேலதிக வருமானங்கள் பெருகும். அரசியலில் கூட அடியெடுத்து வைக்கலாம். அந்நிய தேசத்திற்கு எண்ணியபடியே பயணம் உருவாகும்.

பிரிந்த தம்பதியர் இணைவர். பிற்கால வாழ்க்கைக்கு ஏற்ற விதத்தில் வங்கிச் சேமிப்பை உயர்த்திக் கொள்வீர்கள். இராகு-கேதுவை முறையாக வழிபட்டால் முன்னேற்றத்திற்கு உதவும். (தொடரும்)

# மழையுடன் வீசிய மினி சூறாவளி கிளிநொச்சியில் 70வீடுகள் சேதம்

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தின் சில பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் மழையுடன் வீசிய மினி சூறாவளி காரணமாக சுமார் 70 வீடுகள் சிறு சிறு சேதங்களுக்குள்ளாகியுள்ளதாக கிளிநொச்சி அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

பிற்பகல் 1.30 மணியிலிருந்து 2 மணிக்கிடையில் சில நிமிடங்கள் வீசிய இந்த மினி சூறாவளியினால் உதயநகர், திருநகர், கனகபுரம், கணேசபுரம் ஆகிய மீள்குடியேற்ற கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கிராமங்களில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் அமைந்துள்ள தகரக் கொட்டில் போன்ற வீடுகள் காற்றினால் அள்ளுண்டு சென்றுள்ளன.

பின்னர் இராணுவத்தினருடன் பொதுமக்களும் இணைந்து அந்த வீடுகளை மீளமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இருந்தபோதும் இந்த சூறாவளியினால் பொதுமக்களுக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படவில்லை என்று தெரிய வருகின்றது. (2-6)

## நீர்ச்சுத்திகரிப்பு இயந்திரங்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு சபையில் பணிபுரியும் கணக்காளர் தி. ஞானசீலன் என்பவரால் நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் இரண்டு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இவற்றில் ஒன்று கூட்டுறவு சபையின் பணிமனைக்கும் மற்றையது அச்சகத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது. (6-22)

# தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவி ஒன்றை கோரும் தேசிய தொழிலாளர் ஒன்றியம்

(கொழும்பு)

தேசிய தொழிலாளர் ஒன்றியம் தேசியப் பட்டியல் ஆசனமொன்றை கோரி நிற்பதாகத் தெரிய வருகிறது.

இதன் சார்பில் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் இரண்டு வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

கட்சியின் தலைவர் பழனி திகாம்பரம் மற்றும் நிதிச் செயலாளர் உதயகுமார் ஆகியோர் போட்டியிட்டதுடன் தேசியப் பட்டியல் வேட்பாளராக ம. திலகராஜா பெயரிடப்பட்டிருந்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணியின் கீழ் போட்டியிட்ட தேசிய தொழிலாளர் ஒன்றியம் ஒரு ஆசனத்தையே பெற்றுக் கொண்டது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மாகாண சபைத் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிகளுக்காக அளித்த பங்களிப்பை கருத்திற் கொண்டு தமக்கு தேசியப் பட்டியல் ஆசனமொன்று வழங்கப்பட வேண்டுமென அதன் தலைவர் ஐக்கிய தேசியக் கட்சியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நெருக்கடியான நேரங்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளித்துள்ள காரணத்தினால் தமக்கு இதனை வழங்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலின் போது பெருந்தோட்ட மக்கள் உரிய முறையில் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை எனவும் ஆளும் கட்சியுடன் இணைந்து போட்டியிட்ட சில தரப்பினர் பெருந்தோட்ட மக்களை வாக்களிக்க விடாது தடுத்ததாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

(2-6)

## புங்குடுதீவு அம்பாள் கல்வி நிலையத்தை பார்வையிட்ட அமைச்சர் டக்ளஸ்

(வேலணை)

வறிய மாணவர்களின் கல்வி மேம்பாடு கருதி புங்குடுதீவில் அமைக்கப்பட்டு நடாத் தப்படும் அம்பாள் கல்வி நிலையத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அண்மை யில் நேரடியாக சென்று பார்வையிட்டுள்ளார்.

அவரின் நிதிப்பங்களிப்புடனேயே இவ் அம்பாள் கல்வி நிலையம் இயக்கப்படுகின் றது. (2-22)

## சிறுகதை நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஜீவநதி வெளியீடும் அ.விஸ்ணுவர்த் தினியின் *மனதில் உறுதி வேண்டும்* சிறுகதை நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கொற்றாவத்தை சித்தி விநாயகர் ஆலய திருக்கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய கல்வியிற் கல்லூரி சிரேஸ்ட விரிவு ரையாளர் பா. தனபாலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நூல் வெளியீட் டுரையை எழுத்தாளர் தெணியானும் மதிப் பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக விரிவு ரையாளர் இ.இராஜேஸ்கண்ணன், எழுத்தா ளர் அஜந்தகுமார் ஆகியோரும் நிகழ்த்த வுள்ளனர். (6)

## புத்தாண்டுக் கலைவிழாவும் மாணவர் கௌரவிப்பும்

(யாழ்ப்பாணம்)

வலிகிழக்கு சைவசமய அருள் நெறிமன் றம் நடத்தும் புத்தாண்டு கலை விழாவும் மாணவர் கௌரவிப்பும் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு கோப்பாய் வீர பத்திரர் கோயிலில் நடைபெறவுள்ளது.

காசைதநாவாதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை. நித்தி யானந்த சர்மா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்கந்த ரோதயாக் கல்லூரி அதிபர் செஞ்சொற் செல் வர் ஆறுதிருமுருகன் கலந்து சிறப்பிக்க வுள்ளார். நிகழ்வில் பட்டிமன்றம், வில்லிசை போன்ற கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள் ளன. (6)

# அந்தியேட்டிமடம் இன்மையால் சிரமத்துக்குள்ளாகும் மக்கள்

(வேலணை)

நீண்டகாலமாக இறந்தவர்களுக்கு பிதிர் கடன் (அந்தியேட்டி) செய்துவந்த வேலணை வெள்ளைக் கடற்கரையில் அமைக்கப்பட்டி ருந்த அந்தியேட்டி மடத்தை வேலணை பிரதேச சபையினர் மூடிக்கட்டி(அறை) கடலில் குளிக்கும் பெண்களின் உடை மாற்றும் மறைப்பிடமாக பயன்படுத்த விட்டுள்ளனர்.

இதனால் இப்பகுதி மக்கள் இறந்த ஆத் மாக்களுக்காக அந்தியேட்டி செய்யமுடி யாமல் சிரமப்படுகின்றனர். முன்னைய அந் தியேட்டி மடத்துக்கு பதிலாக புதிய அந்தியேட்டி மடம் சாட்டி இந்துமயானத்துக்கு அருகில் கட்டப்பட்டு தருவதாக உறுதிமொழி வழங் கப்பட்டது.

ஆனால் இன்னும் கட்டப்படவில்லை யென்றும் அந்தியேட்டி மடம் இல்லாமல் தாம் சிரமப்படுவதாக இப்பகுதி மக்கள் விசனம் அடைந்துள்ளனர்.

எனவே பிரதேச சபையினர் இதில் கவனம் செலுத்தி இக்குறையை உடன் நிவர்த்தி செய்து தருமாறு கோரிக்கை விடுகின்றனர். (2-22)

## கம்பங்களில் வாகனங்கள் மோதுவதால் துண்டிக்கப்படும் தொலைபேசி இணைப்புகள்

யாழ் நகரிலுள்ள சிறிலங்கா ரெலிக்கோம் தொலைபேசி இணைப்பு வயர்களின் காவி யாகவுள்ள சீமெந்து கம்பங்களில் வாகனங் கள் முட்டி விபத்துக்களுள்ளாவதால் தூண்கள் முறிந்தும் சரிந்தும் விழுவதால் இதில் இணைக் கப்பட்டுள்ள தொலைபேசி இணைப்பு வயர் கள் அடிக்கடி அறுந்து விடுகின்றன. இதனால் தொலைபேசி பயனாளிகள் மிகவும் அசௌ கரியத்துக்குள்ளாகின்றனர்.

குறிப்பாக காங்கேசன்துறை வீதி, முற்ற வெளிப்பகுதி, நாவலர் வீதி போன்ற பகுதிக ளில் தான் இவ்வாறான அனர்த்தம் நிகழ் கின்றது என ரெலிக்கோம் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர். (2-22)

## பெறுபேறுகளை கண்காணித்தல் தொடர்பான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

நிதி ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட வலயங்களுக்கு நடைபெறவுள்ள பெறுபேறு களை கண்காணித்தல் தொடர்பான செயல மர்வு எதிர்வரும் 19, 20 ஆம் திகதிகளில் கொழும்பு ராஜகிரிய ஹோட்டலில் நடை பெறவுள்ளது.

இவ்விருநாட்களிலும் காலை தொடக்கம் மாலை வரை இடம்பெறும் இச்செயலமர்வின் போது யாழ்ப்பாணம், வலிகாமம் போன்ற வலயங்களும் பங்குபற்றவுள்ளன.

மேலும் பாடசாலை பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு கண்காணித்தல் எனும் ரீதியில் இச்செயலமர்வுகள் நடைபெற வுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப் பாளர் தெரிவித்தார். (4-30)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

மஹோற்சவத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தோற்ச வமும் பிற்பகல் 5.30 மணிக்கு கொடியி றக்கமும் நடைபெறவுள்ளது. (6)

* * * * *

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை அராலி மத்தி அருள் மிகு உலோலைசிட்டி விநாயகர், ஆலய வரு டாந்த மஹோற்சவம் நாளை திங்கட் கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடை பெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 26 ஆம் திகதி மாலை 5 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 27 ஆம் திகதி செவ்வாய்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த் தோற்சவமும் மாலை 5 மணிக்கு கொடி யிறக்கமும் நடைபெறவுள்ளது. (6)




## தேசிய நர்த்தனப் போட்டித்தொடர்-2010 மாவட்டமட்ட போட்டி முடிவுகள்

காலாசார அலுவல்கள் திணைக்களத் தினால் யாழ். இந்துக் கல்லூரியில் நடத்தப் பட்ட சிவ மகா கங்கா நர்த்தனப் போட்டித் தொடரின் முதலாவது சுற்றுப் போட்டியில் யாழ். மாவட்டத்தில் வெற்றி பெற்ற கலாமன் றங்கள் மற்றும் பாடசாலைகளின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அவற்றின் விபரம் வருமாறு,

**சிறுவர் பிரிவு**

**பதம் - தனி நடனம்**

முதலாமிடம் - (தொண்டைமானாறு அபிநயசுரபி கலாமன்றம்) இரண்டாமிடம் - (யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**கனிஷ்ட பிரிவு**

**பதம் - தனி நடனம்**

முதலாமிடம் - (உரும்பிராய் கலைக் கோவில் கலாமன்றம்), (யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**கவுத்துவம் குழு நடனம்**

முதலாமிடம் - (உரும்பிராய் கலைக் கோவில் கலாமன்றம்), இரண்டாமிடம் - (யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**சிரேஷ்ட பிரிவு**

**கவுத்துவம் - தனி நடனம்**

முதலாமிடம் - (கலாபவனம், கொக்குவில்).

**அஷ்டபதி / ஜாவளி தனி நடனம்**

முதலாமிடம் - (உரும்பிராய் கலைக் கோவில் கலாமன்றம்). இரண்டாமிடம் - (தொண் டைமானாறு அபிநயசுரபி கலாமன்றம்).

**தில்லானா - குழு நடனம்**

முதலாமிடம் - (உரும்பிராய் கலைக் கோவில் கலாமன்றம்), இரண்டாமிடம் (தொண் டைமானாறு அபிநயசுரபி கலாமன்றம்), மூன்றாமிடம் - (பொன்னாலை சந்திரபரத கலாலயம்).

**திறந்தவெளிப்போட்டி**

**தாண்டவலாஸ்யம் - தனி நடனம்**

முதலாமிடம் - எஸ். ஸ்ரீகண்ணன் (கலாப வனம், கொக்குவில்), இரண்டாமிடம் - (ம. தபேந்திரன் (கலாபவனம், கொக்குவில்).

**கிராமிய நடனம் 12 வயதுக்கு மேற்பட்டோர்.**

**குழு நடனம்**

முதலாமிடம் - (பொன்னாலை சந்திரபரத கலாலயம்), இரண்டாமிடம் - (புருத்தித்துறை மாதனை மாகாளி கலாமன்றம்). (6)

## மக்கள் வங்கியின் வனிதாவாசனா சீட்டிழுப்பில் பரிசுபெறுவோர் விபரம்

யாழ். பிரதேசத்தில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் புதுவருட தினத்தன்று நடத்தப் பட்ட வனிதா வாசனா 2010 சீட்டிழுப்புக்களில் ஒவ்வொரு மக்கள் வங்கி கிளைகளிலும் பரிசில் வென்ற அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரங்கள் வருமாறு,

**ஸ்ரான்லி வீதிக்கிளை**

ரி. தேவமலர் (31111, ரூ. 1,000), எஸ். சௌந்தரராணி (16101, ரூ. 25,000), எஸ். நாதிகா (31026, ரூ. 1,000).

**காங்கேசன்துறைக் கிளை**

வி. முகுந்தினி (37606, ரூ. 5,000), எஸ். கௌசலா (16163, ரூ. 25,000), எஸ். வசந்தாதேவி (31994, ரூ. 1,000), எஸ். சிவந்தினி (37534, ரூ. 5,000).

**யா/பிரதான வீதிக்கிளை**

எம். அன்னமேரி றெனோல்டா (31702, ரூ. 1,000), என். லிங்கேஸ்வரி (16202, ரூ. 25, 000), ஆர். ஆன்சோபியா (31745, ரூ. 1,000), சி. லொயோலா றெஜிற் (37865, ரூ. 5,000).

**ஊர்காவற்றுறைக் கிளை**

ஆர். ஜெனிஃபா (37912, ரூ. 5,000), ஜ. சுசீதா (31764, ரூ. 1,000).

**நெல்லியடிக்கிளை**

ஆர். செந்தினி (38151, ரூ. 5,000), ஆர். சிறிலதா (38206, ரூ. 5,000), கே. செல்லபாக்கியம் (38056, ரூ. 5,000), வை. நஜினா (16259, ரூ. 25,000).

**அச்சுவேலிக் கிளை**

ரி. ராஜலக்மி (38277, ரூ. 5,000) கே. கமலா (38359, ரூ. 5,000), எஸ். உமாராணி (38262, ரூ. 5,000).

**சங்கானைக்கிளை**

எஸ். கோணேஸ்வரி (16148, ரூ. 25,000), எஸ். சோமலேஸ்வரி (38585, ரூ. 5,000), கே. சாந்தகுமாரி (32748, ரூ. 1000), ஆர். ரோகிணி (32585, ரூ. 1,000) ஏ. நேசமலர் (38417, ரூ. 5,000, ஜி. திருமலர் (38545, ரூ. 5,000), எம். அன்னமேரி (37402, ரூ. 5,000), பி. ஜெயமலர் (38403, ரூ. 5,000).

**சுன்னாகக் கிளை**

பி. யசோதா (16405, ரூ. 25,000), என். சிவமலர் (32784, ரூ. 1,000), ஆர். நவ லக்சுமி (37113, ரூ. 5000), எம். ராஜகுமாரி (16373, ரூ. 25,000).

**சாவகச்சேரிக் கிளை**

வி. சறோஜினிதேவி (38894, ரூ. 5000, 38973, ரூ. 5,000), எம். சுதர்சினி (33133, ரூ. 1,000), கே. சிவகாமி (16433, ரூ. 25,000), பி. தஸ்சமலர் (33131, ரூ. 1,000).

**வல்வெட்டித்துறைக் கிளை**

எஸ். சகுந்தலை (39276, ரூ. 5,000), ஆர். கிருஷ்ணலதனா (16471, ரூ. 25,000), எஸ். அகிலா (33406, ரூ. 1,000), ரி. சர ண்யா (39713, ரூ. 5,000).

**யாழ். பல்கலைக்கழகக் கிளை**

ஆர். மணிமேகலை (39378, ரூ. 5,000), சி. யதுசலா (39394, ரூ. 5,000).

**கன்னாதிட்டிக்கிளை**

ஜெ. சூரியகலா (37161, ரூ. 5,000).

**பருத்தித்துறைக் கிளை**

கே. சிவந்தினி (11169, ரூ. 100,000), ஜெ. உஷாந்தினி (34093, ரூ. 1,000).

மேற்படி அதிர்ஷ்டசாலிகளை பாராட்டுவ துடன் அவர்களை அவர்களிற்குரிய கிளை முகாமையாளர்களுடன் தொடர்பு கொண்டு தங்களது வைப்புக்களை இரட்டிப்பாக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். (2)

## மெதடிஸ்த திருச்சபையின் பணி மிகவும் பாராட்டுக்குரியது

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

கௌரவமான முறையில் இலங்கைத் திருநாட்டில் சமாதானத்திற்கான முயற்சி களை மேற்கொண்டு வருகின்ற மெதடிஸ்த திருச்சபையின் பணியை தான் மதிப்பதாக வும் அதனைப் பாராட்டுவதாகவும் இந்த உய ரிய முயற்சிக்கு தான் பக்கபலமாக இருப்ப துடன் தனது உதவிகள் தொடர்ந்து கிடைும் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற் றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த புதன் மாலை யாழ். மத்தியக் கல் லூரி மைதானத்தில் இலங்கை மெதடிஸ்த திருச்சபையினால் ஒழுங்கு செய்யப்பட்டி ருந்த ஜெப மாநாட்டில் கலந்து கொண்டு கருத் துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மேற்படி ஜெப ஆராதனை மாநாட்டில் இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் திருச்சபைகளின் சிங்கள, தமிழ், பர்கர் என பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டமை குறிப் பிடத்தக்கது. (2-6)

## தேர்தல் முறையில் மாற்றம் வேண்டும்

# சிறுபான்மை மக்களின் பிரதிநித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்-ஐ.தே.மு.

(கொழும்பு)

ஏற்றுக்கொள்ளக்கூடிய புதிய தேர்தல் முறைமை ஒன்றுக்கு ஐக்கிய தேசிய முன்னணி ஆதரவு வழங்கும். அதாவது சிறுபான்மை மக்களின் பிரதிநித்துவங்களும் உறுதிப்படுத்தப்படும் வகையில் தேர்தல் முறை மாற்றம் அமைய வேண்டும் என்று ஐ.தே முன்னணியின் உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

தேர்தல் முறைமை மாற்றம் குறித்து ஐக்கிய தேசிய முன்னணி எவ்வாறான நிலைப்பாட்டில் இருக்கின்றது என்பது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

தற்போது நடைமுறையில் இருக்கும் பிரதேசவாரியான தேர்தல் முறைமையை மாற்றியமைக்க வேண்டும் என்று அரசாங்கம் கூறிவருகின்றது. அதற்கான ஏற்பாடுகளை செய்யவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு முக்கியமான விடயம் யாதெனில் தற்போதைய தேர்தல் முறைமையில் மாற்றம் வேண்டும் என்று ஐக்கிய தேசிய முன்னணியும் கருதுகின்றது.

அதாவது தற்போதைய முறைமையின் கீழ் பணபலம் இருந்தால் எம்.பி.யாக முடியும் என்ற நிலைமை காணப்படுகின்றது.

மேலும் விருப்பு வாக்குகள் என்ற விடயத்துக்காக கட்சிக்குள்ளேயே வேட்பாளர்கள் முரண்படும் நிலைமையும் நிலவுகின்றது. எனவே அந்த விடயத்தில் மாற்றம் வேண்டும் என்ற இடத்தில் நாங்கள் இருக்கின்றோம்.

எனினும் சகல மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தேர்தல் முறைமை ஒன்றுக்கே நாங்கள் செல்ல வேண்டும். முக்கியமாக சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

தேர்தல் முறை மாற்றம், 17 ஆவது திருத்தச்சட்டம் மற்றும் தேசிய பிரச்சினை தீர்வு போன்ற விடயங்களில் ஆரோக்கியமான திருத்தங்கள் கொண்டுவரப்படின் அதற்கு ஆதரவு வழங்குவது குறித்து ஆராய முடியும் என்றார். (2-6)

# மூன்று வயது பிள்ளை கொலை தொடர்பில் தந்தை கைது

(கொழும்பு)

சம்மாந்துறை வலதாப்பிட்டி பகுதியில் மூன்று வயதுப் பிள்ளையை கொலை செய்தமை தொடர்பாக அந்தப் பிள்ளையின் தந்தையை பொலிஸார் கைது செய்துள்ளனர். வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த இந்தப் பிள்ளை கூரிய ஆயுதத்தால் குத்தி கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினார்.

படுகாயங்களுக்குள்ளான இந்தப் பிள்ளை அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சம்மாந்துறை பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (6-3)

# கட்சித் தலைமைக்கு எதிராக சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு

(கொழும்பு)

கட்சியை கீழ் மட்டத்திலிருந்து மறுசீரமைக்க வேண்டிய தேவையிருப்பதாகவும் இதன் மூலமே எதிர்காலத்தில் பலம் வாய்ந்த கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சியை வளர்த்தெடுக்க முடியும் எனவும் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் புதல்வர் சஜித் பிரேமதாச தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் மீனவர்கள் என பல்வேறு மட்டத்திலான மக்களுடனும் கூடுதல் நெருக்கம் அவசியமானதெனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் கட்சியில் சரியான நிர்வாகக் கட்டமைப்பு காணப்படாத காரணத்தினால் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்துவதில் சிக்கல் நிலைமை காணப்படுவதாகவும் இந்த நிலைமை வெகு விரைவில் மாற்றப்பட வேண்டுமென்றும் கேட்டுள்ளார். (2-6)

# அவுஸ். செல்லமுயன்ற மற்றுமொரு கப்பல் கைப்பற்றப்பட்டுள்ளது

சட்டவிரோத குடியேற்ற வாசிகளை ஏற்றிக் கொண்டு அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயன்ற படகு ஒன்று கிறிஸ்மஸ் தீவுக்கு அருகாமையில் கைப்பற்றப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் கடற்படைக் கப்பலினால் வழிமறிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டதாக அந்நாட்டு கடற்படை தெரிவித்துள்ளது.

இந்த படகில் இலங்கை ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர்கள் என சந்தேகிக்கப்படும் 82 பேர் பயணித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சட்டவிரோத குடியேற்ற வாசிகள் தொடர்பில் அவுஸ்திரேலியா குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த வருடத்தில் மட்டும் சட்டவிரோத குடியேற்ற வாசிகளுடன் 43 படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த மூன்று மாதங்களாக கப்பலில் இருந்த அகதிகள் கிறிஸ்மஸ் தீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டு ஒருவார காலப்பகுதிக்குள் குறிப்பிட்ட படகு அகதிகளுடன் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்விடயம் குறித்து கருத்து வெளியிட்ட அவுஸ்திரேலியாவின் உட்துறை அமைச்சர் பிரண்டன் ஒக்கொணர்,

சர்வதேச ரீதியில் அதிகளவில் பணங்களை அறவிட்டு மனிதர்களை கடத்தும் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுகின்றது. இவ்வாறான சம்பவங்களைத் தடுக்கம் பொருட்டு அவுஸ்திரேலியா அரசாங்கம் உரிய சட்டங்களை அமுல்படுத்துகின்றது. அத்துடன் இந்தோனேசியா அரசுடன் இணைந்து புரிந்துணர்வுடன் செயற்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (6-09)

## வேலணை கோட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வேலணை கோட்டமட்ட தமிழ்தினப் போட்டிகள் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வேலணை சரஸ்வதி வித்தியாலத்தில் நடைபெறவுள்ளதென கோட்டக்கல்விப் பணிப்பாளர் கு. சரவணபவானந்தன் அறியத்தந்துள்ளார். (2)

## சூவை எறும்பின் பெருக்கம் அதிகரிப்பு

வவுனியா செட்டிக்குளத்திலுள்ள அருணாசலம் நலன்புரி கிராமத்தில் வசித்து வரும் இடம் பெயர்ந்த மக்களில் சிலர் சூவை எனப்படும் ஒருவகை எறும்புக்களின் கடிக்குள்ளாகி செட்டிக்குளம் மற்றும் வவுனியா மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்சூவை எறும்பானது விசப்பூச்சி வகையைச் சேர்ந்தது. இதில் 1000 எறும்பு கடித்தால் நாகபாம்பின் விசத்துக்கு சமம் என முன்னோர் கூறுவதுண்டு. இவ் எறும்பு கூடுதலாக காட்டுப் பகுதியில் காணப்படுகின்ற ஓர் ஊர்வனவாகும்.

இது கூடுதலாக கோடை காலத்தில் நடமாடுவதுடன் கடியுண்டால் மிக வலி ஏற்படுவதுடன் அப்பகுதி பெரிதாக வீக்கமாகும். இது குறைய 3 அல்லது நான்கு நாளாகும்.

இவ் எறும்பின் கடித்தாக்கம் இவ் முகாம் மக்களிடம் காணப்படுவதாக அங்கிருப்போர் கூறுகின்றனர். (2)

# தமக்கு கிடைத்துள்ள மக்களின் ஆணையைக்கொண்டு அரசாங்கம் புதியபாதையை நோக்கி பயணிக்க வேண்டும்

## தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளர்

(கொழும்பு)

அரசாங்கம் நாட்டின் பிரதான எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி சுமுகமான இணக்கப்பாட்டுக்கு வந்தாலேயே இலங்கையின் தேசிய பிரச்சினைக்கும் சிறுபான்மை மக்களது அரசியல் பிரச்சினைக்கும் முழுமையான தீர்வு கிட்டும்.

அதன் மூலமாக நாட்டை அபிவிருத்தியின் பால் கட்டியெழுப்பவும் முடியும். இதற்கான உரிய தருணம் இப்போது அரசுக்கு கிட்டியுள்ளது. இந்த வாய்ப்பினை அரசாங்கம் பயன்படுத்திக் கொண்டால் நாடு சுபீட்சம் பெறும்.

இவ்வாறு இலங்கை தேசிய சமாதான பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் சிரேஷ்ட அரசியல் ஆய்வாளருமான கலாநிதி ஜெகான் பெரேரா தெரிவித்தார்.

நாட்டின் சமகால அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாக நேற்று முன்தினம் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தகவல் தருகையில்,

இடம்பெற்று முடிந்த ஏழாவது பாராளுமன்றத் தேர்தலில் பெருவாரியான மக்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளாது விடினும் கூட ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கே அதிகப்படியான வாக்குகள் கிடைக்கப்பெற்று அதிகாரப் பலத்தினை மீண்டும் தக்கவைத்துள்ளது.

பிரதான எதிர்க்கட்சிகளுக்கு குறைந்தளவு வாக்குகள் கிடைத்திருப்பதனால் அவை பலவீனப்பட்ட நிலையில் இருப்பதையே அவதானிக்க முடிகின்றது. அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளை பெற பெரும் பிரயத்தனத்தில் ஈடுபட்ட போதிலும் அதனால் முடியாமற் போய்விட்டது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கும் பட்சத்தில் எந்தவொரு அரசாலும் நாட்டின் அரசியலமைப்பை மாற்ற இயலும். எமது கடந்த கால அரசியல் அனுபவத்தின் படி 1972 மற்றும் 1978 ஆம் ஆண்டுகளில் அரசியலமைப்பில் மாற்றம் கொண்டு வந்த போது நாட்டு மக்களுக்கு ஏதோ ஒரு வகையில் நன்மை கிட்டியது.

அதேபோல் முன்னாள் ஜனாதிபதி ஜயவர்தன அறிமுகப்படுத்திய அரசியலமைப்பில் திருத்தத்தைக் கொண்டு வரும் பட்சத்தில் நாட்டில் வாழும் சகல மக்களுக்கும் விடிவு ஏற்படும்.

கடந்த வருடம் இலங்கையில் போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகக் கிளப்பப்பட்ட சர்ச்சைக்குரிய விடயங்கள் நிமித்தம் எமக்குள் கிடைக்கவிருந்த ஜி.எஸ்.பி.பிளஸ் வரி நிவாரணம் கைநழுவிப் போனதுடன் சர்வதேச நாடுகளுடன் முறுகல் நிலை ஏற்பட்டது.

ஆகவே இவற்றினைக் கருத்திற் கொண்டு அரசாங்கமானது தனக்கு கிடைத்துள்ள மக்கள் ஆணையைக் கொண்டு புதிய பாதையை நோக்கிப் பயணிக்க வேண்டும். இனவாதப் போக்கினையும் ஏகாதிபத்திய வழிமுறைகளையும் அரசு கைவிட்டு சகல கட்சிகளுடனும் கலந்துரையாடி நல்லதொரு இணக்கப்பாட்டுக்கு வருவதன் மூலம் வளமான எதிர்காலத்தை இலங்கை அடையலாம் என்றார். (2-6)

Corporate Skills
The Business English Unit of
THE ACADEMY OF ENGLISH AND DRAMA, COLOMBO
'Seeing education as an investment'
www.corpskills.asia

English Language Teaching Unit
ST JOHN'S COLLEGE, JAFFNA.
T.P : 021 222 2432

UNEMPLOYED?

LEARN THE SKILLS! GET THE JOB!

- Write a winning CV
- Grooming and Etiquette for job success
- Interview skills

A FOUR - DAY COURSE
28th April - 1st May 2010 at St John's College

ADMISSION FREE

Limited places - Register before 26th April 2010 at St John's College.

(c-110)

# சென்னைக்கு விமானத்தில் வந்துசேர்ந்த முதலை

(சென்னை)

ஆமதாபாத்தில் இருந்து அரிய வகை முதலை ஒன்று விமானம் மூலம் சென்னைக்கு கொண்டு வரப்பட்டது.

இதுகுறித்து ஏர் இந்தியா நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் ஆமதாபாத் கமலா நேரு உயிரியல் பூங்காவில் இருந்து ஒரு பெண் முதலையை விமானம் மூலம் சென்னைக்கு கொண்டு வர வேண்டும் என்று சென்னை முதலை வங்கி டிரஸ்ட் தெரிவித்தது.

இதை தொடர்ந்து கமலா நேரு உயிரியல் பூங்காவில் இருந்து பெண் முதலை ஆமதாபாத் விமான நிலையத்திற்கு எடுத்து வரப்பட்டது.

நேற்று முன்தினம் காலை 7.50 மணிக்கு புறப்பட்ட ஏர் – இந்தியா 982 விமானம் மூலம் சென்னைக்கு 11.30 மணிக்கு இலவசமாக கொண்டு வரப்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## மும்பைத் தாக்குதலில் ஈடுபட்ட

# பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு ஆப்கானிஸ்தானில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது– இந்தியா தெரிவிப்பு


(சென்னை)

மும்பை தாக்குதலில் ஈடுபட்ட பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு ஆப்கானிஸ்தானில் இயங்கும் அல்கொய்தா முகாம்களில் பயிற்சி அளிக்கப்பட்டு இருப்பது தெரியவந்துள்ளது.

இவர்கள் பயிற்சி பெற தலிபான்களும் பாகிஸ்தானின் உளவுத் துறையும் உதவி செய்துள்ளன.எனவே மும்பை தாக்குதலின் மூளையாக செயற்பட்ட பாகிஸ்தானின் லஸ்கர்–இ–தொய்பா அமைப்பின் தலைவர் மீது தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தியா வலியுறுத்தி வருகின்றது.

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றினாலும் அல்லது ஆப்கானிஸ்தான் தலிபான்கள் பின்னால் சென்றாலும் இந்தியாவுக்கு சிக்கலை ஏற்படுத்தும் நிலை உள்ளது என்றும் எனவே ஆப்கானிஸ்தானில் நிலவும் அரசியல் சூழ்நிலையை இந்தியா தொடர்ந்தும் கண்காணித்து வருகிறது என்றும் இந்திய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (2-6)

# சிகிச்சை பெற வந்த பிரபாகரன் தாயாரை திருப்பி அனுப்புவதா?– கி.வீரமணி கண்டனம்



அரசின் கண்காணிப்பில் முகாமில் வாழ்ந்த விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தந்தை வேலுப்பிள்ளை இயக்க நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடாமல் வாழ்ந்தவர்.

அவரது துணைவியார் பிரபாகரனின் தாயார் பார்வதி (வயது 81). பல மாதங்களாக உடல் நிலை பாதிக்கப்பட்டு பக்கவாதத்தினால் தாக்கப்பட்டவர். தனது கணவர் வேலுப்பிள்ளை இறந்த செய்தியைக் கூட சரிவரத் தெரிந்து கொள்ள முடியாத அளவுக்கு உடல்நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டு படுக்கையில் இருந்தவர்.

நேற்று முன்தினமிரவு 10.30 மணிக்கு மலேசியத் தலைநகர் கோலாலம்பூரிலிருந்து மருத்துவச் சிகிச்சையை சென்னையில் பெறுவதற்காக மலேசியன் ஏர்லைன்ஸ் விமானத்தில் தனக்கு உதவியாக ஒரு நர்சுடன் வந்துள்ள அவரை சென்னையில் இறங்கி சிகிச்சை பெற அனுமதிக்க முடியாது என்று விமான நிலைய அதிகாரிகள் மறுத்து அதே விமானத்திலேயே அவரை கோலாலம்பூருக்கே திருப்பி அனுப்பி உள்ளார்கள்.

அவரிடம் முறைப்படி மருத்துவ சிகிச்சை பெறுவதற்கான விசாவும் இருந்துள்ளது. அப்படியிருந்தும் அந்த முதுமையடைந்த தாயை சென்னையில் சிகிச்சை பெறக்கூட அனுமதிக்க முடியாது என்று திருப்பி அனுப்பப்படுவதை விட மனிதாபிமானம் அறவே அற்ற கொடுஞ்செயல் வேறு இருக்க முடியுமா? இதற்கு 'யார் பொறுப்பானவர்கள் மத்திய அரசா? அல்லது அதில் பணிபுரியும் ராஜவிசுவாச அதிகாரிகளா? என்பது நமக்குப் புரியவில்லை.

யார் இதற்குக் காரணமானாலும் உலகமே வெட்கித் தலைகுனியக் கூடிய மத்திய அரசின் செயல் கண்டனத்திற்குரியது. தீவிரவாதிகளைப் பாதுகாக்கும் பாகிஸ்தானிலிருந்து நோயாளிகள் இங்கே வந்து அறுவை சிகிச்சை மருத்துவம் செய்து திரும்பவில்லையா? 81 வயதான அந்த அம்மையாருக்கு சிகிச்சை அளித்தால் தீவிர வாதம் இங்கே வந்து புகுந்து கொள்ளுமா?

மத்திய அரசோ அதன் அதிகாரம் செலுத்தும் அதிகாரிகளோ அல்லது உளவுத் துறையோ இந்தச் செயலைச் செய்தாலும் சென்னை விமான நிலையத்தில் இக் கொடுமை நடந்துள்ளபடியால் தி.மு.க அரசுக்கும் கலைஞர் ஆட்சிக்கும் அவை சில கெட்டப் பெயரைத் தருவதாக அமையாதா?

ஈழத் தமிழர்களைப் பாதுகாப்பது எங்கள் அரசின் கடமை என்றும் தீவிரவாதத்தினைத்தான் நாங்கள் எதிர்ப்பவர்கள் என்றும் நாடாளுமன்றத்தில் மத்திய அமைச்சர்கள் கூறியிருக்கிறார்களே அதன்படி பார்த்தால் பார்வதி அம்மாள் செய்த குற்றம் என்ன? பிரபாகரனுக்கு தாயாக இருந்ததுதானா? இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (2-6)

# காங்கிரஸ் தலைவர்களுடன் சோனியா ஆலோசனை

(புதுடில்லி)

ஐ.பி.எல். கிரிக்கெட் அணி சர்ச்சை தொடர்பாக, மத்திய அமைச்சர் சசிதரூரை பதவிநீக்கம் செய்யவேண்டும் என எதிர்க் கட்சிகள் கோரி வரும் நிலையில் காங்கிரஸ் தலைவர் சோனியா நேற்று முன்தினம் இந்தப் பிரச்சினை குறித்து கட்சியின் மூத்த தலைவர்களுடன் விவாதித்தார். ஐ.பி.எல். கொச்சி அணியின் பங்குகளை தனது தோழி சுனந்தா புஷ்கருக்கு பெற்றுத் தர அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தார் என மத்திய இணை அமைச்சர் சசி தரூர் மீது புகார் கூறப்பட்டது. இது பற்றி வோஷிங்டனில் கருத்து தெரிவித்த பிரதமர் மன்மோகன் சிங் நான் நாடு திரும்பியவுடன் அனைத்து உண்மைகளையும் கண்டறிவேன். அதன் பின்னரே சசி தரூருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது பற்றி முடிவு செய்யப்படும் என்றார். (2-6)

# கீழே விழுந்தாலும் உடையாத கண்ணாடி

## சென்னையில் அறிமுகம்



கீழே விழுந்தால் கூட உடையாத நவீன பிளாஸ்டிக் கண்ணாடி அகர்வால் கண் மருத்துவமனையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து அக் கண் மருத்துவமனை இயக்குநர் டாக்டர் அமர் அகர்வால் கூறியதாவது,

சென்னையில் உள்ள அகர்வால் கண் மருத்துவமனை ஜப்பானை சேர்ந்த ஹோயா கார்ப்பரேஷன் நிறுவனத்துடன் இணைந்து அறிமுகம் செய்துள்ள புதிய தொழில் நுட்பத்தில் பிளாஸ்டிக் கண்ணாடி மற்றும் லென்ஸ் தயாரித்து கொடுக்கப்படும்.

கணனி மூலம் அளவுகள் துல்லியமாக எடுக்கப்பட்டு இந்த நவீன பிஸாஸ்டிக் கண்ணாடி தயாரித்து அளிக்கப்படும். இது கீழே விழுந்தால் கூட உடையாது. பிளாஸ்டிக் கண்ணாடி தயாரிக்கும் கருவி இந்தியாவில் முதன் முறையாக அறிமுகம் செய்யப்பட்டுள் ளது என்றார். (2-6)



தெலுங்கானா தனி மாநில கோரிக்கை பற்றி ஆய்வுசெய்ய மத்திய அரசு அமைத்துள்ள ஸ்ரீகிருஷ்ணா குழுவின் விசாரணை டில்லியில் நடந்தது. அதில் தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி தலைவர் சந்திரசேகரராவ், அக்கட்சி எம்.பியான நடிகை விஜயசாந்தி உள்ளிட்டோர் ஆஜராகி தங்கள் தரப்பு கருத்துக்களைத் தெரிவித்தனர்.

## பாரதச் செய்திகள்

# ஜி.எஸ்.எல்.வி.டி3 ரொக்கெட்திட்டம் தோல்விகண்டதற்கான காரணமென்ன?

## இந்திய மூத்த விஞ்ஞானிகள் ஆய்வு

(பெங்களூர்)

ஜி.எஸ்.எல்.வி.டி3 ரொக்கெட் திட்டம் தோல்வி அடைந்ததற்கான காரணத்தை கண்டறிவதற்காக மூத்த இந்திய விஞ்ஞானிகள் விவாதிக்க உள்ளனர்.

முற்றிலும் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட கிரையோஜெனிக் என்ஜினுடன் ஸ்ரீஹரி கோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் ஏவுதளத்தில் இருந்து வியாழக்கிழமை விண்ணில் ஏவப்பட்ட ஜி.எஸ்.எல்.வி.டி3 ராக்கெட் இஸ் ரோ –வின் கட்டுப்பாட்டை இழந்த பாதையை விட்டு விலகி கடலில் விழுந்தது.

கடந்த 18 ஆண்டுகளாக 2 ஆயிரம் விஞ்ஞானிகளின் கடும் உழைப்பில் உருவான இந்த ஜி.எஸ்.எல்.வி.டி3 ரொக்கெட் மற்றும் ஜிசாட்–4 செயற்கைகோளின் மதிப்பு ரூ.420 கோடியாகும். (2-6)

# பாக்குநீரிணைப் பகுதி கரையோர கண்காணிப்பு சேவையில் புதிய இந்திய கடற்படை படகு

(சென்னை)

தென்னிந்தியாவின் இராமேஸ்வரம் பகுதியில் கரையோர கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்திய அரசு புதிய நவீன கண்காணிப்பு படகொன்றை இணைத்துக் கொண்டுள்ளது.

இது தொடர்பில் மண்டபம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இந்திய கரையோர காவல்படை நிலையத்தின் கட்டளை அதிகாரி கொ்மான்டன் டி எஸ் சைனி மேலும் தெரிவித்துள்ளதாவது ,

சி–146 எனப்படும் நவீன கண்காணிப்பு படகு இராமேஸ்வரம் உள்ளிட்ட தென்னிந்திய கடற்பரப்பில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

அதிக தொழில்நுட்ப வசதிகளை கொண்ட இந்த படகுகளினதும் மனிதர்களினதும் நடமாட்டங்களை இரவிலும் துல்லியமாக அறியும் திறன் கொண்டது. இந்த படகு பாக்கு நீரிணை பகுதியில் சுற்றுக்காவல் நடவடிக்கைகளில் ஈடுபடும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே இலங்கையின் வடகடல் பகுதியில் சீனா கடற்படையினரின் பிரசன்னம் அதிகரித்துள்ள நிலையில் இந்தியா இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக இந்திய கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள் ளன. (6-2)

# ஹெயிட்டி மீட்பு பணிக்கு சென்ற இராணுவ ஹெலிகொப்டர் விபத்து

## நான்கு வீரர்கள் பலி

(போர்ட் ஒவ் பிரின்ஸ்)

அமெரிக்கா அருகே உள்ள ஹெயிட்டி நாட்டில் கடந்த ஜனவரி மாதம் 12 ஆம் திகதி கடுமையான பூகம்பம் ஏற்பட்டது. போர்ட் ஒப் பிரின்ஸ் மற்றும் அதை சுற்றியுள்ள நகரில் உள்ள வீடுகள், கட்டங்கள் இடிந்து தரை மட்டமாயின. 3 இலட்சம் பேர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானோர் காயம் அடைந்தனர். பூகம்பத்தால் உருக்குலைந்த அந்நாட்டை புனரமைக்கும் பணியில் பல்வேறு உலக நாடுகள் ஈடுபட்டுள்ளன.

ஸ்பெயின் நாடும் இந்த பணியில் ஈடு பட்டுள்ளது. அந் நாட்டைச் சேர்ந்த 423 இராணுவ வீரர்கள் இப் பணியில் ஈடுபட்டுள் ளனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் நிவாரணப் பொருட்களை ஏற்றிக்கொண்டு ஸ்பெயின் இராணுவ விமானம் புறப்பட்டு சென்றது. அதில் இராணுவ வீரர்கள் இருந்த னர். அந்த விமானம் ஹெயிட்டியில் டொமி னிக்கன் குடியரசு எல்லை அருகே பறந்து சென்றது. அப்போது பின்ட்ஸ் வெர்ட்ஸ் நகரம் அருகே கிராஸ்செவல் என்ற இடத்தில் சென்றபோது எதிர்பாராதவிதமாக மலையில் மோதி நொறுங்கி தீப்பிடித்தது. இந்த விபத்தில் ஹெலிகொப்டரில் பயணம் செய்த 4 இராணுவ வீரர்கள் உடல் கருகி பலி யானார்கள்.

இச்சம்பவம் அங்கு சோகத்தை ஏற்படுத் தியுள்ளது. ஸ்பெயின் இராணுவ வீரர்கள் பூகம்பம் பாதித்த ஹெயிட்டியில் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவான மினுஸ்டாவுடன் இணைந்து பணியாற்றி வரு கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (6-2)




# வாய் வழியாக சுவாசித்தால் குழந்தையின் படிப்பு பாதிக்கும்

(வோஷிங்டன்)

வாய் வழிச்சுவாசம், முகம் பற்களின் அமைப்பில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத் துவதோடு குழந்தைகளின் வளர்ச்சி, கல்வித் திறனையும் பாதிக்கிறது.

அகாதமி ஆப் ஜெனரல் டென்டிஸ்ரி மாதம் தோறும் பிரசுரிக்கும் ஜெனரல் டென்டிஸ்ட்ரி இதழில் வாய்வழிச் சுவாசம் பற்றிய விரிவான ஆய்வுக்கட்டுரை வெளியா கியுள்ளது.

இக்கட்டுரையில் வாய்வழிச்சுவாசத்தின் பாதிப்புக்கள் விளக்கப்பட்டுள்ளன. வாய் வழிச்சுவாசம் ஏற்படுவது ஏன்? அதனால் ஏற்படும் பாதிப்புகள் என்ன? எனவும் கட்டு ரையில் கூறப்பட்டுள்ளது.

அந்தக் கட்டுரை விபரம் வருமாறு,

வாய் வழிச்சுவாசம் ஒரு பாதிப்பாகவே பெரும்பகுதி சிறு குழந்தைகள் சிறுவர்களி டம் தோன்றுகிறது.

சாதாரணமாக எல்லாக் குடும்பங்களிலும் வாயால் சுவாசிக்கக் கூடியவர் ஒருவராவது இருக்கிறார். நீண்டநாளாக வாயால் சுவாசிப் பவர்களுக்கு பெரும் பாதிப்புக்கள் ஏற்படு கின்றன. முதலில் அவர்களின் முகம் இயல் புக்கு மாறாக நீண்டு விடுகிறது. ஈறுகள் பாதிப்படைந்து இரத்தம் கசிகிறது. ஈறு அழுகி பல்வலி, துர்நாற்றம் மூதலியனவும் ஏற்படு கின்றன. பற்களின் அமைப்பு முறையும் பாதிக்கப்படுகிறது. பற்கள் வரிசையிலிருந்து விலகி விடுகின்றன. சில பற்கள் திருகிக் கொண்டு வளர்கின்றன.

வாய்வழிச்சுவாசத்தால் தூக்கம் பாதிக் கப்படுகிறது. அதனால் வாயால் சுவாசிக்கும் குழந்தைகள் எப்பொழுதும் களைத்த நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் ஏமாற்ற மனோ நிலையில் தவிக்கிறார்கள்.

இது மற்ற மாணவர்களுடன் அவர்கள் கலந்து பழகும் முறையிலும் இது மற்ற மாணவர்களுடன் அவர்கள் கலந்து பழ்கும் முறையிலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. மற்ற குழந்தைகளிடம் இருந்து அந்தக் குழந்தைகள் விலகி விடுகிறார்கள் அல்லது மற்ற குழந்தைகளுடன் விரோத மனோ பாவத்துடன் இருக்கிறார்கள். இவை எல்லாம் குழந்தையின் கல்வி வளர்ச்சி, உடல், மன நிலைகளைப் பாதிக்கின்றன. குழந்தை களின் இணைந்து செயல்படும் திறனும் பாதிக்கப்படுகிறது.

இதைத் தவிர வாய்வழிச் சுவாசத்தினால் குழந்தைகளுக்கு கிடைக்கும் தேவையான அளவு ஒட்சிசன் இருப்பதில்லை. அதனால் உயர் இரத்த அழுத்தநோய், இதய நோய் கள், தூக்கமின்மை மற்றும் பிற மருத்துவப் பிரச்சினைகள் தோன்றுகின்றன.

இந்தப் பிரச்சினைகளுக்கு சிகிச்சை தரும் மருத்துவர்கள் எளிதில் பிரச்சினை யின் அடிப்படையை கண்டறியமுடியும். பல் மருத்துவரும் இதனைக் கண்டுபிடிக்கும் வாய்ப்புள்ளது.

வாய்ச்சுவாசத்துக்கான காரணத்தை அறிந்தால் மருத்துவர்கள் சிறப்பான சிகிச்சை தர முடியும். அவர்களின் அறுவைச் சிகிச்சையோ, மருந்துகளோ நல்ல பலனைத் தரும். குழந்தைகள், சிறுவர்களிடத் தில் அற்புதமான பலனைக் காணலாம் என கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. (2-6)



சீன்ாவில் பூகம்பத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட திபெத் பீட பூமியிலுள்ள குங்ஹாய் மாகாணத்தின் யூஷ மாவட்டத்தில், இடிந்து விழுந்த வீட்டிலிருந்து உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த ஒருவரை மீட்புக்குழுவினர் மீட்டனர்.



நாசா அனுப்பியுள்ள டிஸ்கவரி விண்கலம் எடுத்துள்ள பூமியின் மேற்பரப்பை காட்டும் புகைப்படம். அந்தப் புகைப்படத்தில் மெக்சிக்கோ, பஜா கலிபோர்னியா மற்றும் கார்டெஜ் கடல் ஆகியவை தெளிவாகப் புலப்படுகிறது.

# இன்டர்நெட்டில் இனி —கைகுலுக்கலாம்—

(லண்டன்)

கம்ப்யூட்டரில் பொருத்தி இயக்கக்கூடிய ரோபோ கையை ஹொங்காங் விஞ்ஞா னிகள் தயாரித்துள்ளனர். அதன்மூலம் இணையத்தளம் வழியாக போன் தொடர்பு கொள்பவரிடம் கைகுலுக்கலாம்.

இது குறித்து ஹொங்காங்கில் உள்ள சீனப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் குழு வின் தலைவர் லியூ யுன்ஹீ கூறியதாவது. இன்டர் நெட் மூலம் மற்றவர்களுடன் தொடர்பு கொண்டு வெப் கமராவில் பார்த்தபடி பேசுவது அதிகரித்துள்ளது. அந்தத் தொடர்பை மேலும் இனிமையாக்கும் முயற்சியில் ஈடுபட்டோம். ரோபோ கை தயாரித்து கம்ப்யூட்டருடன் பொருத்தினோம்.

இன்டர்நெட் மூலம் வெப் கமராவில் நண்பர்கள். உறவினர்கள் தொடர்பு கொண்டு பேசும் போது கைகுலுக்குவது சாத்தியம். அந்த செயற்கைக்கையுடன் சென்சார் தொடர் புடைய ஒரு பட்டையை கையில் அணிந்து கொண்டால் ஒருவரை ஒருவர் தொடும் உணர்ச்சியை எதிர்முனையில் பேசும் நண்பர்கள், உறவினர்கள் அறியலாம்.

இப்போது இந்த தொழில் நுட்பத்தில் மேலும் முன்னேற்றங்கள் செய்து வருகி றோம். மனிதனின் கையைவிட ரோபோ கை வித்தியாசம் என்பதால் இன்னும் துல்லியமாக தயாரிக்கிறோம் என்றார். (2-6)

# கரீபியன் தீவுகளூடான போதைப் பொருள் கடத்தல் முயற்சி முறியடிக்கப்படும்

## அமெரிக்கா அறிவிப்பு

கரீபியன் தீவுகளின் ஊடாக போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட மேற்கொள்ளப் படும் முயற்சிகள் முறியடிக்கப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

கரீபியத் தீவுகளின் வழியாக போதைப் பொருட்களை அமெரிக்காவிற்குள் கொண்டு வரும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் ரொபர்ட் கேட்ஸ் தெரிவித்துள்ளார்.

மெக்ஸிக்கோ வழியாக இடம்பெற்று வந்த போதைப் பொருள் கடத்தலை கட்டுப் படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் கார ணமாக, பார்படோஸ் பகுதியின் ஊடாக போதைப் பொருட்களை கடத்த முயற்சி மேற் கொள்ளப்பட்டு வருவதாகவும் கடந்த சில காலமாக அங்கு போதைப்பொருள் வர்த் தகம் அதிகரித்து வருவதாக குறிப்பிடப்படு கிறது.

மெக்ஸிக்கோ எல்லை வழியாக மூன்றில் இரண்டு பங்கு கொக்கேய்ன் போதைப் பொருள் அமெரிக்காவிற்குள் கொண்டு வரப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கரிபீயன் வலய நாடுகளில் போதை வர்த் தகத்தைக் கட்டுப்படுத்த வேண்டியது மிகவும் இன்றியமையாததென அமெரிக்க பாதுகாப் புச் செயலாளர் வலியுறுத்தியுள்ளார்.

பார்படோஸ் நகரில் நடைபெற்ற பிராந் திய பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (2-6)

# ஐ.நா.பாதுகாப்பு சபை சீரமைக்கப்பட வேண்டும்

## இந்தியப் பிரதமர்

(பிரேசிலியா)

ஐ.நா.பாதுகாப்பு சபை மறுசீரமைக்கப்படு வதுடன், அதில் இந்தியா உட்பட அதிக நாடு களுக்கு பிரதிநிதித்துவம் ஏற்படுத்தப்பட வேண்டும் என ஐ.பி.எஸ்.ஏ மாநாட்டில் பேசிய பிரதமர் மன்மோகனசிங் தெரிவித் தார்.

பிரேசில் நாட்டில், கடந்த வியாழக்கிழமை இந்தியா, பிரேசில் மற்றும் தென்னா பிரிக்கா ஆகிய மூன்று நாடுகள் அடங்கிய ஐ.பி. எஸ்.ஏ. மாநாடு நடந்தது.

இந்த மூன்று நாடுகள் இணக்க உறவுக் காக அமைக்கப்பட்டது. இந்த அமைப்பு. அதன் பின், பிரேசில், ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் இணைந்த பிரிக் உச்சிமாநாடு நேற்று முன்தினம் நடந்தது.

இந்த இரு மாநாடுகளிலும் பேசிய பிரதமர் மன்மோகன் சிங் கூறியதாவது, ஐ.நாவின் பாதுகாப்பு சபை. உட்பட அந்த அமைப்பை மறுசீரமைக்கவேண்டும். அதை அதிக பிரதி நிதித்துவம் மற்றும் ஜனநாயகம் நிறைந்த அமைப்பாக மாற்றவேண்டும். இது ஜி4 மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் முயற்சியால் சாத்தியமாகும். வர்த்தக விவ காரம் தொடர்பான தோகா சுற்றுப் பேச்சு வார்த்தையை விரைவில் முடிவுக்குக் கொண்டு வரவும், ஐ.பி.எஸ்.ஏ நாடுகள் முயற்சி மேற்கொண்டு வருகின்றன.

ஐ.பி.எஸ்.ஏ. நாடுகளின் சந்தைகளில் அதிகளவு தேவை உள்ளது. இதனால், வளர்ச் சியடைந்த நாடுகளுக்கு, இந்த நாடுகளில் அதிக சந்தை வாய்ப்புக்கள் உள்ளன. எனவே, நாங்கள் நாடுகளுக்கு இடையேயான வர்த்தகத்தை தடைசெய்யும் வகை யிலான பாதுகாப்புக்கொள்கைகளுக்கு எதி ராகப் பேச்சு நடத்துவோம். நமது வளர்ச்சிக் கொள் கைகளுக்கு, பயங்கரவாதம் பெரிய அச்சுறுத் தலாக உள்ளது. எனவே, அதை எதிர்த்து சர்வதேச அளவிலான நாடுகள் கூட்டாக இணைந்து பேராடவேண்டும் என்றார். (6)

தாடி பற்றி எரியும் போது
பீடிக்கு நெருப்புக் கேட்டானாம்.
-தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# சிங்கள இனத்தால் தமிழர் மனத்தால் நோகலாமோ?

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் என்பன நடந்தாகி விட்டன. ஜனாதிபதித் தேர்தல் முடிபு பொதுத் தேர்தல் முடிபிலும் எதிரொலிக்கும் என்ற ஊகம் பலரிடமிருந்தமையால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அடைந்த மகத்தான வெற்றி பெரும் பரபரப்பை ஏற்படுத்தவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு வெற்றி வாய்ப்பு உண்டென்ற விமர்சனங்களும், ஆரூடங்களும் தோற்றுப் போய், சரத் பொன்சேகாவையும் சிறைக்குள் தள்ளிவிட்ட பின்பு பொதுத் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசு தோற்கும் என எவரும் கற்பனை செய்ய முடியாது.

எனவே தேர்தல் முடிவுகள் எதிர்பார்க்கப்பட்ட வண்ணம் அமைந்துள்ளன. ஆகவே இது பற்றி வியாக்கியானங்கள் நேரமினக்கேடு என்பதால் அதனை அப்படியே விட்டு விடலாம்.

ஆனால் அதேநேரம், ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வெற்றியடைவதற்கும், தென்பகுதி மக்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து செல்வதற்குமிடையே நெருங்கிய நேர்கணியத் தொடர்பு உண்டென்பது மறுதலிப்பதற்குரியதல்ல.

இலட்சக் கணக்கான தென்பகுதி மக்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து சென்று விட்டனர். இன்னும் பல இலட்சக் கணக்கில் வரவும் உள்ளனர்.

இவ்வாறு வருகின்றவர்கள் தென்பகுதியிலுள்ள கிராமங்களைச் சேர்ந்தவர்கள். இவர்கள் யாழ்ப்பாண நகரம், கந்தரோடை, நயினாதீவு ஆகிய இடங்களுக்குச் செல்வதற்கு வழிப்படுத்தப்படுகின்றனர்.

இலங்கைத் தேசத்தில் வாழ்கின்ற எவரும் நாட்டின் எந்தப் பாகத்திற்கும் செல்வதற்கும், பார்வையிடுவதற்கும் உரிமையுடையவர்கள். இதில் இரு வேறு கருத்திற்கிடமில்லை.

ஆனால் எங்கள் இனத்திற்கு மட்டுமே இந்த மண் சொந்தம் என்ற வக்கிரத்துடன் வலம் வருவதென்பது அவ்வளவு ஆரோக்கியமானதல்ல.

இந்த துரதிர்ஷ்ட நிலையை யாழ்ப்பாணத்துக்கு வருகின்ற சிங்கள மக்களிடம் காண முடிகின்றது. தென்பகுதி கிராமத்துச் சிங்கள மக்கள் தமிழர்களின் பூர்வீக இடமான யாழ்ப்பாணத்தைத் தங்களின் பூர்வீகம் என்று எண்ணவைப்பது தமிழினத்தை வதைப்பதாகும்.

இதனை ஆட்சியாளர்கள் தடுத்து நிறுத்தாவிட்டால், இனவாத சிந்தனை அழிக்க முடியாத பயங்கரமாக உருவெடுக்கும் என்பது நிறுத்திட்டமான உண்மை.

# வட மாகாணக் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் கலாசார விளையாட்டு விழா

(துணுக்காய்)

வடக்கு மாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணத் தமிழ், சிங்கள புத்தாண்டு கலாச்சார விளையாட்டு விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை துணுக்காய் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இத் தகவலை துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் ஏற்பாட்டில் வட மாகாண தமிழ், சிங்களப் புத்தாண்டின் கலாசார விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை துணுக்காய் மத்திய கல்லூரியில் முழு நாள் நிகழ்வாக நடைபெறுகின்றது.

வடக்கு மாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில், வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி பிரதம அதிதியாகக் கலந்து கொள்கின்றார்.

இவ் விழாவில் அனைத்து ஆசிரியர்களையும் மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு துணுக்காய்க் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் கேட்டுள்ளார். (ச-5)

# எமக்குக் கிடைக்கும் அமைச்சினூடாக குடாநாட்டை அபிவிருத்தி செய்வோம்

## ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமல் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவுக்குக் கிடைக்கும் அமைச்சுப் பதவியூடாக யாழ்.குடாநாட்டை முழுமையாக அபிவிருத்தி செய்வோம் எனப் புதிதாக நியமிக்கப்பட்ட அக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமல் (கந்தசாமி கமலேந்திரன்) தெரிவித்துள்ளார்.

நேற்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஈ.பி.டி.பியினர் தேர்தல் முடிந்த பின்னர் மக்களை விட்டு ஓடிப் போகப் போவதில்லை. மக்களுடனேயே நிலையாக நிற்கக் கூடியவர்கள். 1997 ஆம் ஆண்டு யாழ்.குடாநாடு இலங்கை அரசாங்கத்தினால் மீட்ட பின்னர் யாழ்.குடாநாடு முழுவதும் எமது அரசியல் பணிகள் விஸ்தரிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட சூழல்கள் காரணமாக எங்களுடைய வேலைத் திட்டங்களை சரியாக மக்கள் மத்தியில் கொண்டு செல்ல முடியாத நிலையிருந்தது. 2002 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட சமாதான ஒப்பந்தத்தின் மூலம் அரசியல் பணியில் ஈடுபட்ட எமது உறுப்பினர்கள் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

எமது அரசியல் பணி எல்லா இடங்களிலும் விஸ்தரிக்கப் பட்டால் கூட அக் கால கட்டத்தில் திட்டமிட்டு சுருக்கப்பட்டுத்தான் இருந்தது. கடந்த காலங்களில் எம் மீது பல்வேறு அமைப்புகளும் ஊடகங்களும் சேறுபூசும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தன.

ஆயுதப் போராட்ட காலங்களிலும் டக்ளஸ் தேவானந்தா ஓர் சரியான தளபதியாகத்தான் இருந்தார். அந்தக் கால கட்டங்களில் கூட அவர் எடுத்த முடிபுகள் சரியாகவேயிருந்தது. தற்போது தமிழ்த் தலைவர்கள் கிடைத்த சந்தர்ப்பங்களைத் தமிழ் மக்களுக்காகப் பயன்படுத்தவில்லை.

தான்தோன்றித்தனமான செயற்பாடுகளுக்கும் தமது சுயநல தேவைக்குமாகவே செயற்பட்டு வந்துள்ளனர். நாங்கள் எங்களுடைய மக்களுக்கான சேவையை சரியாகச் செய்ய வேண்டும் என முயற்சிக்கும் போது நல்லதொரு பாதையைத் தெரிவு செய்வோமானால் அதில் வெற்றி கொள்ளக் கூடிய வாய்ப்பு உண்டு.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எமக்குக் கிடைத்த வாக்குகளால் நாம் தோற்கடிக்கப்பட்டோம் என சில பேரால் கூறப்பட்டாலும் அது எமக்கு வெற்றியாகத்தான் அமைந்தது. கடந்த கால நாடாளுமன்றத் தேர்தலில் எமக்கு ஓர் ஆசனம் தான் கிடைத்தது.

இம் முறை எமக்கு மூன்று ஆசனங்கள் கிடைத்துள்ளது. இப்போதுதான் மக்கள் வித்தியாசமான சூழலுக்கு வந்து கொண்டிருக்கின்றனர். எங்களுடைய அரசியல் நிலைப்பாடானது எமது மக்களை எவ்வளவு நல்லதொரு நிலைக்குக் கொண்டு வர முடியுமோ அந்தளவு தூரத்திற்கு மக்களுக்காக உழைக்கத் தயாராகவுள்ளோம்.

எமது தலைவர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு ஜனாதிபதியினால் நல்லதொரு அமைச்சுப் பதவி வழங்கப்படும். அவ் வேளையில் 30 வருட யுத்தத்தினால் அழிக்கப்பட்ட சொத்துக்களை எமக்குக் கிடைத்திருக்கின்ற அதிகாரத்தினூடாக 2 வருடத்திலே நிறைவேற்றுவோம்.

குடாநாட்டு மக்களுக்கு நாம் ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகின்றோம். கடந்த ஆண்டு மே 18 ற்குப் பின்னர் உங்களுடைய மனங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். தற்போது உயிர் வாழ்கின்ற சுதந்திரம் கிடைக்கப் பெற்றுள்ளது.

எமக்குரிய உரிமை பற்றியும் ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார். எமது பிரச்சினைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்வு காண்பார் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-7)

# கிளிநொச்சியில் கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் மீளக்குடியமர்த்தப்பட்ட இடங்களில் கசிப்பு உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மீளக்குடியமர்த்தப்பட்ட இடங்களிலுள்ள மக்களின் செயற்பாடுகள் குறித்து அதிகாரிகள் கண்காணிப்பதில்லை. இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு சிலர் கசிப்பு உற்பத்தியை மேற்கொள்வதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனால் கலாசாரச் சீரழிவுகள் ஏற்படுவதுடன் தகராறுகளும் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகள் அனுமதியின்றி இறைச்சிக்காக வெட்டப்படுவதுடன் அவற்றின் கழிவுகள் கிணறுகளுக்குள் வீசப்படுவதாகவும் கூறப்பட்டது.

இது குறித்து அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என மக்கள் கேட்டுக் கொண்டனர். (ச)

# உயிர்த்த ஆண்டவரைச் சந்திப்பது?

அறியாதவர், அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும் என்று கூறுவர்; ஆராய்ந்து பார்த்தால் வீரத்திற்கும் அதுவே துணையாக நிற்கின்றது.

இந்த உலகமே சந்திப்பில் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. சந்திப்பு எங்கு நிகழ்கிறதோ அங்கே சக்தி பிறக்கிறது.

அதாவது இறைவனும் மனிதனும் சந்திக்கிறபோது அங்கு "இறைசக்தி" வெளிப்படுகின்றது. அதே நிலையில் உயர்ந்த ஆண்டவரைச் சந்திக்கின்றபோது. அங்கு உயிர்ப்புச் சக்தி உருவாகிறது.

ஆம், இன்று இயேசுவின் உயிர்ப்பின் 3 ஆம் ஞாயிறைக் கொண்டாடுகிறோம். இந்த உயிர்த்த ஆண்டவரை எங்கு சந்திப்பது? எப்படிச்சந்திப்பது? இதைத்தான் இன்றைய நற்செய்தி நமக்கு மையப்படுத்துகிறது.


## பரமபிதா காட்டிய பாதை

உயிர்த்த ஆண்டவரை பல வகைகளில் சந்திக்கலாம். உயிர்த்த ஆண்டவரே நம்மைச் சந்தித்தல், இருக்கும் இடத்திலே (குழு) சந்திப்பது நம் உள்ளத்தில் சந்திப்பது, அன்புச் செயல்களினூடாக சந்திப்பது போன்றனவாகும்.

இதுவரை உயிர்த்த ஆண்டவரை எங்கு சந்திக்க முடியும் என்று பார்த்தோம். இனி எப்படி சந்திக்க முடியும் என்று பார்க்கின்றபோது முதலில் வருவது நம் ஒவ்வொருவரின் அன்புச் செயல்களிலே என்பது தெளிவாகும்.

ஆம், அன்பு எங்கு இருக்கின்றதோ அங்கு ஆண்டவர் இருக்கின்றார். இன்னும் சொல்லப்போனால் அன்பே இறைவன் என்று எல்லா மதங்களும் எடுத்துரைக்கின்றன.

இன்றைய நற்செய்தியில் முதலில் உயிர்த்த ஆண்டவரே தம் அன்புச் செயலால் தன்னை சீடர்களுக்கு வெளிப்டுத்தி அவர்களைச் சந்திக்கின்றார்.



அதாவது உயிர்த்த ஆண்டவரை கோவிலில் காணலாம். குழுவில் காணலாம், உள்ளத்தில் சந்திக்கலாம், அன்புப்பணிகளில் சந்திக்கலாம். ஆனால், இவை எல்லாவற்றையும் விட இறைவன் பிள்ளைகளாகிய ஏழைஎளியவர்களையே உயிர்த்த ஆண்டவராகப் பார்க்க வேண்டும். காரணம் "ஏழையின் சிரிப்பில் தான் இறைவனைக் காண முடியும்". என்பது பழமொழி. நமது எல்லா அன்புப் பணிகளும் இவர்களை மையப்படுத்தியதாகவே இருக்க வேண்டும்.

ஆம், உயிர்த்த ஆண்டவரைச் சந்திக்கத் துடிக்கின்ற நாம் அந்த ஆண்டவரை அன்றாட அனுபவங்கள், ஆட்கள் , அற்புதங்கள்,அடையாளங்கள் வழி சந்திப்போம். அதிலும் குறிப்பாக ஆண்டவரின் மறு உருவங்களாக இருக்கின்ற ஏழை எளிய மக்களின் தேவைகளில், தேடல்களில் அவரைச் சந்திக்க முற்படுவோம் சின்னஞ்சிறிய சகோதரர்களுக்குச் செய்தபோதெல்லாம் எனக்கே செய்தீர்கள் என்பதை நினைவில் கொள்வோம்.

ஜோன் ரொபேர்ட்

BOSCH
Invented for life




கட்டுமாணத்தில் தன்மானம்
காத்திடும் உங்களுக்கெனவே






யாழ் சர்வதேச வர்த்தக கண்காட்சி வளாவிலுள்ள எமது காட்சிக்கூடத்துக்கு இன்றே வாருங்கள்!

யாழ் மண்ணில் அறிமுகமாகிறது
BOSCH பவர் டூல்ஸ்

சர்வதேச கட்டுமாண நிபுணர்களின் தெரிவாகிய பொஷ் பவர் டூல்கள் இலங்கை சந்தையில் 35 சதவீதமான கட்டுமாண நிபுணர்களின் தெரிவாகி முதனிலையிலுள்ளமை குறிப்பிடத்தக்கது. சிறந்த வர்த்தக நாம தயாரிப்புகளை கடந்த 70 வருடங்களாக இலங்கையில் வழங்கிவரும் DIMO நிறுவனம், சர்வதேச தரத்திலான BOSCH பவர் டூல்களை யாழ் மக்களுக்கு அறிமுகப்படுத்துவதில் பெருமை கொள்கிறது.

dimo
TECHNOLOGY

Diesel & Motor Engineering PLC
65, ஜேதவன வீதி,
கொழும்பு 14.
இணையம்: www.dimolanka.com
ரமேஷ் - 0777270216

# மும்பை இந்தியன்ஸ் அணியிடம் வீழ்ந்தும் பெங்களூர் அணிக்கு அரையிறுதி உறுதி

(பெங்களூர்)

சகலதுறையிலும் ஜொலித்த மும்பை இந்தியன்ஸ் அணி 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியன்ஸ் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் 8 அணிகள் மோதும் மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று பெங்களூரில் நடைபெற்ற லீக் சுற்றின் 52ஆவது போட்டியில் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் கும்ளே தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டி ஆரம்பம் ஆவதற்கு 40 நிமிடங்களுக்கு முன்னதாக மைதானத்தின் நுழைவாயிலில் இரு குண்டுகள் வெடித்தமையினால் பரபரப்பு ஏற்பட்டது.

இதனால் போட்டி நடைபெறுமா என்ற நிலை காணப்பட்ட போதும் ஆட்டம் ஒரு மணி நேரம் தாமதமாக மாலை 5 மணிக்கு ஆரம்பமானது.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணித் தலைவர் அனில் கும்பிளே முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களையிழந்து 191 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் ராயுடு 27 பந்துகளில் (3 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக) 46 ஓட்டங்களையும் டுமினி ஆட்டமிழக்காமல் 19 பந்துகளில் (3 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 42 ஓட்டங்களையும் மைக்லரன் 42 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 40 ஓட்டங்களையும் பொல்லார்ட் 7 பந்துகளில் (3 பவுண்டரி உட்பட) 20 ஓட்டங்களையும் அணித் தலைவர் டெண்டுல்கர் 19 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஜக் கலிஸ் 2 விக்கெட்டுக்களையும் அணித்தலைவர் அனில் கும்ளே, கெவின் பீற்றர்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 192 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி முன்னணி வீரர்களின் சொதப்பலான ஆட்டத்தின் மூலம் 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களையிழந்து 134 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் வீராட் ஹோலி 24 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 37 ஓட்டங்களையும் கெவின் பீற்றர்சன் 16 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) 21 ஓட்டங்களையும் பாண்டி, ராவிட் ஆகியோர் தலா 16 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் பொல்லார்ட் 3 விக்கெட்டுக்களையும் டில்கார பெர்னான்டோ, ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சகிர்கான், மைக்லரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி தான் விளையாடிய 13 ஆவது போட்டியில் 10ஆவது வெற்றியைப்பதிவு செய்து 20 புள்ளிகளை பதிவு செய்தது.

இதேவேளை பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 14ஆவதும் இறுதியுமான லீக் போட்டியில் 7ஆவது தோல்வியைச் சந்தித்தபோதும் 14 புள்ளிகளுடன் ஓட்டவிகித சராசரி மூலம் அரையிறுதி வாய்பை பெற்றது.

## வெற்றி பெற்றது கொல்கத்தா; விடைபெற்றது ராஜஸ்தான்

கங்குலி-யுனாட்கடின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை வீழ்த்தியது.

ஐ.பி.எல். தொடரில் நேற்று கொல்கத்தாவில் நடைபெற்ற லீக் சுற்றின் 53ஆவது போட்டியில் கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியும் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களையிழந்து 132 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஷேன்வோட்ஷன் 26 பந்துகளில் (7 பவுண் டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 44 ஓட்டங்களையும் பின்ச் 21 பந்துகளில் (ஒரு சிக்ஸர் அடங்கலாக) 21 ஓட்டங் களையும் நாமன் ஓஜா 18 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் யுனாட்கட் 26 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் டின்டா 2 விக்கெட்டுக்களையும் பொன்ட், கார்த்திக் மற்றும் சுக்லா ஆகி யோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 16.1 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 133 ஓட்டங்களைக் குவித்து 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் அணித்தலைவர் கங்குலி 50 பந்துகளில் (11 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 75 ஓட்டங்களையும் புஜாரா 38 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 45 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் குவித்தனர்.

பந்துவீச்சில் காம்ரன்கான் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இவ் வெற்றியின் மூலம் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி தான் விளையாடிய 13ஆவது போட்டியில் 12 புள்ளிகளைப் பதிவு செய்தது. எனினும் நாளை நடைபெறும் மும்பை அணியுடனான போட்டியிலும் கொல்கத்தா அணி வெற்றிபெற்று 14 புள்ளி களைப் பதிவு செய்தாலும் ஓட்டவிகித சராசரியின் பாதகமான நிலையினால் அரையிறுதி வாய்ப்பு இல்லை.

இதேவேளை ராஜஸ்தான் றோயல்ஸ் தான் விளையாடிய 14ஆவதும் இறுதியு மான லீக் சுற்றுப் போட்டியில் 8 தோல்வியைச் சந்தித்து 12 புள்ளிகளுடன் அரையிறுதி வாய்ப்பையிழந்து தொடரிலிருந்து விடைபெற்றது.

## சிகிச்சைக்காகச் சென்னைக்கு...

இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்குமிடையே இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது பிரபாகரனின் பெற்றோர் இடம்பெயர்ந்து வவுனியாவில் முகாமில் தங்கியிருந்தனர்.

இந் நிலையில் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பிரபாகரனின் தந்தையார் வேலுப்பிள்ளை நோய்வாய்ப்பட்ட நிலையில் மரணமடைந்தார்.

இதையடுத்து பார்வதியம்மாள் இலங்கை அரசின் அனுமதியுடன் மலேசியா சென்று சிகிச்சை பெற்று வந்த நிலையில் மேலதிக சிகிச்சையின் பொருட்டு இந்தியாவுக்குச் செல்ல முயன்ற வேளையிலேயே தமிழக அரசினால் அவர் திருப்பியனுப்பப்பட்டுள்ளார்.

இந்தியாவில் தனது மருத்துவ சிகிச்சையினைப் பெறும் பொருட்டு இந்தியத் தூதரகத்தில் ஆறு மாத கால விசாவைப் பெற்று இந்தியா வந்த நிலையிலேயே அவரது அனுமதி தமிழக அரசினால் மறுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிரபாகரனின் தாயார் பார்வதிஅம்மாளை வரவேற்பதற்காக சென்னை விமான நிலையத்திற்குச் சென்ற மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக தலைவர் வை.கோபால்சாமி, தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் ஆகியோரும் விமான நிலையத்திற்குள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டது.

தமிழக அரசின் இச் செயற்பாடு கண்டனத்துக்குரியது என வை.கோபாலசாமியும் பழ. நெடுமாறனும் தெரிவித்தனர். இச் செயலைக் கண்டித்துச் சென்னையில் எதிர்வரும் 23 ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும் என வை.கோபாலசாமி அறிவித்துள்ளார்.

இதனிடையே கடந்த 13 ஆம் திகதி தமிழகம் சென்ற சிவாஜிலிங்கம் தமிழக அரசினால் சென்னை விமான நிலையத்தில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தற்போதைய தமிழக முதல்வர் கருணாநிதி தலைமையிலான தமிழக அரசு ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசுக்கு இணையான வன்முறைகளைப் பிரயோகித்து வருவது மிகுந்த வேதனையானது என தமிழக அரசியல் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். இச் செயற்பாட்டையும் அவர்கள் கண்டித்துள்ளனர். (ச-5,9)

## வடக்கில் பௌத்தமத மரபு...

டிக்கை எடுக்க வேண்டும். முன்பு தமிழ் மக்கள் விகாரைகளிலேயே தமது வழிபாடுகளை மேற்கொண்டனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் ஜாதிக ஹெல உறுமயவினால் முன்னெடுக்கப்படும் ஆய்வுகள் தொடர்பாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தெளிவுபடுத்துகையிலேயே எல்லாவல மேதானந்த தேரர் மேற்கண் டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில், கடந்த மூன்று தசாப்த காலமாக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களைப் புலிகள் ஆக்கிரமித்திருந்தனர். இக் காலப் பகுதியில் அப் பிரதேசங்களுக்கு இலங்கை அரசின் பிரதிநிதிகளாலோ அல்லது வேறு ஏனைய தரப்பினராலோ செல்ல முடியாமல் இருந்தது.

ஆனால் தற்போது உள்நாட்டு யுத்தம் முடிபடைந்துள்ள நிலையில் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களுக்குச் சுதந்திரமாகச் செல்லக் கூடிய சூழல் காணப்படுகின்றது.

புலிகளின் ஆக்கிரமிப்பு காலப் பகுதியில் வடக்குக் கிழக்கில் அழிக்கப்பட்டவை ஏராளம். அவை தொடர்பாக ஆய்வுகள் மேற்கொண்ட போது பலமுக்கியதகவல்கள் தெரியவந்துள்ளன.

குறிப்பாக வடக்கில் மன்னார், அடம்பன், பூநகரி, புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி, நந்திக் கடல், துணுக்காய், அம்பகாமம் மற்றும் மல்லாவி ஆகிய பிரதேசங்களில் நாம் மேற்கொண்ட தொல்பொருள் ஆய்வுகள் மூலம் பௌத்த பாரம்பரியம் காணப்பட்டதற்கான பௌதிகத் தடயங்கள் கிடைத்துள்ளன.

பௌத்த விகாரைகளைப் புலிகள் அழித்துள்ளனர். இதற்கான ஆதாரங்கள் எமக்குக் கிடைத்துள்ளன.

இலங்கையில் தமிழ் மன்னர்கள் காணப்பட்டனர். ஆனால் அவர்களுக்கென்று பூர்வீக நிலப்பரப்பு எதுவும் இலங்கையில் காணப்படவில்லை.

பல்வேறு படையெடுப்புக்கள் மூலமான ஆக்கிரமிப்புகளே காணப்பட்டன. புலிகளின் காலத்திலேயே இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிரதேசங்கள் தமிழர்களின் பூர்வீகமாக உரிமை கோரப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் எமது ஆய்வுப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தனது ஆய்வில் கூறியுள்ளார். (ச-5)

## விபத்துச் சம்...

எதிரே வந்த உழவு இயந்திரமும் மோதியே இவ் விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் கரவெட்டியைச் சேர்ந்த ஜெரோன் விமலேஸ் (வயது-24), அல்வாய் கிழக்கைச் சேர்ந்த திருச்செல்வம் சிபோஷன் (வயது-22) ஆகிய இருவருமே படுகாய மடைந்தவர்களாவர். (ச-24)

## தனித்திருந்த யுவதி...

பதற்காக வீட்டில் இருந்தவர்கள்சென்ற நிலையில் தனித்திருந்த யுவதி மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யன்னல் ஓரமாக இருந்து தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தபோது கூரிய ஆயுதங்களால் தலையில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

உறவினர் வீட்டுக்குச் சென்றவர்கள் வீட்டுக்குத் திரும்பிய நிலையில் பிரஸ்தாப யுவதி இரத்த வெள்ளத்தில் மயங்கிய் நிலையில் காணப்பட்டதாகவும் யாழ். போதனா வைத்திய சாலைக்கு எடுத்து வரும் வழியில் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிரஸ்தாப யுவதி அணிந்திருந்த காப்பு மற்றும் வீட்டிலிருந்த நகைகள் அடங்கலாக சுமார் 35 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டிருப்பதாகவும் உயிரிழந்த யுவதியில் சகோதரன் தெரிவித்தார்.

வீட்டிலிருந்த உடைமைகளும் தேடுதல் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக அவர் மேலும் கூறினார். இச் சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச-5,7)

## இலங்கையுட...

நியமிக்கப் பட்டார்.

தற்போது விடுதலைப்புலிகள் அமைப்பு முற்றாக அழிக்கப்பட்ட நிலையில் இரண்டு நாடுகளுக்குமிடையிலான உறவினைப் புதுப்பிப்பதற்கான காலம், அவசியம் ஏற்பட்டுள்ளது என்று நோர்வே கருதுகின்றது.

எரிக் சொல்ஹெய்மிடம் இருந்த பொறுப்புக்கள் அனைத்தும் அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கத்துடனான உறவினை புதுப்பிக்கும் வகையிலேயே இந்த மாற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய அரசியல் மாற்றங்களுக்கு அமைய இரண்டு நாடுகளுக்குமிடையிலான உறவினை மாற்ற வேண்டியுள்ளது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதான காலப் பகுதியில் நோர்வே நாடு புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுவதாகக் கூறி ஆர்ப்பாட்டங்களும் அந் நாட்டின் தேசியக் கொடியும் எரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-9)

## சர்வதேச வர்த்...

ணங்கள் இக் கண்காட்சியில் பங்குபற்றுகின்றன. காலை 10மணிக்கு ஆரம்பமாகும் கண் காட்சி இரவு 7 மணிவரையும் நடைபெறும். இக் கண்காட்சியில் பார்வையாளர்களைக் கவரும் வகையில் தென்னிலங்கை இசைக் குழுவின் இன்னிசை நிகழ்வுகள், களியாட்ட நிகழ்வுகள், பொழுதுபோக்கு அம்சங்கள் என்பனவும் இடம்பெறும். (ச-5)

## தேர்தல் வன்...

ஆரம்பித்துள்ளது.

தேர்தலுக்கு முன்னரும் தேர்தல் நடைபெற்ற அன்றும் அதன் பின்னருமாக இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்தே இக் குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

வாக்காளர்களை வாக்களிக்க விடாமல் தடுத்தமை, அச்சுறுத்தியமை இவற்றை மேற்கொண்டவர்களைக் கண்டறிதல் தொடர்பிலே இவ் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நோயல் சாள்ஸ் தலைமையிலான குழுவே விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. பாடசாலை ஒன்றில் விசாரணைகள் நடைபெற்ற போது 200ற்கும் மேற்பட்டோர் சாட்சியம் அளிக்க வருகை தந்திருந்தனர். சாட்சியமளித் தோரில் சிலர் தாம் வாக்களிக்கச் சென்றபோது பொலிஸார் தடுத்ததாக கூறினார்கள். (ச-9)

வடமராட்சி மண்ணில்
மிகத் தெளிவாகவும் இலகுவான முறையிலும்

கணக்கீடு

A/L-2012 ற்கான புதிய பிரிவு (I)
ஆரம்பம் -19.04.2010

பிரபல ஆசிரியர் → B.Krishnajothy
(B.Com (Hons), Dip.in Edu, M.Ed)

A/L-2011- மேலும் ஓர் பிரிவு (III)
ஆரம்பம் 19.04.2010


A/L-2010- மீட்டல் பிரிவு (II)
ஆரம்பம் 19.04.2010

குறிப்பு: அனைத்து அனுமதிகளையும், நேர சூசியையும் அலுவலகத்தில் பெறவும்.

தொடர்புகளுக்கு:
OXFORD ENGLISH ACADEMY
P.K.Lane Point Pedro
(சி-118)


# மரண அறிவித்தல்

## அமரர் நாகலிங்கம் பரமலிங்கம்



தொல்புரத்தை பிறப்பிடமாகவும் துணைவி சங்கரத்தை வட்டுக் கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பரமலிங்கம் 17.04.2010 (சனிக்கிழமை) நேற்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் செல்வம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் நித்தியலட்சுமி, விஜயலட்சுமி, வரதராசா, நித்தியானந்தன் (கனடா), குலேந்திரராசா (கனடா),அன்னலட்சுமி (ஆசிரியை, தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெகநாதலிங்கம் காலஞ்சென்ற இராசதுரை (போமன்), யுவராணி, சுகித்தா (கனடா), ஜெயந்தி (கனடா), ஸ்கந்தராசா ஆகியோரின் அன்பு மாமனாரும் லக்ஸ்மன் (அண்ணாமலை பல்கலைக்கழகம், இந்தியா), பிரவீனா (பிரான்ஸ்), லீபீசன் (DSMAX COMPANY JAFFNA), கிருஸ்ணியா மிரோஸன் (கனடா), பிரவீன் (கனடா), சாரங்கி (கனடா), பிரியங்கி (கனடா), இராஜகுமார் (பிரான்ஸ்), சிவாஜினி (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 17.04.2010 (சனிக்கிழமை) நேற்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

துணைவி,
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

(1206)


"தேசமே, பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு;
கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்."
வாருங்கள்! கேளுங்கள்!! அனுபவியுங்கள்!!!

வருடாந்த கன்வென்ஷனும் சுவிசேஷ ஆராதனைகளும்

2010 ஏப்ரல் 14 ஆம் திகதி
புதன் மாலை முதல் 18 ஆம் திகதி ஞாயிறு வரை
தினமும் மாலை 5.30 மணிக்கு
இலங்கை பெந்தெகொஸ்தே சபைச்சாலை,
111, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

பிசாசின் பிடி, பாவம், மதுபானம், புகைத்தல், பில்லிசூனியம், கொலை இன்னும் தீய பழக்கவழக்கங்களிலிருந்து இயேசு விடுவிக்கிறார். சமாதானம், சந்தோஷம், பாவமன்னிப்பு தருகிறார்.

இலவச உட்பிரவேசம்!
காணிக்கை சேர்க்கப்படமாட்டாது!!
வியாதியஸ்தருக்காக ஜெபிக்கப்படும்!!!


## ஒவ்வொரு...

மைப்பில் அங்கம் வகிக்கின்ற அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்கும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

அமைச்சரவைக் குறைப்பு விடயம் குறித்துக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

மக்களின் அமோக ஆதரவைப் பெற்றுக் கொண்டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் அடுத்த அமைச்சரவை நிச்சயம் சிறியதாகவே அமையும் என்று நாங்கள் தேர்தல் காலத்தில் கூறி வந்தோம்.

அதற்கேற்ப இம்முறை எமது அரசாங் கத்தின் அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கை குறைவானதாக அமையும் என்பதனைப் பொறுப்புடன் கூறுகின்றோம்.

35 இல் இருந்து 40 வரையான அமைச்சரவை அமைச்சர்களே நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் என்ற வகையில் என்னால் அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையைத் துல்லியமாகக் கூற முடியாது.

ஆனால் அமைச்சர்களின் எண்ணிக்கை குறையும் என்பதை உறுதியாகக் கூற முடியும். மேலும் அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் அரசாங்கத்தின் முயற்சிக்குக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகள் ஆதரவு வழங்கும் என்று முழுமையாக நம்புகின்றோம்.

அதேவேளை பெரும்பாலும் ஒவ்வொரு மாவட்டமும் பிரதிநித்துவப் படுத்தப்படும் வகையில் அமைச்சரவை அமைச்சுப் பதவி ஒன்று வழங்கப்படலாம் என்றார்.(ச-5)


Study in Canada

கனடாவில் அங்கீகாரம் பெற்ற கல்லூரியில் சகல கற்கை நெறிகளுக்குமான புதிய விசா நடைமுறைகளிற்கு அமைய Student Visa Process செய்து தரப்படும்.

canadore college

அக் கல்லூரிகளால் சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஆசிரியர் ஒருவரினால் ஆலோசனை வழங்கப்படுகின்றன.

After O/L, A/L Pass

2010ற்கான பதிவுகளை தற்போது மேற்கொள்ள முடியும். அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்.

SAI Institute of Computer Studies
Colombo & Jaffna

Raj 077 2479436
Aikan 077 8445952
(1203)

HAPPY NEW YEAR
GREAT NEWS TO ALL.
Who are interested in
Imagination & Creativity



I am COMING.....
First time in Srilanka
(In Jaffna)

The world is but
a canvas to the imagination!

We Help You to Imagine & Fuel Your Creative Appetite!

siat
ACADEMY
A unit of SIAT GROUP
BANGALORE - INDIA

புது வருடத்துடன் ஓர் புதிய வாய்ப்பு
இந்தியாவின் 'சிலிக்கன் சிற்றி' பெங்களூர் மாநிலத்திலிருந்து
SIAT ACADEMY யாழ்நகர் வருகை.
கற்பனை வளம் ஆக்கத்திறன் ஆர்வலர்களா?
உங்களுக்கான கற்கைநெறி, பயிற்சி முறைமை, சிறப்புத் தேர்ச்சி, தொழில் வாய்ப்புக்கான அரிய வாய்ப்பு
ANIMATION FILM MAKING, STUDIO BASED ANIMATION TRAINING
WITH LIVE PROJECT

வயது ஓர் தடையல்ல
படைப்புத்திறன் ஆற்றலே அனிமேஸன் துறையில்
உங்கள் தகமையைத் தீர்மானிக்கும்.
உயர்தர அனிமேஸன் பயிற்சி நெறிக்கு
யாழ்நகரில் உங்கள் வழிகாட்டி
MAG NET Academy (Pvt) Limited
விரைவில் உங்களுக்காக
SIAT ACADEMY உடன் இணைந்து MAG NET ACADEMY
(சி-098)

UNION BANK யூனியன் வங்கி

விரையுங்கள்!
இச் சலுகை சித்திரை 23ஆம் திகதி மட்டுமே (23.04.2010)
ரூ 100000க்கு மேற்பட்ட ஒரு வருட நிரந்தர வைப்புகளுக்கு 10% வட்டி!
அத்துடன் கவர்ச்சிகரமான பரிசுகள்!!
மற்றும் வைப்புக்களுக்கு கவர்ச்சிகரமான வட்டி வீதங்களும் பரிசுகளும்.
சந்தர்ப்பத்தை பயன்படுத்துங்கள்.

62/17, ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.No: 021 2224567-8

புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.
021 2240930-1
(சி-117)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.